REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 பெப்ரவரி 10 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 89 இல. 35 | Wednesday 10, February, 2021 | 20 பக்கங்கள் | 30/-

இலங்கை வரும் பாகிஸ்தான் பிரதமர்;

## இம்ரான்கான் பாராளுமன்றில் விசேட உரையாற்றவுள்ளார்

### ஜனாதிபதி, பிரதமரையும் சந்திப்பார்



இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 06

## பல்கலை மாணவர்களுக்கு சலுகை கொடுப்பனவில் மடிக்கணனிகள்

### ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்



பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு சலுகை கொடுப்பனவு திட்டத்தின் கீழ் மடிக்கணனிகளை வழங்கும் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஆரம்பமானது.

முழு கல்வி முறையையும் தற்காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் டிஜிட்டல் மயமாக்குவதற்கான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்திற்கமைவாக மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை 06

## லீசிங் நிலுவை செலுத்த முடியாது தவிப்போருக்கு புதிய திட்டம் வகுப்பு

### நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த அறிவுறுத்தல்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக செலுத்த முடியாத நிலையிலிருந்த லீசிங் நிலுவைகள் தொடர்பில் முறையான செயற்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வெவ்வேறு நிதி கொள்கையை பின்பற்றாது லீசிங் சலுகைகளை வழங்கும் அனைத்து நிதி நிறுவனங்களும் ஒரே கொள்கையை பின்பற்றுவது அவசியமென்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள பாடசாலை போக்குவரத்து சேவை வாகனங்கள், 06

# ஊடகங்களை தணிக்கை செய்யும் திட்டம் இல்லை



### அரசு சார்பில் அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய அறிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

ஊடக கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக சில அமைப்புகள் பொய்யான வதந்தியை பரப்பி வருகின்றன. ஊடகங்களுக்கு சில கொள்கை கட்டமைப்பொன்றை கொண்டு வந்து ஊடகவியலாளர்களின் பெறுமதியை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ஊடகத்துறை அமைச்சர் கொஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று நடைபெற்றது. அமைச்சு முன்னெடுக்க இருக்கும் ஊடக கொள்கை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

ஊடக விபச்சாரத்தில் ஈடுபடும் சிறு குழுவினர் ஊடகத்தை தவறாக பிரயோகிக்கின்றனர்.

சில தரப்பினர் திட்டமிட்ட முறையில் இது தொடர்பில் பொய்யான பீதியை பரப்பி வருகின்றனர். அவ்வாறு எதுவும் கிடையாது. அதற்கு இடமளிக்கவும் மாட்டோம். ஊடகவியலாளர்களுக்கு கூறுவது மக்கள் மத்தியில் 06

## நாடு முழுவதும் 15ஆம் திகதி முதல் அனைத்து பாடசாலைகளும் திறப்பு

### கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



**லோரனஸ் செல்வநாயகம்**

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் 15ஆம் திகதி திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் அனைத்து வகுப்பு மாணவர்களுக்காக திறக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் நேற்று தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தலுக்கு முடக்கப்பட்டுள்ள பொலிஸ் நிர்வாகப் பிரதேச பாடசாலைகள் 06

## ரூ.1,000 சம்பள அதிகரிப்புடன் கூட்டு ஒப்பந்த சலுகைகள் சகலதும் கிடைக்கும்

### எதிரணியின் பொய்ப் பிரசாரங்கள் தவிடுபொடி





**லோரன்ஸ் செல்வநாயகம்**

தோட்டத் தொழிலாளர்களின் நீண்டகால எதிர்பார்ப்பான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு விடயத்தில் நாம் வெற்றி கண்டுள்ளதுடன் கூட்டு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட மாட்டாதென இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்புடன் கூட்டு ஒப்பந்தத்தில் வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் தோட்டத் 06

## விளையாட்டுத் துறையை நவீன மயப்படுத்த புதிய சட்டம்

### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கையில் விளையாட்டுத்துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் புதிய சட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அதனை நடைமுறைக்கு கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 06

போர்க்குற்றம் எனும் பெயரில் ஜெனீவா நகர்வுகள்;

## அரசை நெருக்கடிக்குள் தள்ளவே நடைபவனி



**இவற்றை அரசாங்கம் கருத்திற் கொள்ளாது**

போர்க் குற்றங்கள் என்ற பெயரில் அரசாங்கத்தைத் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் நோக்கிலேயே ஜெனீவா நகர்வுகள் நடைபெற்று வருவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் உதய கம்மன்பில நேற்றுத் தெரிவித்துள்ளார். ஆனால், இவற்றை அரசாங்கம் கருத்தில் கொள்ளப்போவதில்லையென்றும் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை;

## பிரதி ஒன்றை வழங்க பேராயர் கோரிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையின் பிரதியொன்றை தமக்கு வழங்குமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் கோரிக்கை 06

பொத்துவில் – பொலிகண்டி பேரணியில் பங்கேற்றோர்

## பருத்தித்துறை நீதிமன்றத்திலும் பொலிஸார் வழக்கு தாக்கல்

### 'A' தடையுத்தரவை மீறியதாக 'B' அறிக்கை



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் அரசியல் பிரதி நிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றத்திலும் 03 பொலிஸ் நிலையங்களால் 'B' அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

விபரம் 11ம் பக்கம்...

## உயிருக்கு அச்சுறுத்தல் என STF பாதுகாப்பு கோரியவர் ஆர்ப்பாட்டத்தில்

### நானே அந்த பாதுகாப்பை நீக்கினேன்



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுக்கான விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு தனது உத்தரவின் பேரில் நீக்கப்பட்டதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி விசேட அதிரடிப் படை பாதுகாப்பை பெற்றுக்கொண்ட சுமந்திரன், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த நிலையிலேயே அவருக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டதாக சரத் வீரசேகர தெரிவித்தார். 06

STF பாதுகாப்பு நான் கேட்கவில்லை

## எனக்கு ஏதாவது ஒன்று நடந்தால் அரசே பொறுப்புக்கூற வேண்டும்



### சுமந்திரன் சபையில் தெரிவிப்பு

**சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணிக்குப் பின்னர் எனக்கு 06

## KKS சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்திகள் ஆரம்பிக்க திட்டம்

### அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

**பாவனைக்கு உதவாத பொருட்களை அகற்ற திட்டம்**

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்திக்கான திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய கைத்தொழில் அமைச்சு ஆரம்ப திட்டத்தை தயாரித்துள்ளது. இதுதொடர்பாக கைத்தொழில் அமைச்சர் (08) அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 06

## கொரோனா தொடர்பான தகவல்களை மூடி மறைக்கும் தேவை அரசுக்கில்லை

### ஹேஷா விதானகே MPயின் கேள்விக்கு சுதர்ஷனி பதில்



**சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொரோனா தொடர்பாக எந்தத் தகவல்களையும் அரசாங்கம் மறைக்கவில்லை. அவ்வாறு தகவல்களை மூடி மறைக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லையென கொரோனா தடுப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். 06

ஈஸ்டர் தாக்குதல் தகவல்கள்;

## விரைவுபடுத்துமாறு IGPக்கு சட்ட மாஅதிபர் பணிப்புரை

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றவியல் விசாரணை அறிக்கை மற்றும் தகவல்கள் முழுமையானவை அல்ல என குறிப்பிட்டுள்ள சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு தாமதமின்றி தகவல்களை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மாஅதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சட்ட மாஅதிபரின் ஒருங்கிணைப்பு செயலாளர் சட்டத்தரணி நிசாரா ஜயரத்ன இந்த தகவலை தெரிவித்தார். அதேவேளை பாரிய குற்றங்கள் மற்றும் 06

உயிர்த்த ஞாயிறு அறிக்கை குறித்து

## அமைச்சரவையில் விசேட கலந்துரையாடலுக்கு தினம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு அறிக்கை தொடர்பில் கலந்துரையாட விசேட தினமொன்று 06

சமூக வலைத்தளங்கள் ஊடாக

## காதலர் தின களியாட்ட நிகழ்வுகளுக்கு தடைவிதிப்பு



காதலர் தினத்திற்காக சமூக வலைத்தளங்கள் ஊடாக சட்டவிரோத விருந்துபசாரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். கடந்த தினங்களில் பதிவான கொவிட் தொற்றாளர்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளும் போது விருந்துபசாரங்கள் மற்றும் திருமண வைபங்கள் ஊடாக 06

'ஒரே நாடு ஒரே சட்டம்' கொள்கை

## முஸ்லிம் விவாக சட்டம் தொடர்பில் நிலைப்பாடு என்ன?

### அலி சப்ரியிடம் கேள்வி தொடுத்த அதுரலிய



**சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைய முஸ்லிம் விவாகச் சட்டம் தொடர்பாக 06

**விக்கல் வீராச்சாமி**



நடக்காது என்ட 1000 ரூபா சம்பள பிரச்சினைக்கு வெற்றி கண்டாச்சு, இனி 50 ரூபா பெற்றுத்தர முடியாத நம்ம மலையக எதிரணியினர் என்ன செய்யப் போகினம்...

இது பிழை என்டு நோண்டுவினம் இல்லாட்டி இன்னொரு பிரச்சினையை கிளப்பி, அவைபிண்ட பொழுது எப்படியாவது போயிடும்...!!!

# சர்வதேச செய்திகள்

### தென்கொரிய தலைநகரில்

## நாய், பூனைகளிடமும் கொவிட்–19 சோதனை



தென் கொரிய தலைநகரில் நோய் அறிகுறிகள் இருந்தால் செல்லப்பிராணிகளான பூனை மற்றும் நாய்கள் மீதும் கொரோனா தொற்று பரிசோதனை நடத்தப்படும் என்று அந்த மாநகர அரசு தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் விலங்கு ஒன்றிடம் கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டு ஒரு சில வாரங்களிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வைரஸ் தொற்றுக்கு உள்ளான நபரின் செல்லப்பிராணியிடம் காய்ச்சல் அல்லது மூச்சு விடுவதற்கு சிரமப்படுவது போன்ற அறிகுறிகள் இருந்தால் மாத்திரம் அவை சோதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்லப்பிராணிக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டால் அது வீட்டில் தனிமைப்படுத்தப்படல் வேண்டும்.

மனிதர்கள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு இடையே கொவிட்–19 பரவுவதற்கான ஆதாரம் இல்லாததால் செல்லப்பிராணிகளை தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று நோய்த் தடுப்பு அதிகாரி ஒருவரான பார்க் யூ மி செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

தென்கிழக்கு நகரான ஜின்ஜுவின் மதஸ்தானம் ஒன்றில் வளர்ந்த பூனை ஒன்றிடம் தொற்று இருப்பது கடந்த மாத ஆரம்பத்தில் உறுதி செய்யப்பட்டது.

## வூஹானில் நிபுணர் குழு விசாரணைகள் நிறைவு

கொரோனா வைரஸ் சீனாவின் வூஹான் நகரில் எவ்வாறு பரவ ஆரம்பித்தது என்பது குறித்து உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் நடத்திய ஒரு மாத கால விசாரணை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த 4 வாரங்களாக அவர்கள் சீன அதிகாரிகளுடன் நெருக்கமாக பணியாற்றி வந்தனர். இரு தரப்பும் இணைந்து நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இந்த விசாரணை பற்றி விளக்கினார்கள்.

விசாரணைக் காலம் முழுவதும், தொடர்ந்து ஒத்துழைப்புத் தந்த சீனாவை உலக சுகாதார அமைப்பு பாராட்டியது.

சம்பந்தப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிடுவதற்கும், சம்பந்தப்பட்ட நபர்களைச் சந்திப்பதற்கும் சீனா முழு அனுமதி வழங்கியதை அது சுட்டிக்காட்டியது.

அந்த விசாரணை நடவடிக்கை இரு தரப்புக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தியதாக சீனா குறிப்பிட்டது.

இந்த நிபுணர் குழுவில் விலங்கு மருத்துவர், வைரஸ் தொடர்பான நிபுணர்கள், உணவுப் பாதுகாப்பு தொடர்பான நிபுணர்கள் மற்றும் தொற்றுநோயியலாளர்கள் உட்பட 14 பேர் உள்ளடங்குகின்றனர்.



## மியன்மாருடனான உறவை துண்டித்தது நியூஸிலாந்து

நியூஸிலாந்து, மியன்மாருடனான அனைத்து அரசாங்க, அதிகாரபூர்வ உறவையும் தற்காலிகமாகத் துண்டித்துக் கொள்வதாக அந்நாட்டுப் பிரதமர் ஜசிண்டா ஆர்டன் கூறியுள்ளார்.

மியன்மாரின் இராணுவத் தலைவர்கள் மீது பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் அந்நாட்டு இராணுவம் கடந்த வாரம் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தியதை அடுத்து, நியூஸிலாந்து இந்த முடிவுகளை எடுத்துள்ளது.

நியூஸிலாந்தின் உதவித் திட்டங்கள் எதுவும் மியன்மார் இராணுவத்துக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்காதபடி பார்த்துக் கொள்ளப்படும் என ஆர்டன் தெரிவித்தார்.



மியன்மார் நிலை குறித்து ஐ.நா மனித உரிமை பேரவை சிறப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவும் அவர் அழைப்பு விடுத்தார்.

2018ஆம் ஆண்டுக்கும் 2021ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், நியூஸிலாந்து மியன்மாருக்கு அளித்த உதவித் திட்டத்தின் மதிப்பு சுமார் 30 மில்லியன் டொலர் என்று அவர் குறிப்பிட்டார். இதற்கிடையில், நியூஸிலாந்து, மியன்மாரின் இராணுவ அரசாங்கத்தை அங்கீகரிக்காது என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் நானாயா மஹூடா தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை உடனடியாக விடுவிக்கும்படியும் அவர் வலியுறுத்தினார்.

## டிரம்ப் மீதான செனட் விசாரணை அரம்பம்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் இரண்டாவது நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான செனட் சபை விசாரணை நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த விசாரணையை விரைவுபடுத்த அந்த சபை இணங்கியுள்ளது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் ஜனவரி 6ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்திற்கு முன்னர் தனது ஆதரவாளர்களிடம் உரையாற்றிய டிரம்ப், கிளர்ச்சியை தூண்டியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அவர் குற்றவாளி என்பதற்கான போதிய ஆதாரங்கள் இருப்பதாக ஜனநாயகக் கட்சியினர் கூறியபோதும், கலகக்காரர்கள் சுதந்திரமாகவே செயற்பட்டிருப்பதாக டிரம்பை காத்துப் பேசும் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விசாரணை சட்டவிரோதமானது என்று டிரம்ப் தரப்பு கூறி வருகிறது. எனவே இதன் சட்டத் தன்மை குறித்தே அவர்கள் நேற்று வாதிட்டுள்ளனர்.

அமெரிக்க வரலாற்றில் இரு தடவைகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்ட முதல் ஜனாதிபதியாக டிரம்ப் உள்ளார். எனினும் இதுவரை எந்த அமெரிக்க ஜனாதிபதி மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவெற்றப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இதில் டிரம்ப் குற்றங்காணப்பட்டால் அவர் மீண்டும் அரச பதவி ஒன்றை வகிப்பது தடை விதிக்கப்படும். எனினும் இது நிறைவேற்றப்பட 100 ஆசனங்களைக் கொண்ட செனட் சபையில் மூன்றில் இரண்டு ஆதரவு தேவையாக உள்ளது. தற்போது ஜனநாயகக் கட்சியினர் 50 இடங்களை பெற்றிருப்பதோடு இதற்கு குடியரசுக் கட்சியினரின் ஆதரவு குறைவாகவே உள்ளது.

விசாரணைக்கு முன்னர் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்றில், டிரம்ப் ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறி தற்போது ஒரு தனி குடிமகனாக இருப்பதால் இந்த விசாரணை சட்டவிரோதமானது என்று டிரம்பின் வழக்கறிஞர்கள் வாதிட்டுள்ளனர்.

## இராணுவத்தின் தடையை மீறி மியன்மாரில் ஆர்ப்பாட்டங்கள்

மியன்மாரில் பாரிய அளவில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட்டபோதும் வீதிகளில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்துள்ளனர். யங்கோன் மற்றும் மண்டலேய் நகரங்களில் ஊரடங்கு உத்தரவுடன் ஐந்துக்கும் அதிகமானவர்கள் ஒன்று கூடுவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

மியன்மாரில் ஆங் சான் சூச்சியின் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசை பதவி கவிழ்த்த இராணுவத்திற்கு எதிராக கடந்த மூன்று நாட்களாக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச ஊடகம் கடந்த திங்கட்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதேவேளை, மியன்மாரில் புதிய தேர்தல் நடத்தப்படும், அதன் பின்னர் அதிகாரம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்று அந்நாட்டு இராணுவத் தளபதி மின் ஆங் லைன் உறுதி அளித்துள்ளார். ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின் முதல்முறையாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், உணர்வுகளுக்கு இடம்கொடுக்காமல் பொதுமக்கள் தகவல்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கூறினார்.




புதிய தேர்தல் எப்போது நடைபெறும் என்று அவர் குறிப்பிடவில்லை. எனினும், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்ட தேர்தலில் மோசடி நடந்தது என்று அவர் கூறினார்.

இராணுவ விதிமுறைகள் இம்முறை வேறுபடும் என்றும் இராணுவத் தலைவர் உறுதியளித்தார்.

ஆங் சான் சூச்சியின் கைது பற்றியோ, அவரை விடுவிப்பது பற்றியோ மின் ஏதும் தெரிவிக்கவில்லை.

எனினும் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மியன்மாரில் தீவிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சில நாட்கள் இடைவெளியில் 3 விண்கலங்கள் செவ்வாயில்



கடந்த ஆண்டு பூமியில் இருந்து 11 நாள் இடைவெளியில் புறப்பட்ட அமெரிக்கா, சீனா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் விண்கலங்கள் இந்த மாதம் செவ்வாய் கிரகத்தில் தமது இலக்குகளை அடையவுள்ளன.

இந்த ஆளில்லா விண்கலங்கள் மூலம் செவ்வாய் கிரகத்தின் மர்மங்களை கண்டறிவதற்கு இந்த மூன்று திட்டங்களும் எதிர்பார்த்துள்ளன.

மறுபுறம் புதிய புவியியல் அரசியல் விண்வெளிப் பேட்டியில் செவ்வாய் கிரகம் முக்கிய புள்ளியாக மாறி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் முதல் திட்டமாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் விண்கலம் நேற்று செவ்வாய் கிரகத்தை அடையவிருந்தது. இது அந்த வளைகுடா நாட்டின் விண்வெளி ஆய்வில் புதிய மைல்கல்லாக அமையவுள்ளது.

அல் அமர் என்ற அந்த விண்கலம் செவ்வாயில் ஓர் ஆண்டு காலத்திற்கு நிகரான 687 நாட்கள் செலவிட்டு அந்த கிரகத்தின் வளிமண்டலம் மற்றும் காலநிலை பற்றி ஆய்வுகளை நடத்தும்.

தொடர்ந்து சீனாவின் விண்கலம் பெப்ரவரி 10ஆம் திகதி செவ்வாயை அடையவிருப்பதோடு பத்து நாட்கள் கழித்து அமெரிக்க விண்கலம் செவ்வாயை அடையும்.

## மொரோக்கோவில் தொழிற்சாலை வெள்ளத்தில் மூழ்கி 24 பேர் பலி

மொரோக்கொவில் சட்டவிரோதமாக இயங்கிவந்த நிலத்தடி புடவைத் தொழிற்சாலை ஒன்றில் கடும் மழையால் நீர் நிரம்பியத்தில் 24இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். டங்கீர் நகரில் இருக்கும் வீடொன்றின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் இந்தத் தொழிற்சாலையில் இருந்து மேலும் 10 பேர் மீட்கப்பட்டுள்ளனர். வெள்ள நீர் நிரம்பும்போது அந்தக் கட்டடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெரியவில்லை. கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட இந்த அனர்த்தத்தை அடுத்து தொடர்ந்து மீட்பாளர்கள் அங்கு தேடுதலில் ஈடுபட்டு வருவதோடு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது வெள்ள நீர் அந்தக் கட்டடத்தை மூழ்கடிக்கச் செய்திருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இதில் 20 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களே உயிரிழந்துள்ளனர். அண்மைய வாரங்களில் மொரோக்கோவில் கடும் மழை பெய்து வருகிறது. தடைப்பட்ட அல்லது மோசமாக பராமரிக்கப்படும் வடிகான்கள் காரணமாக நகரங்களில் வெள்ளம் மோசமாக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## சீனாவில் 4ஆவது ஆண்டாக பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி

சீனாவில் 2019ஆம் ஆண்டின் பிறப்பு விகிதத்தை விட கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளது.



பல ஆண்டுகளாக ஒரு தம்பதியினருக்கு ஒரு குழந்தை என்ற விதிமுறை சீனாவில் இருந்து வந்தது.

அந்நாட்டில் விரைவில் முதிர்ச்சி அடைந்து வரும் மக்கள் தொகை, குறைந்து வரும் ஊழியர் எண்ணிக்கை ஆகியவற்றைத் தவிர்க்க 2016ஆம் ஆண்டில் அந்த விதிமுறை மாற்றப்பட்டது. இருப்பினும், அந்த மாற்றத்தினால் பெருமளவில் பிறப்பு விகிதம் அதிகரிக்கவில்லை.

சீனாவில் நான்காம் ஆண்டாகப் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. கல்லுளரி செல்வதற்கான பரீட்சை எழுதுவோர் எண்ணிக்கையை விட கடந்த ஆண்டு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை குறைவானது எனச் சிலர் தங்கள் ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்தனர். இக்காலத்துப் பெண்கள் பிள்ளை பெற்றுக்கொள்வதைத் தள்ளிப் போடுகிறார்கள் எனக் கூறப்பட்டது. இளம் தம்பதியினர், அதிகரித்துவரும் செலவுகள், குடும்பங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய திட்டங்களின் பற்றாக்குறை ஆகியவற்றைக் குறைகூறுகின்றனர்.

## அமெரிக்காவில் நீர் வழங்கலில் நஞ்சு கலக்க ஊடுருவி முயற்சி

அமெரிக்காவின் பிளோரிடா நகர நீர் கட்டமைப்பை அணுகி உள்ள அமெரிக்க கணினி ஊடுருவி ஒருவர் அதில் பெரும் அளவிலான அபாகரமான இரசாயனத்தை கலக்க முற்பட்டிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.



அந்த ஊடுருவி சிறிது நேரத்திற்குள் நீர் சுத்திகரிப்பு அமைப்பில் கணிசமான சோடியம் ஹைட்ரோசைட் இரசாயனத்தை கலந்த நிலையில் ஊழியர்கள் அதனை கண்டறிந்து தடுத்துள்ளனர். இந்த இரசாயனம் நீரில் சிறிய அளவில் கலக்கப்படுகின்றபோதும் பெரிய அளவில் கலந்தால் ஆபத்து விளைவிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இந்த இணைய ஊடுருவி அமெரிக்காவிற்குள் அல்லது வெளியில் இருந்து செயற்படுகிறார் என்பது தெரியாதுள்ளது. இந்த நீர் சுத்திகரிப்பு அமைப்பின் கணினி கட்டுப்பாட்டகம் கடந்த வெள்ளிக்கிழமை தானாக இயக்கப்பட்டுள்ளது.

இந்த நீர் விநியோக நிறுவனம் ஊடாக சுமார் 15,000 குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு நீர் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் திருமண சட்டத்தால் முஸ்லிம் பெண்களுக்கு பாரிய அநீதி

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



முஸ்லிம் திருமணச் சட்டத்தால் முஸ்லிம் பெண்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக முஸ்லிம் பெண்களே எம்மிடம் முறைப்பாடுகளை முன்வைப்பதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோப்புள்ளே தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ரதன தேரரால் 27/2 கீழ் முஸ்லிம் சட்டங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியை தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டில் 18 வயது வரையான சிறுவர்கள் அனைவரினதும் கல்வி உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். சர்வதேச சிறுவர் உரிமை பிரகடனத்தில் நாம் கையெழுத்திட்டுள்ளோம். 06

## பால் பண்ணையாளர்களுக்கு

# ரூ.10 இலட்சம் வரை கடன் அதிகரிக்குமாறு பிரதமர் பணிப்பு

பால் பண்ணையாளர்களுக்கென வரவு, செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்த 05 இலட்சம் ரூபாய் கடன் தொகையை 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்குமாறு நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (08) அறிவுறுத்தினார்.

வரவு, செலவுத்திட்ட முன்மொழிவிற்கமைய செயற்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பொதுமக்களுக்கான நிவாரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நிதி அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தின் போதே பிரதமர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அதற்கமைய எதிர்வரும் வாரம் முதல் பால் பண்ணையாளர்களுக்கு அவர்களது அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கு 04 வீத வட்டிக்கு 10 இலட்சம் ரூபாய் வரை கடன் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். வரவு செலவுத்திட்ட முன்மொழிவிற்கமைய தற்போது செயற்படுத்தப்படும் கடன் நிவாரணம் 06



# ஜனாதிபதி ஆணைக்குழு செயலாளராக சிவஞானசோதி



சுயாதீன மனித உரிமை தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் செயலாளராக முன்னாள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் அமைக்கப்பட்ட மனித உரிமை தொடர்பான ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து அரசாங்க கொள்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளின் செயலாளராக கடமையாற்றிய வே. சிவஞானசோதி இந்த ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் உள்ளடங்கலாக 3 உறுப்பினர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீயினால் சேதமடைந்த வத்தளை ஆலய நிர்மாண பணிகளுக்கு ரூ.10 இலட்சம் நிதி



## முதற்கட்டமாக பிரதமர் மஹிந்த வழங்கினார்

**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**

திடீர் தீ விபத்து காரணமாக சேதமடைந்த வத்தளை ஹேகித்த கோவில் கட்டட நிர்மாணத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கமைய முதற்கட்ட நிதியாக பத்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க தீயினால் சேதமடைந்த 06

## அமைச்சர் கப்ராலுடன் பேச்சு;

# பஸ் வேலைநிறுத்த போராட்டம் இரத்து

## பஸ் உரிமையாளர் சங்க தலைவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று முதல் மேற்கொள்ளவிருந்த தனியார் பஸ் வேலை நிறுத்தப்போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமது கோரிக்கைகள் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுடன்நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து தற்காலிகமாக ஒரு வார காலத்துக்கு தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒத்திவைக்கத் தீர்மானித்ததாகவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்னிட்டு பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று முதல் வேலை நிறுத்தப்போராட்டமொன்றை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருந்தனர். எனினும் அது தொடர்பில் நேற்று நிதி இராஜாங்க அமைச்சர் அவர்களை அழைத்து வழங்கியுள்ள வாக்குறுதிக்கிணங்க ஒரு வார 06

## அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு

# பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன நியமனம்



பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் காவிந்த ஹேஷான் ஜயவர்த்தன அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினராகவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே இராஜினாமா செய்தமையினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (09) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

# கருணா அம்மானுக்கு எதிரான மனு மீளப் பெறப்பட்டது



தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் என்ற விநாயகமூர்த்தி முரளிதரன், கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் தெரிவித்திருந்த கருத்தொன்றிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு, மீளப்பெறப்பட்டதையடுத்து செல்லுபடியற்றதாக்கப்பட்டது.

தாம் பல இராணுவத்தினரை கொலை செய்திருப்பதாக கடந்த பொதுத்தேர்தல் பிரசார காலத்தில் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கோரி, கடுவலை நகரசபை உறுப்பினர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு 03 பேர் கொண்ட நீதியரசர்கள் குழாமினால் நேற்று விசாரணைக்கு எடுத்துக் 06

# எமக்கிடையில் குரோதம் இருக்கும் வரை முன்னோக்கி செல்ல முடியாது



## இலங்கையர் என்ற பற்று, மற்றவர் மீதான நம்பிக்கை வேண்டும்

**ஷம்ஸ் பாஹிம்**

நாடு என்ற ரீதியில் நீண்ட பயணம் செல்வதற்கு எமக்கிடையே சகோதரத்துவமும் இலங்கையர் என்ற பற்றும் மற்றவர் மீதான நம்பிக்கையும் ஏற்பட வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். நாட்டின் தேசிய ஒற்றுமையை குழப்ப தனிநபர்களுக்கோ குழுக்களுக்கோ இடமளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

களுத்துறை, கட்டுகுருந்த சுமனாராம விகாரை கட்டட திறப்பு விழாவில் 06

## கொரோனா வைரஸ் தொற்று;

# நோயாளர் எண்ணிக்கை 70,806 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தை கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் 571 வைரஸ் தொற்று நோயாளிகள் புதிதாக இனம் காணப்பட்டுள்ள நிலையில் நாட்டில் மொத்த வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 70,806 ஆக அதிகரித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் மேலும் 912 வைரஸ் தொற்று நோயாளிகள் பூரணமாக குணமடைந்துள்ள நிலையில் குணமடைந்துள்ள மொத்த வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, மேலும் 9 வைரஸ் தொற்று நோயாளிகள் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ள நிலையில் வைரஸ் தொற்று காரணமாக மரணமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 365 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் நேற்றைய தினம் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டின் முதலாவது பொலிஸ் உத்தியோகத்தர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## தொழிலாளர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

# இல்லாமல் செய்யப்படுமா இருந்தால் அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

சம்பள நிர்ணய சபையின் ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளத்தை வழங்கும் தீர்மானத்தால் பெருந்தோட்ட கம்பனிகளினால் தொழிலாளர்களுக்கான சிறப்புச் சலுகைகள் இல்லாமல் செய்யப்படுமாக இருந்தால் அதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காதென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தொழில் அமைச்சின் கீழுள்ள ஊழியர் சகாய நிதியியல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஆட்சிக்கு வரும் போது கூட்டு ஒப்பந்தம் இருந்தது. கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அது செயற்பாட்டில் இருந்தது. அதில் அரசாங்கம் தலையீடு செய்ய முடியாது என்பதனால் நாங்கள் மாற்று வழிக்கு செல்ல வேண்டியிருந்தது. அதனால் அந்த 06

# விபத்துக்குள்ளாகி தீப்பற்றிய கார் குருநாகலில் மின் கம்பத்துடன் மோதல்

குருணாகல் ரம்புக்கன பிரதான வீதியில் கட்டுபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு காரொன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகமாக வந்த கார் வீதியைவிட்டு விலகி அங்கிருந்த அதி சக்தி வாய்ந்த மின் கம்பமொன்றில் மோதி திடீரென தீப்பிடித்துள்ளதாக 06



# அரசு 'கொரோனா' தொடர்பான உண்மைகளை மறைக்கிறது

**சம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கொவிட் தொற்று தொடர்பான உண்மைத் தகவல்களை அரசாங்கம் மூடி மறைப்பதுடன் நோயாளர்களின் எண்ணிக்கை குறித்து பொய்யான தகவல்கள் கூறப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கொவிட் தொற்று நிலைமை தொடர்பாக வழங்கப்படும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை. மரணங்கள் மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கைகள் தொடர்பாகவும், சிகிச்சைப் பெற்று வரும் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் கூறுவதும் பொய்யாகும்.

நாளாந்தம் சுமார் 800 பேர் வரையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

# பிரதமர் மஹிந்த தலைமைத்துவத்திலிருந்து விலக வேண்டுமென்று கூறவில்லை

## மன்னிப்பு கேட்கக் கோரும் கருத்திற்கு அமைச்சர் விமல் பதில்

தம்மை நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோருமாறு பொதுஜன பெரமுன தரப்பில் விடுக்கப்படும் அறிவிப்புக்கு அமைச்சர் விமல் வீரவங்ச நேற்று பதில் வழங்கியுள்ளார்.

நீர்கொழும்பு நீதிமன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் ஆஜரான அவரிடம் இது பற்றி வினவப்பட்டது. ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

2015 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு ஏற்பட்டதன் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக நுகேகொடையில் பெப்ரவரி 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பேரணிக்கு தலைமை தாங்கியவர்களில் ஒருவராக செயற்பட்டமை தவறு என்றால், பொதுமக்களிடம் தான் மன்னிப்பு கோருவதாக அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.



அதேபோல கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வேண்டும் என கூறி, அதனை யதார்த்தமாக்கி வெற்றி பெற செய்தமை தவறென்றால் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க நான் தயார் எனவும் கூறினார். கூட்டமைப்பில் காணப்படும் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 147.80 | 152.76 |
| சிங்கப்பூர் டொலர் | 144.19 | 148.33 |
| கனடியன் டொலர் | 150.11 | 155.70 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.93 | 271.26 |
| யூரோ | 231.12 | 237.99 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| ஜப்பான் யென் | 1.8260 | 1.8775 |
| அமெரிக்க டொலர் | 192.57 | 196.81 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 515.53 | கட்டார் ரியால் | 53.36 |
| குவைத் டினார் | 641.86 | சவூதி ரியால் | 51.81 |
| ஓமான் ரியால் | 504.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 52.91 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் தை மாதம் 28ம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ஜுமாதல் ஆகிறாஃ பிறை 27

## குறள் தரும் சிந்தனை



புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூற்றும் ஆக்கத் தரும்

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர் வாழ்தலை விட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல், அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரிக்கையில் முக்கியதொரு தீர்மானம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாட் சம்பளம் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் முக்கிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நேற்றுமுன்தினம் கூடிய சம்பள நிர்ணய சபையே இத்தீர்மானத்தை எடுத்திருக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா நாட் சம்பளக் கோரிக்கை தொடர்பில் பெருந்தோட்டக் கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் துரைமார் சம்மேளனப் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அரச பிரதிநிதிகள் என முத்தரப்பு பேச்சுவார்த்தை சம்பள நிர்ணய சபையில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு துரைமார் சம்மேளனப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவிக்காத நிலையில், இந்த யோசனை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவ்வாக்கெடுப்பில் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய 8 பிரதிநிதிகளும், அரசாங்க பிரதிநிதிகள் மூவருமாக 11 பேர் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக 900.00 ரூபாவும், வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவாக 100.00 ரூபாவும் வழங்கும் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால் துரைமார் சம்மேளனப் பிரதிநிதிகள் 08 பேரும் அந்த யோசனைக்கு எதிராக வாக்களித்தனர்.

இதன் ஊடாக ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கும் யோசனை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை அறிவிக்க இரு வார கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆட்சேபனைகள் கிடைக்கப் பெறுமாயின் அவை தொடர்பில் ஆராய்ந்து இரு வாரங்களில் இச்சம்பள அதிகரிப்பு தீர்மானம் குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை விடயத்தில் முக்கியத்துவம் மிக்க தீர்மானமாகும். அதனால் இந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களித்த அரச பிரதிநிதிகளுக்கும், இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நன்றி தெரிவித்திருக்கின்றார்.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கையை இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் கடந்த ஆட்சிக் காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் முன்வைத்தனர். இதன் நிமித்தம் பலவிதமான தொழிற்சங்க நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். இவர்களது கோரிக்கைக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு மற்றும் தலைநகரிலும் கூட ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இருந்தும் அவ்வாட்சியாளர்கள் அவர்களது கோரிக்கைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களது சம்பள உயர்வுக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அன்றைய பிரதமர் முன்னிலையில் துரைமார் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அமையவில்லை.

அதனால் அந்த ஒப்பந்தத்தின்படி குறைவடையும் ரூபா 50.00 ஐ வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகப் பெற்றுத் தருவதாக அவ்வாட்சியாளர்கள் வாக்குறுதியளித்தனர். ஆனால் அந்த ஆட்சி பதவியில் இருக்கும் வரையும் இத்தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கை நியாயபூர்வமாகத் தீர்த்து வைக்கப்படவே இல்லை.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற தெளிவான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றனர். அந்த அடிப்படையில் ஜனாதிபதி பதவியேற்றது முதல் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகையை நிறைவேற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இருந்தும் துரைமார் சம்மேளனம் தொழிலாளர்களின் இக்கோரிக்கையை நிறைவேற்றுவதில் பின்னடித்தே வந்தது. இந்நிலையில் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கூடிய சம்பள நிர்ணய சபை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர்ந்தும் நீடிப்பதற்கு இடமளிக்காத வகையில் முக்கியத்துவம் மிக்க இத்தீர்மானத்தை எடுத்திருக்கின்றது.

ஆகவே இத்தொழிலாளர்களின் கோரிக்கையை துரைமார் சம்மேளனம் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ஏனெனில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு சுமார் மூன்று வருடங்களாகி விட்டது. வருடங்கள் கடந்துள்ள போதிலும் அவர்கள் முன்வைத்த கோரிக்கை தொகை அதே அளவில் தான் உள்ளது. ஆனால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது இருந்த அதேயளவில் ரூபாவின் பெறுமதி இப்போதுஇல்லை. அதனால் இவை அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்தி துரைமார் சம்மேளனம் செயற்படுவதே உசிதமானது.

editor.tkn@lakehouse.lk

# வைத்தியத் துறையில் புரட்சிகர சிந்தனைகள் கொண்ட டொக்டர் நெவில் பெர்னாண்டோ



தென்னிலங்கையில் பாணந்துறை மற்றும் அயல் பிரதேச மக்களின் அன்பையும் நல்லெண்ணத்தையும் வென்றவராகவும், சாந்தமான சுபாவம் கொண்டவராகவும் பாணந்துறை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் டொக்டர் நெவில் பெர்ணான்டோ விளங்குகின்றார். அவர் பிரபல தனியார் வைத்தியசாலையொன்றின் தலைவர் மாத்திரமன்றி, மக்கள் மனம் வென்ற சிறந்த மக்கள் சேவகராகவும் திகழ்ந்தார்.

கொழும்புக்கு வெளியே தெற்கில் காலி வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள தனியான ஒரேயொரு பெண்கள் மற்றும் மகப்பேற்று மருத்துவமனையின் முன்னோடி அவராவார். பாணந்துறை மக்களின் மனதில் மறக்க முடியாத இடம் பிடித்த அன்னார் தனது 89 ஆவது வயதில் கடந்த பெப்ரவரி நான்காம் திகதி காலமானார்.

பாணந்துறை சுமங்கல கல்லூரியின் கீர்த்திமிகு பழைய மாணவரான இவர், அரசாங்க வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய பின்னர் தனியார் மருத்துவ சேவையில் ஈடுபட்டார். இவர் நோயாளிகளுக்கு மனிதநேய நெறியில் சிகிச்சையளித்தார். பிரதேச மக்களுக்கு இலவசமாக மருத்துவ சேவைகளையும் வழங்கியுள்ளார். இவர் சாதாரண மக்களின் துன்பம், வறுமை தொடர்பில் கரிசனை கொண்ட நேர்மையான பிரஜையாக விளங்கினார். சிறந்த குணாதிசயம் மற்றும் மனிதநேய பண்பாடுகள் காரணமாக மக்களின் பாசத்தை பெற்றுக் கொண்டார்.

1977 இல் இவர் பாணந்துறை தொகுதியில் ஐ.தே.க சார்பில் களமிறங்கினார். இலங்கையின் பிரபல இடதுசாரி அரசியல்வாதிகளில் ஒருவரான மறைந்த முன்னாள் போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி குணவர்த்தனவுடன் முதல் அரசியல் பலப்பரீட்சையில் இறங்கிய டொக்டர் நெவில் பெர்னாண்டோ, பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார்.

இவர் 1977முதல் 1989 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். பாணந்துறை றோயல் வித்தியாலயம், அகமெதி பாலிகா வித்தியாலயம் உள்ளிட்டவை இவரது பணிகளின் அடையாளங்களாகும். பாணந்துறை நகரப் பகுதியில் மோதரவில சேற்றுப் பகுதியை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து சிறந்த கைத்தொழில் பேட்டையாக உருவாக்கியமை அன்னாரது பிரதான சேவைகளில் ஒன்றாகும். இன்று ஆயிரக்கணக்காணவர்கள் இங்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

அப்போதைய எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மறைந்த அ. அமிர்தலிங்கம் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட விடயம் தொடர்பில் மறைந்த ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் இவருக்கு கருத்து மோதல் ஏற்பட்டது. இதனால் இவரின் அரசியல் பயணத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. திசைமாறல்களும் நிகழ்ந்தன. ஆனாலும் தொகுதி மக்களின் ஆசியுடன் வெற்றி கண்டார். பின்னர் நாட்டில் அறிமுகமான மாவட்ட விருப்பு வாக்கு தேர்தல் முறையில் விருப்பம் காணாத அன்னார், அரசியல் பாதையைக் கைவிட்டு வர்த்தக மற்றும் வைத்திய அபிவிருத்தித் துறைகளின் பக்கம் திரும்பினார்.

1989ஆம் ஆண்டு நாட்டில் ஜே.வி.பி போராட்டம் இடம்பெற்ற காலமாகும். அன்னாரின் பாணந்துறை இல்லத்தில் 1989 இல் இடம்பெற்ற தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பியதுடன், அவரது பிரபல ஆதரவாளர்கள் பலர் உயிரிழந்தனர்.

இவற்றைக் கண்டு மனம் தளராத டொக்டர் நெவில் பெர்னாண்டோ, 1995 காலப் பகுதியில் இலங்கையில் பிரபல அச்சக தொழில்துறையை ஆரம்பித்து தேசத்தின் கைத்தொழில் துறைக்கு உந்துசக்தியாக விளங்கியதுடன், ஆயிரக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொடுத்தார்.

வைத்தியத்துறை சேவையின் பக்கம் மீண்டும் திரும்பிய அவர், கொழும்பு ஆஷா சென்ரல் வைத்தியசாலையை கொள்வனவு செய்து பாரிய தனியார் வைத்தியசாலைப் பணியை ஆரம்பித்தார். இந்த வைத்தியசாலையை முறையாக அபிவிருத்தி செய்து மக்களுக்கான தனியார் வைத்திய பணியைத் தொடர்ந்தார்.

வெளிநாட்டுக்குச் செல்லும் பணம் மற்றும் அறிவுசார் வளங்களை தேசத்துக்குள் முடக்கும் நோக்கில் பிரபல ஆஷா சென்றல் வைத்தியசாலையை விற்பனை செய்து விட்டு பல்வகை கல்விக்கான தனியார் பல்கலைக்கழகமொன்றை மாலபேயில் ஆரம்பித்தார். இதுதான் பெயர் பெற்றதும், நாட்டில் பாரிய கருத்தாடல்களுக்கும் சர்ச்சைகளுக்குள்ளானதுமான சைற்றம் தனியார் பல்கலைக்கழகமாகும்.


அங்கு வைத்தியம், பொறியியல், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட மற்றும் பல துறைகளில் பட்டப்படிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் தொடர்புபட்ட பாரிய நிறுவனமொன்றாகவும் அது விளங்கியது.

மேலும் ஆயிரம் படுக்கைகளுடன் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையையும் அப்பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் நிர்மாணித்தார். இன்று இந்த வைத்தியசாலை அரசுடைமையாக மாறியுள்ளது.

சிரேஷ்ட மக்கள் சேவகர்களின் இறுதிப் பயணத்தைக் கூட முறையான கௌரவத்துடன் நிறைவேற்ற முடியாத நிலைமை கொரோனாவினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளமை துரதிருஷ்டவசமானதாகும்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

# ராஜ்யசபாவில் கண்கலங்கிய பிரதமர் நரேந்திர மோடி





ராஜ்யசபா உறுப்பினர் பதவிக் காலம் நிறைவடையும் குலாம் நபி ஆசாசாத்துக்கான பிரிவுபசாரத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக காணப்பட்டார்.

"குலாம் நபி ஆசாத் போன்ற ஒருவரின் இடத்தை இன்னொருவரால் எப்படி நிரப்ப முடியும் என்று நான் கவலை அடைகிறேன். தனது கட்சியை பற்றி மட்டும் இல்லாமல், ஒட்டுமொத்த நாடு பற்றியும் அவர் எப்போதுமே சிந்திப்பார்.

கொரோனா நோய் பரவல் காலகட்டம் தொடங்கியபோது, நாடாளுமன்ற அவையைச் சேர்ந்த அனைத்து கட்சி தலைவர்களுடன் நான் சந்திப்பு நிகழ்த்தினேன். அப்போது, பிற அனைத்து கட்சி தலைவர்களையும் அழைத்து பேச வேண்டும் என்று குலாம் நபி ஆசாத் எனக்கு யோசனை சொன்னார். அவர் யோசனையை நானும் பின்பற்றினேன்.

நான் சில வருடங்களுக்கு முன்பு நாடாளுமன்றம் வந்த போது, தீவிர அரசியலில் இல்லை. அப்போது நானும் குலாம் நபி ஆசாத்தும் நாடாளுமன்ற மாடம் பகுதியில் பேசிக் கொண்டு இருப்போம். பத்திரிகையாளர்களுக்கு இதைப் பார்த்து மிகவும் ஆர்வம் அதிகரிக்கும். அப்போது பத்திரிகையாளர்களிடம் குலாம்நபி ஆசாத் சரியான ஒரு பதிலைச் சொன்னார். ரி.விகளில் நாங்கள் ஒருவருக்கொருவர் வாதம் செய்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள், ஆனால் இந்த நாடாளுமன்ற கட்டிடம் உள்ளே வந்துவிட்டால் நாங்கள் அனைவரும் ஒன்றுதான் என்று தெரிவித்திருந்தார்.

நாங்கள் எப்போதுமே மிகவும் நெருக்கமானவர்கள். நாங்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளாத ஒரு சந்தர்ப்பம் கூட கிடையாது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் குஜராத் மாநில சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதில் 8 பேர் கொல்லப்பட்டனர். அப்போது குலாம்நபி ஆசாத்திடமிருந்துதான் முதல் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த சம்பவம் பற்றி தெரிவிப்பதற்காக இல்லாமல், ஒரு குடும்ப உறுப்பினர் போல அவர் பேசினார். தொலைபேசியில் பேசிய போது அவரது கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. இரவு, மறுபடியும் குலாம்நபி ஆசாத் எனக்கு தொலைபேசியில் அழைத்து பேசினார்".

இவ்வாறு ராஜ்யசபாவில் நரேந்திர மோடி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

எதிர்வரும் 15ம் திகதி குலாம் நபி ஆசாத் மற்றும் நஜீர் அகமது லாவே ஆகியோரின் ராஜ்யசபா உறுப்பினர் பதவிக் காலம் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.கவை சசிகலா கைப்பற்றுவது பகல் கனவு

## அரசியல் நோக்கர்கள் கூறுகின்ற காரணங்கள்



அ.ம.மு.க தொடங்கப்பட்டதே அ.தி.மு.கவை மீட்டெடுக்கதான். எங்களைப் பொறுத்தவரை எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் எங்களுக்கு எதிரி அல்ல. எங்களுக்கு ஒரே பொது எதிரி தி.மு.கதான் என்று கூறுகின்றார் டி.டி.வி. தினகரன்.

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் இவ்வேளையில் தினகரனின் இப்பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் அ.தி.மு.கவை சசிகலா கைப்பற்றுவது இனிமேல் பகல் கனவு என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

அ.ம.மு.க பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் சென்னை திநகரில் உள்ள இல்லத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், "கட்சியின் பொதுச் செயலாளரை பார்க்க வந்த நிர்வாகிகளை நீக்குவது என்பது விந்தையாக உள்ளது. உண்மைக்காக போராடுபவர்கள் நிச்சயம் எங்களுடன் தான் வருவார்கள்" என்றார்.

"அ.ம.மு.க தொடங்கப்பட்டதே அ.தி.மு.கவை மீட்கத்தான். அ.தி.மு.கவை மீட்ட பின்னர் ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ் ஆகிய இருவரும் அ.தி.மு.க.வில் தொடர்வார்களா என்பது குறித்து பேசுவோம். ஜெயலலிதாவின் தொண்டர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என சசிகலா கூறுகிறார். புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.

பொறுத்திருந்து பாருங்கள். ஜெயலலிதாவின் நினைவிடம், அ.தி.மு.க தலைமை அலுவலகம் செல்வது குறித்து சசிகலா முடிவு செய்வார் என்று தினகரன் மேலும் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் கட்சிதான் சசிகலாவுக்கு நிரந்தரம் என்று அரசியல் வட்டாரத்தில் உள்ள பலரும் தெரிவிக்கிறார்கள்.

"அ.தி.மு.கவை அவர் கைப்பற்ற முடியாது. அ.தி.மு.கவில் இருந்து சசிகலா ஆதரவாளர்கள் அவர் பக்கம் சாய்ந்தால் கூட, எடப்பாடி பழனிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோரை விட்டு கட்சி நழுவாது என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்கிறார்கள் அவர்கள்.

தமிழகத்தில் இன்னும் சில மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் சசிகலா தமிழகம் வந்துள்ளார். எனவே உடனடியாக இவரால் அ.தி.மு.கவில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தி விட முடியாது.

2016ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலின் போது ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் இணைந்துதான் அ.தி.மு.க வேட்பாளர்களை தெரிவு செய்து இருந்தனர். தற்போது வெற்றி பெற்றுள்ள அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் சுமார் 70 சதவீதம் பேர், சசிகலா தேர்ந்தெடுத்த வேட்பாளர்களாகத்தான் இருக்க முடியும். ஒரு வருடத்துக்கு முன்பாக சசிகலாவிடுதலையாகி அரசியலில் கால் வைத்திருந்தால், அவருக்கு ஆதரவாக சில எம்.எல்.ஏக்கள் அவர் பக்கம் சென்றிருக்கக் கூடும். இதன் மூலம் கட்சிக்கும் ஆட்சிக்கும் பிரச்சினை ஏற்பட்டிருக்கக் கூடும். இப்போது நிலைமை அப்படி இல்லை" என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர்தான் வேட்பாளர்களை தெரிவு செய்ய உள்ளனர். அவர்கள் அனைவரும் இவர்களின் விசுவாசிகளாகதான் இருப்பார்கள். ஏற்கனவே சசிகலா விசுவாசிகளுக்கு பழையபடி ஆசனம் கிடைப்பது ரொம்ப கஷ்டம்.

மேற்கு மண்டலம் பகுதியில் எடப்பாடி பழனிசாமிக்கு தனித்த செல்வாக்கு இருக்கிறது. தங்களின் மண்ணின் மகன் என்று அந்த மக்கள் அவரைப் பார்க்கிறார்கள்.பன்னீர்செல்வம் தேனி மற்றும் சில தென் மாவட்டங்ககளில் செல்வாக்கு மிக்கவர். இது போன்ற சில மண்டலங்களை மொத்தமாக குறிவைத்து அ.தி.மு.க வேட்பாளர்கள் வெற்றி பெற்றால் போதும். ஆளுங்கட்சியாக வர முடிகிறதோ இல்லையோ, எதிர்க்கட்சியாக வந்தால் கூட, கட்சி எடப்பாடி பழனிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். ஏனெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய எம்.எல்.ஏக்கள் அனைவருமே இவர்களின் ஆதரவாளர்களாக இருப்பார்கள்.

ஒருவேளை ஆளுங்கட்சியாக வந்து விட்டாலும் கூட, இவர்கள் ஆதரவாளர்கள்தான் எம்.எல்.ஏக்கள் என்பதால் ஆட்சிக்கும் பிரச்சினை கிடையாது, கட்சிக்கும் பிரச்சினை கிடையாது. சசிகலா குறித்த அச்சமே அ.தி.மு.கவுக்கு போய் விடும். எதிர்க்கட்சியாக வந்தால் கட்சி கட்டுப்பாட்டிலிருக்கும்.ஆளும் கட்சியாக வந்தால் ஆட்சியும், கட்சியும் முழு கட்டுப்பாட்டில் இருக்கும். சசிகலா பற்றி எந்த அச்சமும் அ.தி.மு.கவுக்கு தேவையே இல்லை. திமுக, அ.ம.மு.க ஆகிய கட்சிகள் எதிர்த்து நின்றாலும் அ.தி.மு.கவினால் இடைத் தேர்தல்களில் வென்று ஆட்சியை தக்க வைக்க முடியும்.

எனவே அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் கட்சியை வலுப்படுத்துவது அல்லது அ.தி.மு.கவுடன் சுமுகமாக செல்வதுதான் சசிகலாவுக்கு உகந்ததாக இருக்க முடியும். ஒரே வழியாக இருக்க முடியும். அதிரடி காட்டுவது என்பது நடக்காத காரியம்".

இவ்வாறு அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

# தோட்ட தொழிலாளரை எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாது!

**தோட்டத் தொழிலாளர்கள் என்றால் வெறும் கொழுந்துக் கூடையும், கவ்வாத்துக் கத்தியும் மட்டும்தான் என முதலாளிமாரும், விசேடமாக தொழிற்சங்கங்களும் தவறாக எடை போட்டு விடக் கூடாது. தோட்டத் தொழிலாளர்களின் விடயங்கள் தொடர்பாக வீட்டுத் திண்ணையில் அமர்ந்து விமர்ச்சிக்கும் அறிவாளிகள் தோட்ட லயக்காம்பிராக்களில் இருக்கின்றனர்.**

நம்முடைய தொழிற்சங்கத்தில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கின்றார்கள் என்பது கூட தெரியாத தொழிற்சங்கங்களும் இருக்கின்றன.

தொழிற்சங்கங்கள் சிலவற்றின் பலவீனத்தை தோட்டக் கம்பனிகள் நன்றாகவே தெரிந்து வைத்துக் கொண்டுள்ளன. தொழிலாளர்களின் சம்பளத்தை தீர்மானிப்பது தாங்கள்தான் என்று கம்பனிகள் கூறுவது அதனால்தான்.

கூட்டு ஒப்பந்தத்தை ஒருமுறை ஆராய்ந்தால் பல விடயங்கள் தெரியவரும். 2003ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் நலன்புரி திட்டங்கள், சுகாதாரம், குடியிருப்பு, வேலை நாள் குறைப்பு தொடர்பாக பல நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



இந்த கம்பெனிகள் அதில் ஒன்றையாவது செய்துள்ளனவா என்று கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. கடைசி காலத்தில் தொழிலாளர்களுக்கு கைகொடுப்பது ஊழியர் சேமலாபநிதியும், நம்பிக்கை நிதியமும்தான்.

அதற்கும் பாதிப்பை ஏற்படுத்த தொழிற் சங்கங்கள் துணை போகக் கூடாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவதை ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏகமானதாக ஆதரிக்கின்றனர்.

ஆனால் கம்பனிக்காரர்கள் மட்டும்தான் மறுத்து வந்தனர்.

சம்பள உயர்வு தாமதத்துக்கு காரணம் கூட்டு ஒப்பந்தம்தான்.

**இரா.புத்திரசிகாமணி...**

# கலைஞரின் வாரிசுகள் மூவரும் ஒன்றாக இணைகின்றனரா?

**தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பின்னர் அக்கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலியில் மு.க. அழகிரி பெயர் இடம்பெற்றிருக்கிறது. தி.மு.க தலைவர் ஸ்டாலின், தி.மு.க மகளிர் அணி செயலாளர் கனிமொழி ஆகியோர் அண்மைக் காலமாக மு.க. அழகிரி குறித்து வெளிப்படையாக பேசுவது சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டமா? என்கிற கேள்வியை எழுப்பியுள்ளது.**

2014ம் ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு சற்று முன்னதாக அழகிரிக்கும் மு.க.ஸ்டாலினுக்கும் இடையேயான மோதல் உச்சகட்டத்தை எட்டியது. இதையடுத்து மு.க. அழகிரியை தி.மு.கவில் இருந்து அறவே நீக்குவதாக மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருணாநிதி மறைவு வரை அழகிரியை தி.மு.கவில் சேர்க்கவில்லை. கருணாநிதி மறைவுக்குப் பின்னர் தி.மு.கவில் தம்மை இணைத்துக் கொள்வதற்கான பகீரத முயற்சிகளை அழகிரி தரப்பு மேற்கொண்டது. ஆனால் தி.மு.க தலைமை இதற்கு இடம் தரவில்லை.

பல்வேறு கட்ட சமாதான முயற்சிகளை கருணாநிதி குடும்பத்தினரும் மேற்கொண்டனர். ஆனாலும் எந்த ஒரு முயற்சியும் பலன்தராத நிலையில், சட்டசபைத் தேர்தல் நெருங்கி விட்டது. இப்போது தனிக்கட்சி தொடங்கும் முடிவில் இருக்கிறார் அழகிரி. இப்படி அழகிரியை தனித்து விடுவதன் மூலம் தி.மு.கவின் வாக்குகள் சில தொகுதிகளில் சிதறலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு ஸ்டாலின் பேட்டி அளித்திருந்தார். அதில் பிரமுகர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைப் பற்றி சொல்லுங்கள் என ஸ்டாலினிடம் கேட்கப்பட்டிருந்தது. இதில் மு.க. அழகிரி பெயரும் இருந்தது. இதற்கு பதிலளித்த மு.க.ஸ்டாலின், 'என்னுடைய அண்ணன்' எனக் கூறியிருந்தார். ஸ்டாலினின் இந்த பேட்டி நேற்றைய முரசொலியில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அழகிரி பெயர் நீக்கப்படாமல் 'மு.க. அழகிரி என்னுடைய அண்ணன்' என ஸ்டாலின் சொன்னது அப்படியே வந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் கனிமொழி அளித்த பேட்டி ஒன்றிலும் மு.க. அழகிரி குறித்து மு.க.ஸ்டாலின்தான் முடிவு செய்வார் என வெளிப்படையாகவே கூறியிருந்தார். பொதுவாக அழகிரி பெயரை உச்சரிப்பதை தவிர்த்தே வந்தனர் கருணாநிதி குடும்பத்தினர். ஆனால் இப்போது ஸ்டாலினும், கனிமொழியும் அழகிரி பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்கின்றனர்.

முரசொலியில் அழகிரி பெயரும் கூட இடம்பெறுகிறது. இப்படியான வெளிப்படையான பேச்சுகள்தான் சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டமோ? என்கிற கேள்வியை எழுப்புகிறது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

இதேவேளை 'சசிகலா தி.மு.கவின் பி அணி' என்று தமிழக அமைச்சர் ஜெயக்குமார் குற்றம் சாட்டியதற்கு தி.மு.க எம்.பி கனிமொழிபதிலளித்துள்ளார்.

'விடியலை நோக்கி ஸ்டாலின் குரல்'என்ற







தலைப்பில் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தேர்தல் பிரசாரப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதையொட்டி மதுரையில் பல்வேறு பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்ட அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவரிடம் சசிகலா தி.மு.கவின் பி அணி போல செயல்படுகிறார்' என்று தமிழக அமைச்சர் ஜெயக்குமார் கூறியது பற்றி கேட்டதற்கு, "திமுகவிற்கு எந்த பி அணியும் தேவையில்லை" என்று கனிமொழி பதிலளித்தார்.

# கல்முனை மாநகர சபை சாய்ந்தமருதுக்கு ஆற்றிய சேவை 20 மின்குமிழ்கள் மட்டுமே!

**'கோடிக்கணக்கில் வருமான மீட்டும் கல்முனை மாநகரசபைக்கென கழிவுகளை இடுவதற்கு ஒரு மடுவம் இல்லை' என்று வேதனையுடன் கூறுகிறார் மாநகர சபை உறுப்பினர் அசீம். வருமானமீட்டும் சேவைகளை எல்லாம் தனியாருக்கு வழங்கி விடுகிறார்கள். இந்த சேவைகளை எல்லாம் மாநகரசபையினால் ஏன் செய்ய முடியாது? மாநகர சபையினால் வருமானம் ஈட்ட முடியுமல்லவா? என்றும் அசீம் வேதனையுடன் கேள்வி எழுப்பினார். சாய்ந்தமருதுக்கென தனியான நகரசபை அந்தஸ்தைக் கோரி தோடம்பழச் சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிட்ட அணியில் 9பேர் மாநகரசபைக்குத் தெரிவாகியிருந்தனர். அந்த அணிக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியவர் ஏ.ஆர்.எம் அசீம் ஆவார்.**

**கேள்வி: கல்முனை மாநகர சபையில் ஊழல் இடம்பெறுவதாக கூறுகிறீர்கள். அது பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** நாம் அது பற்றி ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையர் வரை எடுத்துக்கூறியுள்ளோம். தரவுகளுடன் கொடுத்திருக்கிறோம். அண்மையில் அ.இ.ம.கா.உறுப்பினர் மனாப் கூட பகிரங்கமாக ஊடகங்களுக்கு கூறியிருந்தார். கோடிக் கணக்கில் வருமானம் பெறக் கூடிய சபை இது. இந்த சபைக்கென ஒரு மடுவம் இல்லை. ஆனால் இம்மடுவங்களை நடத்த தனியாருக்கு 50 இலட்ச ரூபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது போல கழிப்பறைக் கழிவுகளை எடுக்கும் 'கலிசக்கர்' சேவையை தனியாரொருவருக்கு 40 இலட்ச ரூபாவுக்கு வழங்கியுள்ளனர். இந்த சேவைகளையெல்லாம் மாநகரசபை ஏன் செய்ய முடியாது? கடந்தாண்டு மாத்திரம் சாய்ந்தமருதில் 904 காணி உறுதிகள் எழுதப்பட்டன. 1 இலட்சத்திற்கு 3000 ருபா முத்திரைவரி என்றால் எவ்வளவு தொகை வரும்? இந்தப் பணம் எங்கே?

**கேள்வி: இவற்றையெல்லாம் சபையில் கேட்பதில்லையா?**

**பதில்:** ஹன்சாட்டைப் பாருங்கள். நான் மட்டுமல்ல அதிருப்தியுற்ற பல உறுப்பினர்கள் கூறியுள்ளனர். சபையில் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. இவையெல்லாம் ஊடகங்களில் வருவதில்லை. நான் ஒரு தடவை கேட்ட போது அதிருப்தியுடன் பதிலளிக்கப்பட்டது.

**கேள்வி: கல்முனை மாநகரசபைக்கு நீங்கள் சென்ற நோக்கம் நிறைவேறியதா?**

**பதில்:** நாம் உண்மையில் அரசியல் செய்யச் செல்லவில்லை. மேயராக வரவும் ஆசைப்பட்டதில்லை. சாய்ந்தமருதுக்கென தனியான நகரசபை நிருவாகத்தைப் பெற்றெடுப்பதற்கான ஒரு உபாயமாகவே சென்றோம். கல்முனை மாநகரசபை முன்னர் சனத்தொகை குறைவாக இருந்தது. அப்போது சேவைகள் நன்றாக இருந்தன. சனத்தொகை கூடியதும் பல பிரதேசங்களை உள்ளடக்கிய மாநகர பிரதேசத்துக்கு சேவை செய்வது சிரமமாகும். எமது தனிநகரசபைக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அனைவரும் வெறும் வாக்குறுதியளித்தார்களே தவிர எதையுமே செய்யவில்லை. அதனால் அரசியலில் சுயாதீனமாக இறங்க எண்ணி தேர்தலில் ஆதரவு கேட்டோம். 9 பேர் வந்தோம்.



## இனமத, பிரதேச வேறுபாடற்ற சேவையை ஆற்றுவதே முக்கியம் என்று கூறுகின்றார் மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அசீம்

வெட்கமாக இருக்கிறது. இதுவரை காலமும் நாம் அங்கு மக்கள் பிரதிநிதியாக இருந்து பெற்றது ஆக 1520 மின்குமிழ்கள் மாத்திரமே. வேறு ஒன்றுமே தரவில்லை. கோடிக்கணக்கில் வருமானம் வரும் சபையிலிருந்து சாய்ந்தமருதுக்கு ஒரு சதக்காசு கூட ஒதுக்கீடு இடம்பெறவில்லை. நாம் 9 உறுப்பினர்களும் எமது கொடுப்பனவில் மின்விளக்குகளை பொருத்தி வருகிறோம்.

**கேள்வி: கடந்த பட்ஜட் வாக்கெடுப்பில் நீங்கள் தற்போதைய மேயருக்கு எதிராக வாக்களித்தமைக்கான காரணம் என்ன?**

**பதில்:** அங்கு எந்தவொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்படுவதில்லை. ஒதுக்கீடுகளும் சர்வாதிகாரத்தன்மையாக தான் தோன்றித்தனமாகவே நடக்கின்றன. இதன் காரணத்தால் சபையின் தலையெழுத்தை மாற்ற வேண்டுமென்பதற்காக எதிர்த்து வாக்களித்தோம்.

**கேள்வி: தோற்றதற்கான காரணம் என்ன?**

**பதில்:** கூட இருந்து குழி பறித்த காரணத்தால் என்று அடித்துக் கூறுவேன். 26 பேர் எதிர்க் கட்சியாக இருக்கிறோம். எம்முடன் த.தே.கூட்டமைப்பு அ.இ.ம.காங்கிரஸ் அனைவரும் எதிர்த்து வாக்களிப்போம் என்ற முடிவுடன்தான் சென்றோம். அங்கு த.தே.கூட்டமைப்பின் 5 பேரும் அ.இ.ம.காங்கிரசும் காலை வாரி விட்டனர். த.தே.கூட்டமைப்பை நம்பித்தான் கடந்த காலங்களில் ஒன்றாக பயணித்தோம். சமூகத்திற்காகவும் உரிமைக்காகவும் போராடுவோம் என்று கூறி விட்டு 5 பேர் விலகி நின்றனர். தமிழ் மக்களைப் புறக்கணித்து வருவோருக்கு எதிராக ஒருவர் செயற்பட்டிருக்கிறார். அவர் எமக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் துரோகமிழைத்துள்ளார்.

உறுப்பினர்களான ராஜன், சிவலிங்கம் ஆகியோர் சொன்ன சொல்லைக் காப்பாற்றிய மானஸ்தர்கள் என்பேன். இவர்கள்தான் தமிழ் மக்களுக்கான உண்மையான சேவையாளர்கள்.

**கேள்வி: பழிவாங்கல் நடைபெறுவதாகச் சொன்னீர்கள். சாய்ந்தமருதுக்கு குப்பை அள்ள வருகிறார்கள் தானே?**

**பதில்:** வருகிறார்கள். ஒரு வீதிக்கு 14 நாட்களுக்கொரு தடவையே வருகிறார்கள். எனது வீட்டிலேயே 7நாள் குப்பையுள்ளது. சாய்ந்தமருது மக்கள் சபைக்குரிய வரிகள் அனைத்தையும் செலுத்தி வருகிறார்கள். மாகரசபைக்குரிய பிரதான சேவையாகிய திண்மக் கழிவகற்றல் பணியையே இப்படி மோசமாக செய்வது என்றால் பாருங்கள்.

**கேள்வி: அண்மையில் இடம் பெற்ற 34வது அமர்வு பெரும் அமளிதுமளியில் முடிந்திருக்கிறதே...**

**பதில்:** இதுவும் அராஜகத்தின் வெளிப்பாடே ஆகும். செல்வாவிற்காக உறுப்பினர் ராஜன் தொடக்கம் முஸ்லிம் உறுப்பினர்கள் ஆதரவாக குரல் கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்தோம்.

இதனைச் சில தமிழ் உறுப்பினர்கள் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை எவ்வாறு கூறுவதென்று புரியவில்லை.

**கேள்வி: இறுதியாக என்னதான் சொல்ல வருகிறீர்கள்?**

**பதில்:** இத்தகைய விடயங்களை வெளிக்கொண்டு வரும் தினகரனுக்கு கோடி நன்றிகள். மாநகரசபையிலிருந்து எப்போது சாய்ந்தமருது நகரசபையாக பிரிகிறதோ அன்றுதான் நல்ல காலம் பிறக்கும். இனமத பேதமில்லாத, பிரதேச வேறுபாடு பார்க்காத சேவைகளைச் செய்ய மாநகர சபை முன்வர வேண்டும். இல்லாவிட்டால் அங்கு நடப்பவற்றை ஊடகங்களில் வெளிப்படுத்துவோம்.

நேர்காணல்:
**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

## விளையாட்டுத்,...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்க போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் அமைச்சராகி ஐந்து மாதங்கள்தான் ஆகின்றன. கிரிக்கெட் விளையாட்டு வீழ்ச்சியடைய ஆரம்பித்து 05 வருடங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலப்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இது எவ்வாறாயினும் இறந்தகாலத்தில் நடந்தவை பற்றி பேசி அர்த்தமில்லை. எதிர்காலத்தில் சிறந்த வேலைத்திட்டத்துடன், நாம் பயணிக்க வேண்டும். கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் அரசியல்வாதிகளுக்கு கையளிக்க முடியாது. ஐசிசியின் கட்டுப்பாட்டின் கீழ்தான் அது இயங்குகிறது என்றார்.

## இம்ரான் கான்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயத்தை உறுதிப்படுத்தினார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், எதிர்வரும் 22ஆம் திகதி இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

## பல்கலை மாணவர்களுக்கு...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக மக்கள் வங்கி ரூ. 03 பில்லியனை ஒதுக்கியுள்ளது.

இணைய இணைப்பு, மென்பொருள் பொதி மற்றும் 4 வருட உத்தரவாதத்துடன் மடிக்கணனிகள் வழங்கப்படுகின்றன. ஒரு கணனியின் பெறுமதி 80,000 ரூபாவாகும். தொழிலொன்று கிடைத்த பின்னர் 06 ஆண்டுகளில் மொத்த பெறுமதியை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. மாணவராக இருக்கும் காலத்தில் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை ரூ. 500 ஆகும்.

2021ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நுழைவைப் பெறும் ஆறு புதிய மாணவர்களுக்கு இந்த திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் அதற்கான கடிதங்களை நேற்று (09) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி வழங்கினார்.

## KKS சீமெந்து தொழிற்சாலை...

இதற்கமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்திலுள்ள பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் சீமெந்து உற்பத்திக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு ஆரம்ப திட்டத்தை தயாரித்துள்ளதையடுத்து, இவ் வளாகத்திலுள்ள பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அகற்றி தொழிற்சாலை வளாகத்தை துப்புரவாக்குவதற்கு அவ்விடத்தில் கண்காணிப்புச் சோதனையை நடத்தி பரிந்துரைகள் அடங்கிய தரவு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக ஐவரடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வளாகத்திலுள்ள பயன்பாட்டுக்குதவாத கட்டடங்கள், வடிவமைப்புக்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் இரும்புத்துண்டுகள் மற்றும் வார்ப்புக்கள் போன்றவற்றை அரசாங்க பிரதம விலைமதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், அரசாங்கத்தின் பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அகற்றுவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## லீசிங் நிலுவை...

அலுவலக போக்குவரத்து சேவை வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தொடர்பில் தவணை நிலுவைகளை செலுத்துவதற்கு முறையான திட்டம் ஒன்றை தயாரிக்குமாறே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் சூழ்நிலையிலிருந்து நாடு இயல்பு நிலைக்கு வந்துள்ள நிலையில் வாகன உரிமையாளர்கள் தமது லீசிங் நிலுவைகளை சாதாரண விதத்தில் செலுத்துவதற்கான நிலைமை உருவாகியுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த லீசிங் நிவாரண காலத்தின் நிலுவையையும் சேர்த்து தற்போது வழங்குமாறு லீசிங் நிறுவனங்கள் வாகன உரிமையாளர்களை கோரியுள்ள நிலையில் மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தம்மால் முடியாதென்றும் வாகன உரிமையாளர்கள் நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளனர். (ஸ)

## கொரோனா தொடர்பான...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கொரோனா தொடர்பான தகவல்களை அரசாங்கம் மூடி மறைப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே குறிப்பிட்ட நிலையில் அதற்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். இராஜாங்க அமைச்சர் அதன் போது மேலும் குறிப்பிடுகையில்,

நாங்கள் உண்மையான தகவல்களையே முன்வைக்கின்றோம். தகவல்களை மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை. சிலவேளை, தொற்றுக்குள்ளானோர் 10 நாட்களில் குணமடைந்து வீடு திரும்பலாம். ஒருபக்கத்தில் நோயாளர்கள் வருவதை போன்று மற்றைய பக்கத்தில் குணமடைகின்றனர். இதனால் உண்மைகளை மறைக்கவில்லையென்று தெளிவாகக் கூறிக்கொள்கின்றேன் என்றார்.

## நாடு முழுவதும்...

தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் தற்போதுதிறக்கப்பட்டுள்ள நிலையில் மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை, மாவட்டங்களில் பாடசாலைகள் மீள ஆரம்பிப்பது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகவும் அதற்கிணங்கவே பாடசாலைகள் திறக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களின் அபிவருத்திக் குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அது அனுமிக்ககாக சுகாதரத்துறைஅதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்ததும் எதிர்வரும் 15ஆம் திகதி மேல் மாகாணத்தில் பெருமளவு பாடசாலைகள் மீள ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ)

## எனக்கு ஏதாவது ஒன்று...

வழங்கப்பட்டிருந்த விசேடப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. விசேடப் பாதுகாப்பு வேண்டுமென நான் எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. எனக்கு ஏதாவது ஒன்று நடந்தால் அதற்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தொழில் அமைச்சின் கீழுள்ள ஊழியர் சகாய நிதியியல் சட்டத்தின் கீழா ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'வாழ்க்கைச் செலவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொழிலாளரக்ளுக்கு 02 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்கியிருக்க வேண்டும். எனினும் வாக்குறுதியளிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுக்கூட தொழிலாளர்களுக்கு இதுவரையில் வழங்கப்படவில்லை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எமதுப் போராட்டத்தில், தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுக் கோரிக்கையும் எமது 10 கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையலான தொடர்ப் போராட்டத்துக்குப் பிறகு எனக்கு வழங்கப்பட்டிருந்த விசேடப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. எனக்கு விசேடப் பாதுகாப்பு வேண்டுமென நான் எந்தவிதமானக் கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை.

## ஊடகங்களை...

ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஊடகவியலாளர்களுக்கு பெறுமதியை வழங்கவே இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. ஒருதலைப்பட்சமாக எதுவும் மேற்கொள்ளவில்லை.

சகல தரப்பினரதும் கருத்துக்களை பெற சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கலந்துரையாடி கருத்துக்களை பெற்று அடிப்படை கொள்கையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமது கருத்துக்களை முன்வைக்குமாறு அழைப்பு விடுக்கிறோம். சிலர் ஊடகங்கள் குறித்து கீழ்த்தரமாக பேசி வருகின்றனர்.

மக்களின் உரிமைகளை பாதுகாப்பதும் அமைச்சின் பொறுப்பாகும். மக்களுக்கு பாதகமான ஏதும் நடப்பதாக மக்கள் குற்றஞ்சாட்டினால் அது குறித்தும் கவனிக்க வேண்டும்.

ஊடகங்களுக்கு கௌரவம் ,பொறுப்பு மற்றும் நம்பகத்தன்மை ஏற்படுத்தவும் இதனூடாக வாய்ப்பு ஏற்படும் என்றார். (பா)

## ரூ.1,000 சம்பள...

தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுமென தெரிவித்த அவர், கூட்டு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதாக எதிர்க்கட்சிகளே பிரசாரம் செய்து வருவதாகவும் அவ்வாறு எந்த முடிவும் கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சேபனைகளை வழங்குவதற்காக 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனையடுத்து 1,000 ரூபா சம்பள உயர்வு தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தமானி வெளியிடப்படும் தினத்திலிருந்து சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பிலுள்ள இ.தொ.கா. தலைமையகமான சௌமிய பவனில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பிரதமரின் மாவட்ட இணைப்புச் செயலாளரும் இதொகாவின் உப தலைவருமான செந்தில் தொண்டமானும் கலந்து கொண்டு விளக்கமளித்தார். (ஸ)

## விபத்துக்குள்ளாகி தீப்பற்றிய... 03ஆம் பக்க தொடர்...

சம்பவத்தை கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தால் கார் முற்றிலுமாக எரிந்துள்ளதுடன், மின் கம்பமும் கடுமையாக சேதமடைந்துள்ளது.

இந்த விபத்து நிகழ்ந்த நேரத்தில் மூன்று பேர் காருக்குள்ளிருந்ததாகவும் அவர்கள் மது போதையில் வாகனத்தை செலுத்தியுள்ளதாகவும் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

அவர்களில் இருவரை பொத்துஹெர பொலிஸார் கைது செய்துள்ளனர். மற்றைய சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடி விட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எமக்கிடையில் குரோதம்... 03ஆம் பக்க தொடர்...

உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

சகோதரத்துவத்துடன் இலங்கையர் என்று பற்றுடனும் வாழ்வதற்கு புத்த மதத்தில் இருந்து சிறந்த வழிகாட்டல்களை பெற முடியும். எமக்கிடையிலாக கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி ஒவ்வொருவரினதும் மதம் மற்றும் கலாச்சாரங்களை மதித்து வாழ வேண்டும். நாடு என்ற ரீதியில் பல வெற்றிகளை ஈட்டுவதற்கு எமக்கிடையிலான கருத்துவேறுபாடுகளை ஒதுக்கி செயற்பட வேண்மும்.

இலங்கையில் காணப்படும் நல்லிணக்கம் தொடர்பில் பெறுமைப்படுவதாகவும் குறிப்பிட்டார். ஒவ்வொருவருக்குமிடையில் குரோதம் இருக்கும் வரை முன்னோக்க செல்ல முடியாது. 2009 இல் முஸ்லிம் சமூகத்தை சேந்த தவறாக வழிநடத்தப்பட்ட குழு மேற்கொண்ட தாக்குதல் குறித்த ஆணைக்குழு அறிக்கையூடாக பல விடயங்கள் அம்பலமாக இருக்கிறது.நமக்கிடையில் ஒற்றுமை இல்லாதிருப்பது பயங்கரவாதிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் வாய்ப்பாக அமையும் என்றும் அவர் கூறினார்.

## ரூ.10 இலட்சம் வரை கடன்... 03ஆம் பக்க தொடர்...

தொடர்பில் இச்சந்திப்பின் போது நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல விளக்கமளித்தார்.

அதன்படி, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீட்டுக் கடனை பெற்றுக் கொண்ட மற்றும் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை 7 சதவீத வட்டி விகிதத்தில் செயற்படுத்தப்படும்.

இந்த சலுகையின் அடிப்படையில் ஒரு அரசு ஊழியரின் மாதச் சம்பள உயர்வு ரூபாய் 2,5003,000 ஆகக் காணப்படும் என்று எஸ்.ஆர்.ஆட்டிகல்ல சுட்டிக்காட்டினார்.

அரச மற்றும் அரச சாரா ஊழியர்களின் கூரைகளில் சோலார் பேனல்களை நிறுவுவதற்கு தற்போது 04 வீத வட்டி விகிதத்தில் 08 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படுகின்றன. இந்த பருவத்தில் நெல் கொள்வனவிற்கு சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார்.

அதன்படி, நெல் கொள்வனவு செய்வதற்கான கடன் வழங்கும் நடவடிக்கையை விரைவுபடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தினார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் செயற்படுத்தப்படும் மத்திய மாகாண வீட்டுத் திட்டங்களுக்கு 6.25 சதவீத வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட சமுர்த்தி உறுப்பினர்களுக்கு சலுகைக் கடன்களை விரைவாக வழங்குவது குறித்தும் பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டது. வெளிநாட்டு கடன்களில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, அரசாங்கம் இப்போது அந்நிய முதலீட்டில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

இலங்கை சுங்கத்தின் இறக்குமதி பிரிவு ஒன்லைன் (இணைய) தொழில்நுட்பத்துடன் செயற்படுவதாக சுட்டிக்காட்டிய சுங்க பணிப்பாளர் நாயகம் ஜி.வி.ரவிப்ரிய அதன்மூலம் சிக்கல்களைக் குறைக்க கூடியதாக அமைந்ததாக தெரிவித்தார்.

இதற்கிடையில், உள்நாட்டு வருவாய் துறைக்கு ஒன்லைன் முறை மூலம் வரி செலுத்துவது இன்று முதல் செயல்படுத்தப்படுவதுடன், இதற்கு ஐந்து வங்கிகளின் ஒப்புதல் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் பிரதமருக்கு தெரிவித்தனர்.

## அமைச்சரவையில்...

விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கையளிக்கப்பட்டது.இந்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர முன்னர் கூறியிருந்தார்.

## காதலர் தின களியாட்ட...

கொரோனா தொற்று நோய் அதிகளவில் பரவியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொவிட்19 கொத்தணி மற்றும் இணை கொத்தணிகள் உருவாக அதிகளவில் வாய்ப்புள்ளதால் இணையத்தளம் ஊடாக சட்டவிரோத விருந்துபசாரங்களை ஏற்பாடு செய்யும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எதிர்ப்பார்ப்பதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

இதுபோன்று விருந்துகளுக்கு ஹோட்டல் உரிமையாளர்கள் இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டாமென பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## உயிருக்கு அச்சுறுத்தல்...

தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான விசேட செவ்வியில் கருத்து தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மையாகவே சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால், அவர் ஒரு பொது நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கமாட்டாரென்றும் அவர் கூறினார்.

## பிரதி ஒன்றை வழங்க...

விடுக்கப்பட்டுள்ளதாக பேராயரின் ஊடக பேச்சாளர் பேராசிரியர் கமிலஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் அறியப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பஸ் வேலைநிறுத்த போராட்டம்... 03ஆம் பக்க தொடர்...

காலத்துக்கு வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒத்திப்போட்டதாகவும் ஒரு வார காலத்தில தமது பிரச்சி னைக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மாகாண சபை மட்டத்தில் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத் தருமாறு பஸ் உரிமையாளர் சங்கம் நிதி இராஜாங்க அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ)

## முஸ்லிம் திருமண சட்டத்தால்... 03ஆம் பக்க தொடர்...

அதனால் இனம்,மதம்,குல பேதங்கள் கடந்தது அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி கற்றும் சந்தர்த்தை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

பெண்கள் தொடர்பிலான சர்தேச சீடா பிரகடனத்திலும் கையெழுத்திட்டுள்ளோம். அதன் பிரகாரம் பெண்கள் தொடர்பில் இனம், மதம் மற்றும் குல பேதங்கள் பார்க்கக் கூடாது.

ஒரே சட்டத்தின் கீழ் அனைத்து பெண்களுக்கும் தமது உரிமைகளை உறுதிப்படத்த வேண்டுமென்ற கருத்தை முன்வைத்துள்ளோம்.

முஸ்லிம் திருணமச் சட்டத்தால் பெண்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக முஸ்லிம் பெண்கள் எம்மிடம் முறைப்பாடுகளை தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

## இல்லாமல் செய்யப்படுமாக... 03ஆம் பக்க தொடர்...

ஒப்பந்தம் காலாவதியாகும் வரையில் காத்திருந்தோம். தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளவும் கூட்டு ஒப்பந்தத்தில் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை. இதனாலேயே எங்களுக்கு மாற்று வழியில் செல்ல வேண்டி வந்தது.

இதன்படி சம்பள நிர்ணய சபையின் ஊடாக இதற்கு தீர்வு காண்பதே எங்களுக்கு இருந்த ஒரே மாற்று வழியாக இருந்தது.

அதன்படி நடவடிக்கையெடுத்துள்ளோம். இந்நிலையில் தொழிலாளர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள் இல்லாமல் செய்யப்படுமாக இருந்தால் அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். அது தொடர்பாக தேவையான சட்ட திட்டங்களை கொண்டு வருவோம். முதலாளிமார் சம்மேளனத்திற்கு ஏற்றால் போன்று ஆடுவதற்கு நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. நாங்கள் 1,000 ரூபாவை உறுதிப்படுத்திக் காட்டியுள்ளோம்.

அதன்படி மற்றைய விடயங்களையும் செய்வோம். அத்துடன் தொழிலாளர்களின் வேலை நாட்கள் தொடர்பில் பிரச்சினை வராது. தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அதனை தயாரிப்போம் என்றார்.

## பிரதமர் மஹிந்த தலைமை... 03ஆம் பக்க தொடர்...

பெரும் கட்சியான பொதுஜன பெரமுனவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவும் உயர் பதவியில் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே இதனை கூறினேனே தவிர மஹிந்த ராஜபக்ச தலைமைத்துவத்திலிருந்து விலக வேண்டும் என அது பொருள்படாது.

மஹிந்தராஜபக்சதலைவராகசெயற்படும் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கும் கட்சியில் உயர் பதவி ஒன்றை வழங்கினால் தற்போதைய அரசியல் பலம் மேலும் வலுவடையக்கூடும் என்பதோடு, அரசாங்கத்தின் நகர்வு மற்றும் நாட்டிற்கு அது சிறந்ததாக அமையும். வேறு கட்சியில் உள்ளார் என்பதற்காக ஏனைய கட்சிகளை விமர்சிக்க முடியாது என சட்டம் இல்லை என கூறிய அமைச்சர் , அரசியலமைப்பிலும் கருத்து சுதந்திரம் வரையறுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

## விரைவுபடுத்து...

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை மூன்று மாத காலத்திற்குள் நிறைவு செய்யுமாறும் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் அமைச்சரவை விசேட பேச்சுவார்த்தை ஒன்றை விரைவில் மேற்கொள்ளும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

## தீயினால் சேதமடைந்த வத்தளை ஆலய... 03ஆம் பக்க தொடர்...

வத்தளை ஹேகித்த கோவில் கட்டடத்தின் புனர்நிர்மாணத்திற்கு பத்து இலட்சம் ரூபாவை உடனடியாக வழங்கியமைக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றியைத் தெரிவிப்பதாக பிரதமரின் தோட்ட உட்கட்டமைப்பு இணைப்பாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வத்தளை ஹேகித்த கோவில் கட்டடத்தில் மின் ஒழுக்கு காரணமாக பாரிய தீ ஏற்பட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீக்கிரையானதுடன் கட்டிடமும் பலத்த சேதத்திற்குள்ளாகியமை தெரிந்த விடயம்.

இத் தீப்பரவல் கேள்விப்பட்டவுடன் பிரதமருக்கு இது குறித்தான தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. உடனடியாக கவனம் செலுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்னையும் பிரதமரின் இந்து சமய விவகார இணைப்புச் செயலாளர் பாபு சர்மாவையும் சென்று பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். அதற்கமைய அன்றைய தினம் நானும் பாபுசர்மா குருக்களும் இந்து கலாசார திணைக்கள பணிப்பாளருடன் இணைந்து கோவிலை சென்று பார்வையிட்டதுடன் சேதவிபரங்கள் குறித்தும் ஆலய நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்ததுடன் அதனை பிரதமரின் கவனத்திற்கும் கொண்டுசென்று விளக்கினோம்.

இதனை கேட்டறிந்த பிரதமர் சேதமடைந்த கோவில் கட்டிடத்தை புனர்நிர்மானம் செய்யும் வகையில் உடனடியாக முதற்கட்டமாக பத்து இலட்சம் ரூபா நிதியை ஆலய நிர்வாகத்திடம் கையளித்து புனர்நிர்மான வேலைகளை ஆரம்பிக்குமாறு கேட்டிருந்ததுடன் கலாச்சார அமைச்சின் செயலாளருக்கும், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளருக்கும் இது குறித்து அறிவுறுத்தினார்.

இதன்பயனாகவே முதற்கட்டமாக பத்து இலட்சம் ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டது.

## முஸ்லிம் விவாக சட்டம் ...

முன்னெடுக்கவுள்ள நடவடிக்கை என்ன? என்பதை நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் அறிவிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரதன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் நீதி அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரே நாடு ஒரே சட்டம் என்பது பொதுஜன பெரமுனவின் கொள்கைத் திட்டமாகும். இதன்படி இனம், மதங்களை அடிப்படையாக கொண்ட அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பான தனிப்பட்ட சட்டங்களை நீக்கி நாட்டில் ஒரே சட்டத்தின் கீழ் நாட்டை கொண்டு வருவதாக கூறப்பட்டது.

இலங்கையில் சட்டவாட்சியை ஏற்றுக்கொள்ளும் நாடாகும். இங்கு சகலருக்கும் சட்டம் செயற்படுத்தப்படும். இந்நிலையில் முஸ்லிம் விவாக சட்டம் தொடர்பாக உலகில் பல நாடுகளில் இணக்கப்பாடு இல்லை. அதேபோன்று முஸ்லிம் நாடுகள் பலவற்றிலும் இந்த சட்டம் செயற்படுத்தப்படுவதில்லை.

இலங்கையில் 10 வீதமான முஸ்லிம்கள் வாழும் நிலையில், அவர்களின் விவாக மற்றும் விவாகரத்து தொடர்பாக முஸ்லிம் விவாக சட்டம் உள்ளது. காதி நீதிமன்றத்திற்கு நீதி அமைச்சின் ஊடாகவே நீதிபதிகள் நியமிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஏதேனும் தெளிவு உள்ளதா?

முஸ்லிம் ஆண்கள் வேறு மதங்களை சேர்ந்தவர்களை திருமணம் முடிக்கும் போது வேறு மதத்தை சேர்ந்தவர்கள் இஸ்லாமிய மதத்தில் இணைய வேண்டும். இதன்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு காதி நீதிமன்றத்தின் ஊடாகவே தீர்க்க வேண்டியுள்ளது.

## அரசை நெருக்கடிக்குள் ...

தற்போது வடக்கு கிழக்கில் நடைபெற்ற பேரணியும் அரசாங்கத்தை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள் தள்ளும் முயற்சியென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான கடுமையான நிலைப்பாடுகளுக்கு மத்தியில், வடக்கு கிழக்கில் நடைபெற்ற பேரணி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், “நாட்டின் ஆட்சியை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்டதாகவே மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட மனித உரிமைப் பேரவை உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர். அரசாங்கத்தின் ஒருசில துறைகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளமையே இவர்களின் பிரச்சினையாக உள்ளது. ஆனால், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது, தகுதியான இராணுவத்தை உரிய துறைகளில் ஈடுபடுத்திப் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது எவ்விதத்திலும் தவறான நகர்வல்ல.

அதேபோல், இராணுவத் தளபதி சவேந்திர சில்வா போர்க் குற்றவாளியென எங்கேயும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட பலர் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தி அவர்களின் கையாளாகச் செயற்படுவதை இந்த நடவடிக்கைகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

எவ்வாறு இருப்பினும் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எழுத்துமூலம் இந்த அறிவிப்பை அனுப்பியுள்ளோம். எந்தவொரு இடத்திலும் ஆணையாளரின் அறிக்கையை அரசாங்கம் ஆதரிப்பதாகக் கூறுவதற்கு நாம் தயாராக இல்லை.

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KU -8XXX | TATA | NANO | 2012 |
| KY -1XXX | MICRO | PANDA L C 1.0 | 2014 |
| CAV -3XXX | SUZUKI | WAGON R MH44S | 2016 |
| **பஸ்** | | | |
| NC -6XXX | NISSAN DIESEL | JA530RANMJ | 2000 |
| NF -7XXX | TOYOTA | SPG-XZB50 | 2016 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BIH -5XXX | TVS | METRO | 2017 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HX -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JU -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QG -8XXX | BAJAJ | AUTO RE2 STROKE | 2006 |
| QK -0XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| YL -2XXX | BAJAJ | RE 205 | 2011 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 பெப்ரவரி 10ஆம், 11ஆம், 12ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 பெப்ரவரி 15ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

லேக்ஹவுஸ் விளம்பர மத்திய நிலையம்
உங்கள் விளம்பரங்களை எங்கள் மூலம் பிரசுரியுங்கள்

நுகேகொடை
சவ்சிறி சந்தைத் தொகுதி, 4ஆம் மாடி, ஹைலெவல் வீதி, நுகேகொடை
011 282 8114
அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்
இல. 35, டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10
1949

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

DMC SRI LANKA

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

**அனர்த்த முகாமைத்துவத்திற்காக பல ஆபத்து எச்சரிக்கை தகவல் தொடர்புகள் அமைப்பை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக** தீர்வுகளை வழங்குபவர்களிடமிருந்து அவர்களின் விருப்பை தெரிவித்தல் தொடர்பாக **2021.01.24** ஆம் திகதி வாரமஞ்சரி பத்திரிக்கையில் பிரசுரமான விளம்பரம் தொடர்பிலேயாகும்.

குறித்த செயற்பாட்டுடன் தொடர்புடைய **2021.02.05** ஆம் திகதி **பி.ப 02.00** மணிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இடம்பெற்ற தீர்வுகளை வழங்குபவர்களுடனான கூட்டத்தில் கோரப்பட்ட கோரலுக்கு அமைய ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான இறுதித்திகதி **2021 மார்ச் 01** திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் படி ஆர்வத்தை வெளிப்படுத்தல் **2021 மார்ச் 01** ஆம் திங்கட்கிழமை **மு.ப 10.00** மணிக்கு அல்லது அதற்கு முன் **"ஆர்வத்தை வெளிப்படுத்தல்"** என தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அல்லது வழங்கல் பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டியதுடன், குறித்த வெளிப்படுத்தல்கள் அதே தினத்தில் **மு.ப 10.30** மணிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதான ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறும்.

தலைவர்,
ஆலோசனை விலைமனுக்கோரல் சபை,
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**
இல 120/2, வித்யா மாவத்தை, கொழும்பு 07

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

### தாதியர் விடுதியொன்றிற்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்

2021.04.01 முதல் 2022.03.31 வரையான ஒரு வருட காலத்திற்கு, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் தாதியர்களிற்கு விடுதி வசதிகளை அளிப்பதற்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது. அங்கு பின்வரும் தேவைப்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1. தாதியர்கள் 10 பேருக்குப் போதியளவு அறைகள் மற்றும் இடவசதிகளுடன் மற்றும் சமையலறையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். (வீடொன்றின் மூலம் இத்தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்த இயலாதவிடத்து, அண்மையிலுள்ள இரண்டு வீடுகள் கவனத்திற் கொள்ளப்படும்.)
2. இவ்வீட்டின் அமைவிடமானது, வைத்தியசாலையிலிருந்து 3 கி. மீற்றபிற்கு மேற்படாமல் இருப்பதுடன், அவ்வீடானது, பிரதான வீதிக்கு அண்மித்த இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அல்லது இலகுவில் சென்றடையக்கூடிய இடமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும். 03 கி. மீற்றர் எல்லைக்குள் தகுதியான வீடொன்று கிடைக்காத பட்சத்தில் பிரதான வீதிக்கு முகப்பாக 5 கி.மீ இற்குள் அமைந்துள்ள வீடுகளும் கவனத்திற் கொள்ளப்படும்.
3. குழாய் நீர் வசதிகள் மற்றும் மின்சாரம் பெற்றிருத்தல் வேண்டும். (அவற்றிற்காகப் புறம்பான விலைப்பட்டியல்கள் இருத்தல் அவசியம்)
4. குறைந்த பட்சம் இரண்டு குளியலறைகள் மற்றும் இரண்டு கழிவறைகள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும். அவை வீட்டின் உட்புறத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
5. வீட்டைச்சுற்றிவர பாதுகாப்பு வேலி மற்றும் நுழைவாயில் அமைந்திருத்தல் வேண்டும். யன்னல்கள், வளி மற்றும் ஒளி ஊடு புகக்கூடியவாறு துளைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். வீட்டிற்குப் போதியளவு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
6. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் வைத்தியசாலையின் நிருவாக சபையுடன் ஒரு வருட காலத்திற்கான குத்தகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள நபர்கள் 2021.02.10 முதல் 2021.03.03 வரை வாரவேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ரூபா 500/- ஐச் செலுத்தி வைத்தியசாலையின் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2021.03.04 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு அல்லது பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புவதற்கு முடியும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'தாதியர்களிற்கான விடுதிக்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுத்திறக்கப்படும் நேரம் - 2021.03.04 அன்று மு.ப. 10.00 ஆகும்.

அவ்வேளையில் குறித்த விண்ணப்பதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்படுவதுடன் ஏதேனும் விலைமனுவொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும். மேலதிக விபரங்களை தொலைபேசி இல. 011-2258862-4, 2258870 மூலம் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிருவாக அலுவலர், கணக்காளர் இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

சம்பளங்கள் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

**இறப்பர் பயிர்ச் செய்கையும், பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்குமான சம்பளச்சபை**

(136ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் இறப்பர் பயிர்ச் செய்கையும், பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்கான சம்பளச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இங்கு அட்டவணையில் நிலையாகக் குறிப்பிடப்பட்டுள்ள சுயமான தீர்மானமாக அந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பந்தியொன்றை மாற்றுவதற்கு அந்த சம்பளச் சபை உத்தேசித்துள்ளது என்பதனை அக்கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆட்சேபனைகள் 2021 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முன்வைக்கப்படும் சகல ஆட்சேபனைகளும் அந்த ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றினைக் கொண்ட ஆவணமாகவிருத்தல் வேண்டும்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
**தலைவர்,**
**இறப்பர் பயிர்ச் செய்கையும், பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்குமான சம்பளச்சபை**

**2021-02-09ஆம் திகதி,**
**கொழும்பு 05.**
**தொழில் திணைக்களத்தில்.**

**அட்டவணை**

இறப்பர் பயிர்ச் செய்கையும், பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்குமான சம்பளச் சபையினால் செய்யப்பட்ட 1949 நவம்பர் மாதம் 25ஆம் திகதிய 10047ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டதும், காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டதும், இறுதியாக 2014 செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதிய 1881/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் மாற்றம் செய்யப்பட்ட தீர்மானம் அந்த அட்டவணையின் 11ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியை பதிலீடு செய்யப்பட்டு மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

**11ஆம் பகுதி**

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வேலைக்காக செலுத்த வேண்டிய நாளாந்த சம்பளத்தின் அளவு

| | |
|---|---|
| **தொழிலாளர்** | **900.00** |
| **வரவுசெலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு** | **100.00** |

SPC

இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

### குத்தகை/ வாடகை அடிப்படையில் கட்டிட வசதியொன்றை பெற்றுக் கொள்ளல்

**கேள்வி தொடர்பிலக்கம்: AD/1/BLG LIST/23/2021**
**2021.02.22 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு முடிவடையும்.**

பின்வரும் பட்டியலிடப்பட்டுள்ள பிரதேசங்களில் அல்லது அவற்றின் சுற்றுப்புறத்தில் வாடகை/ குத்தகை அடிப்படையில் இலங்கை மருந்தக கூட்டுத்தாபனத்தினால் ராஜ்ய ஒசுசல விற்பனை நிலையங்களை தாபிப்பதற்காக கட்டிடங்களை பெறுவதற்காக கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

**01) ஹோமாகம 02) மன்னார் 03) முல்லைத்தீவு 04) வவுனியா**

கட்டிடங்களானது 1,000 இலிருந்து 1,500 சதுர அடி வரையிலான தரை மாடி பரப்பளவுடன் மேலே பட்டியலிடப்பட்டுள்ளவற்றின் வர்த்தக பிரதேசங்களில் அல்லது சுற்றுப்புறத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் 3 வழி மின்சாரம், நீர், தொலைபேசி மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகளுமிருத்தல் வேண்டும். 25°C உள்ளக வெப்பநிலையை பேணுவதற்காக வளிச்சீராக்கப்பட்ட கட்டிடமானது சேர்க்கப்பட்ட அம்சமாகும்.

எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, சதுர அடிகளின் எண்ணிக்கை, கட்டிட வரைபடம், உறுதியின் பிரதியொன்று, பிரித்தெடுக்கப்பட்ட மற்றும் அமைவிடம் ஆகியன அடங்கலான முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு'', என முகவரியிடப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2021.02.22 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி இலக்கம், நேரம் மற்றும் மூடும் நேரம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பின்வரும் நிபந்தனைகளுக்கு கேள்விதாரர்கள் கண்டிப்பாக அமைந்தொழுகல் வேண்டும்.**

1. முன்வைப்புக்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. முறையாக முத்திரையிடப்பட்ட முன்வைப்புக்கள் தெளிவாகவும் தனித்தனியாகவும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு இரு தனித்தனியான தபாலுறைகளின் சேர்க்கப்படல் வேண்டும் (ஸ்டேபில் ஊசிகள் - staple pins ) பாவிக்கப்படக்கூடாது.
3. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்வி இலக்கம், மூடும் திகதி மற்றும் நேரம்'' ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
4. மாற்றுவழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம்,**
**இல.: 75, சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு-01.**
**011-2320356-9**

## 2021.02.08 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 603,033
## பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 30,770,790.00

ரூ. 2,000,000.00 பரிசு 02 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 32

www.nlb.lk — NLB NATIONAL LOTTERIES

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2687 சீட்டிழுப்பு திகதி 08/02/2021

ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 08 21 26 77

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 186 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 405 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,028 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,555 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 164,800 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,229 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 212,210

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,642,580.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,240,582.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 4392 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 2021-02-08

வெற்றி எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 8 3 3 8 9 4

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 8 3 3 8 9 4 | ரூபா. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 3 3 8 9 4 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 3 8 9 4 | ரூபா. 10,000/- | 126 |
| 4ஆம் பரிசு | 8 9 4 | ரூபா. 1,000/- | 1,256 |
| 5ஆம் பரிசு | 9 4 | ரூபா. 100/- | 12,524 |
| 6ஆம் பரிசு | 4 | ரூபா. 20/- | 124,643 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 8 3 3 8 9 | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | 8 3 3 8 | ரூபா. 1,000/- | 120 |
| 9ஆம் பரிசு | 8 3 3 | ரூபா. 100/- | 1,283 |
| 10ஆம் பரிசு | 8 3 | ரூபா. 50/- | 12,501 |
| 11ஆம் பரிசு | P | ரூபா. 20/- | 49,709 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ.13,458,790.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,883,548.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

### வாசனா சம்பத — Vasana Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1664
திகதி 2021.02.08

வெற்றி இலக்கங்கள்: N — அன்றும் இன்றும் வீரன்

வெற்றி இலக்கங்கள்: 06 14 63 68

| பரிசு | பரிசுக்கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 1,000,000/- | - |
| 02 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000/- | 04 |
| 03 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 2,000/- | 84 |
| 04 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500/- | 149 |
| 05 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் பொருந்துமாயின் | 100/- | 3,859 |
| 06 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 60/- | 2,283 |
| 07 ஆம் பரிசு | 1 இலக்கம் மட்டும் பொருந்துமாயின் | 20/- | 56,598 |
| 08 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் பொருந்துமாயின் | 20/- | 9,413 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,485,600.00

அடுத்த சீட்டிழுப்புக்கான ஸ்டார் சுப்பர் பரிசு ரூ.26,744,260.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

ஐந்து இலட்சத்துக்கு அதிகமான பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.

### Mega POWER — மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 759
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 2021.02.08

ஆங்கில எழுத்து: N — சுப்பர் இலக்கம்: 10 — வெற்றி இலக்கங்கள்: 12 29 45 47

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 85 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 191 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,001 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,259 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 80,976 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 14,620 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 65,471,240.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,271,228.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,202,801.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,022,880.00

தேசிய லொத்தர் சபை — கொழும்பு 01 — www.nlb.lk

ஐந்து இலட்சம் அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களே மட்டுமே செல்லுபடியாகும்.

### தன நிதானய — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2021/02/08
சீட்டிழுப்பு இலக்கம் - 429

ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 27 32 56 80

| | கட்டமைப்பு | பரிசுகள் | ntw;wpahsu;fs; vz;zpf;if |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 107 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 232 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,512 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,843 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 93,707 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 17,601 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 5,160,940.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 121,009

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 80,640,494.80

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

சிறு விளம்பரம்





மோட்டார் வாகனங்கள்

119



பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

EP LO-3670 Ashok Leyland, 2017, Lorry கூடிய விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ. பே: 0 714-5429 5 8.
010061

**Repeat Your Ad For Better Offers**


பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் வுட்சயிட், அலகொள்ள, மிட்லண்ட் மற்றும் ரங்கல ஆகிய பெருந்தோட்டங்களிலிருந்து அகற்றப்படவுள்ள பலகைக்கான மரங்கள் 760ஐ விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன இதற்கான, விலைமனு நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப்படிவங்களை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பிலுள்ள பிரதான அலுவலகத்தில் அல்லது கல்பிஹில்ல பெருந்தோட்டத்திலுள்ள பிராந்திய அலுவலகத்தில் ரூபா 2000/- இற்கான தொகையைச் செலுத்தி 2021.02.22 அன்று பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்துகொள்ளலாம்.

இவ்விலைமனுக்கள், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பிலுள்ள பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் 2021.02.23 அன்று மு.ப. 1.00 இற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினம் மு.ப. 02.00 இற்கு முன்னர் விலைமனுத்திறக்கப்படும்.

2021.02.22 அன்று பி.ப. 3.00 இற்கு பின்னர், எக்காரணம் கொண்டும் விலைமனுப்படிவங்கள் வழங்கப்படமாட்டாதென்பதுடன், ஏதேனும் விலைமனுவொன்று அல்லது விலைமனுக்களின் பகுதியொன்று அல்லது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், அது இறுதியான தீர்மானமாக அமையும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீராணியா வீதி,**
**கொழும்பு-12**
**திகதி 2021.02.09**

**விசாரணைகள்: 0115235749**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலை மனுக்கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக **மேல் மாகாணத்தின்** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன் | மனு காப்புறுதிப்பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | CIDA தரம் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேலையின் நோக்கம் |
|---|---|---|---|---|---|---|
| RDA/DC/WP/IR - GOSL/2021/05 | ஒருகொடவத்தை - அம்பதலே வீதி (B 435) பாதையின் பால இலக்கம் 3/1 ஐ அகலப்படுத்தல் | 106.5 | 1.5 | C3 அல்லது C4 | 273 | பாலத்தை அகலப்படுத்துதல் (including bored pile foundation) அணுகுமுறைகளின் கட்டுமானம் மற்றும் பிற பணிகள் |
| RDA/DC/WP/IR - GOSL/2021/06 | ஒருகொடவத்தை - அம்பதலே வீதி (B 435) பாதையின் பால இலக்கம் 3/2 ஐ அகலப்படுத்தல் | 157.1 | 2 | C3 அல்லது C2 | 273 | பாலத்தின் மீள நிர்மாணம் (including bored pile foundation) அணுகுமுறைகளின் கட்டுமானம் மற்றும் பிற பணிகள் |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) **பாலக்கட்டுமானத்துறையில் நிபுணத்துவத்திற்கு** அமைய மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் மற்றும் மனு ஆவணங்களை **www.rda.gov.lk** இல் **11.02.2021** ஆம் திகதி வரை பரீட்சிக்க முடியும்.

அ. பணிப்பாளர் (கட்டுமானம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மூன்றாம் மாடி, "மகநெகும மஹா மெதுர"
டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி: 011-2864388 பெக்ஸ்:- 011-2861821

ஆ. திட்ட பணிப்பாளர் (மேல் மாகாணம்),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
முதலாம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை.
தொலைபேசி: 011-2876600 பெக்ஸ்:- 011-2877226

05. மனு தொடர்பான கூட்டம் **19.02.2021** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு திட்ட பணிப்பாளர் (மேல் மாகாணம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01 ஆம் மாடி, செத்சிறிபாய பத்தரமுல்லை (தொலைபேசி: 011-2876600 மற்றும் பெக்ஸ்: 011-2877226) காரியாலயத்தில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

06. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **11.02.2021** ஆம் திகதியிலிருந்து **03.03.2021** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.21,600.00** (வட் வரிகளுக்கு உட்பட்ட) 90 நாட்கள் செல்லுபடியாகும் காசுக்கட்டளையுடன் எழுத்து மூல விண்ணப்பத்தை பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்) ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

07. அனைத்து மனுக்களும், **30.06.2021** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. மனுக்கள் **02.06.2021** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **04.03.2021** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு, இயக்குனர் கவனத்திற்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் சபை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர",**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

# விலைமனு அறிவித்தல்

## வெலிகந்த பிரதேச சபை - கடைகளைக் குத்தகைக்கு விடல் - 2021

1. வெலிகந்த பிரதேச சபைக்குரிய வெலிகந்த வாரச் சந்தைக் கட்டிடத்தின் மேல் மாடியிலுள்ள 11 கடைகளை மூன்று வருட (03) காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக என்னால் விலைமனுப் பத்திரங்கள் அழைக்கப்படும்.

2. கடைகள் தொடர்பான விபரங்கள், கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

❖ **விலைமனுப் படிவங்கள் வழங்கப்படுவது** - 2021.02.03 முதல் 2021.02.23 அன்று மு.ப. 10.00 மணி வரையாகும்.

❖ **விலைமனு பொறுப்பேற்கப்படுவது** - 2021.02.03 முதல் 2021.02.23 அன்று பி.ப. 12.00 மணி வரையாகும்.

❖ **விலைமனுக்கள் திறக்கப்படுவது** - 2021.02.23 அன்று பி.ப. 12.00 மணிக்கு வெலிகந்த பிரதேச சபையில் மேற்கொள்ளப்படும்.

விலைமனு நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை, வெலிகந்த பிரதேச சபை, வெலிகந்த, பொலன்னறுவை என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திலிருந்து மற்றும் தொலைபேசி/ பெக்ஸ் இலக்கம்: 027-2259095, மின்னஞ்சல்: welikandaps@gmail.com மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | கடை இலக்கம் | பரப்பளவு (சதுர அடிகள்) | பிணை வைப்புத் தொகை ரூ | விலைமனுப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூ. | ஆகக் குறைந்த விலைமனு (மாதாந்த வாடகை) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,700.00 |
| 2 | 2 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,700.00 |
| 3 | 3 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,800.00 |
| 4 | 4 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,800.00 |
| 5 | 5 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,900.00 |
| 6 | 6 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,900.00 |
| 7 | 7 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,900.00 |
| 8 | 8 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,900.00 |
| 9 | 9 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,800.00 |
| 10 | 10 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,700.00 |
| 11 | 11 | 4.5 x 4.5 | 50,000.00 | 2,500.00 | 2,700.00 |

**ஜே.எம். அமீன்**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர் - பொலன்னறுவை**
**அதிகாரங்கள், கருமங்களை செயற்படுத்தும் அலுவலர்**
**பிரதேச சபை, வெலிகந்த.**

**2021.02.03**

**நகர (SHIFT) செயற்றிட்டத்திற்கான சுகாதார பாதுகாப்பு மற்றும் துப்புரவு முன்னெடுப்புகள்**

# பதவி வெற்றிடங்கள்

**(செயற்றிட்ட ஒப்பந்தம் அடிப்படையிலானது)**

**நகர (Shift) செயற்றிட்டம் தொடர்பாக சுகாதார பாதுகாப்பு மற்றும் துப்புரவு முன்னெடுப்புகளிலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.**

### செயற்றிட்ட கணக்காளர் பதவி (01 பதவி)

**சம்பள குறியீடு** : PS 4 வகுதி A

**செயற்றிட்ட வகுதி** : 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கு மேற்பட்டது மற்றும் 250 மற்றும் 250 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கு குறைவானது.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் உரித்தான துறையில் ஒரு இளமாணி பட்டதாரிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

உரித்தான துறையில் பட்டதாரிப் பட்டத்திற்கு சமமான தகைமையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

**அல்லது**

உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் இணை அங்கத்துவம்/ ஒரு நிகரான தொழில்சார் தகைமை

**அத்துடன்**

உரித்தான துறையில் ஆகக்குறைந்தது 08 வருட தகைமைக்கு பிந்திய அனுபவம்.

**அல்லது**

2) அரசாங்க அகில இலங்கை சேவைகள் தரம் III/ II ஓர் அலுவலர் அல்லது உரித்தான துறையில் ஒரு நிகரான அந்தஸ்து

**அத்துடன்**

தரம் III/II பதவியில் ஆகக்குறைந்தது 08 வருட அனுபவம்

### சிரேஷ்ட சமூக அலுவலர் பதவி (01 பதவி)

**பதவி குறியீடு** : PS 5

செயற்றிட்ட வகுதி : 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கு மேற்பட்டது. 250 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கு குறைவானது.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையொன்றிலான ஒரு இளமாணி பட்டதாரிப் பட்டம்

**அல்லது**

உரித்தான துறையிலான பட்டதாரிப் பட்டத் தகைமைக்கு சமமானதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை

**அல்லது**

உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் இணை அங்கத்துவம் / ஒரு நிகரான தொழில்சார் தகைமை

**மற்றும்**

நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு துறையில் ஆகக்குறைந்தது 05 வருட அனுபவம், உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்காக சமுகத்தை வலுவூட்டும் செயற்றிட்டங்களில் அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்**

**வயதெல்லை** : விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயதெல்லை 64 இற்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

**சேவை நியதி மற்றும் நிபந்தனைகள்**

குறித்த நியமனமானது முதலில் ஒப்பந்த அடிப்படையில் என்பதுடன், திருப்திகரமான செயற்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில், வருடா வருடம் ஒரு வருட காலத்திற்கு புதுப்பிக்க கூடியது. நியமனம் தொடர்பாக, முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருப இலக்கம் முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருப இல. 01/2019 இலுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் குறும்பட்டியல்படுத்தப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வொன்றிற்காக அழைக்கப்படுவதுடன் நேர்முகத் தேர்வின் போது காண்பிக்கப்படும் செயற்பாட்டின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

முழுமையான சுயவிபரக் கோவையொன்றுடன் கூடிய விண்ணப்பம் அனைத்து கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள், தொழில் அனுபவங்கள் போன்றவற்றின் சான்றிதழ் பிரதிகளுடன் 2021.02.14 அன்று அல்லது அதற்கு முன்னர், கீழேயுள்ள முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் சமர்ப்பிப்புகள் நிராகரிக்கப்படும்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்

பொது கூட்டுத்தாபன துறையைச் சேர்ந்த நிறுவனங்களில் தொழில்புரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரித்தான தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

**செயற்றிட்ட பணிப்பாளர்**
**நகர (Shift) செயற்றிட்டத்திற்கான**
**சுகாதார பாதுகாப்பு மற்றும் துப்புரவு முன்னெடுப்பு**
**இல.38, சார்ள்ஸ் பிரதேசம், ராவதாவத்த,**
**மொறட்டுவை**
**திகதி : 2021.02.02**

# கிழக்கின் குரல்



# சம்பந்தனின் இடத்தை பிடிக்கும் சூழ்ச்சிக்கு மட்டு. மக்கள் சோரம்போக மாட்டார்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன்

**வெல்லாவெளி தினகரன், மட்டக்களப்பு விசேட , பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்**



சம்பந்தனின் இடத்தை பிடிப்பதற்கு செய்யும் சூழ்ச்சியில் மட்டு. மாவட்ட தமிழ் மக்கள் சோரம் போக மட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 19 குளங்களும் 6 அணைக்கட்டுகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அபிவிருத்தி நிகழ்வுகள் கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாவெட்டுவான் அணைக்கட்டு புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (08) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு அணைக்கட்டிற்கான அடிக்கலை நட்டு வைத்ததுடன், பெயர்ப் பலகையினையும் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இவ்வணைக்கட்டினை அமைப்பதனூடாக சுமார் 600 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு சிறுபோகத்திற்கான நீர்ப்பாசனத்தினை வழங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு பிராந்திய நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் பொறியியலாளர் என். நாகரத்தினம், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகன்நாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தமிழ்தேசிய கூட்டமைப்பின் போலித் தேசியவாதிகள், வேடதாரிகள் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வருகைதந்து குசும்புகளை காட்ட முனைகின்றார்கள். நான் எட்டு அல்லது ஒன்பது தடவைகள் முல்லைத்தீவிலிருந்து கால் கொப்பளித்து யானைத்தடங்களில் சறுக்கி விழுந்து நடந்து கொக்கிளாய் ஆற்றில் சுரிக்குள் புதையுண்டு செம்மலை சென்று யாழ்ப்பாணத்தில் நான் போராடினேன்.

அப்போது கிடைக்காத சுதந்திரம், சுமந்திரன் பொத்துவிலில் இறங்கியும், கல்முனையில் இறங்கியும், மட்டக்களப்பில் இறங்கியும் நடந்த ஐந்து நாட்களில் யாழ்ப்பாணம் சென்றால் தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைத்தால் மகிழ்ச்சியான விடயமாகும்.

இது சம்பந்தனின் இடத்தை பிடிப்பதற்கு செய்யும் சூழ்ச்சியாகும். இவற்றில் எந்தவொரு தமிழனும் சிக்குண்டிராமல் தெளிவான சிந்தனையுடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று பொதுச் சந்தை கட்டடத்தை புனரமைக்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை



**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியை புனரமைத்து தருமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல்கூரை பழுதடைந்துள்ளதால் மழை காலங்களில் நீர் உட்செல்வதால் சுவர் இடிந்து விழக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை நீர் நிலத்தில் தேங்கி நிற்பதால் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, டெங்கு நுளம்பு பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. இதனால் சந்தைக்கு வரும் பொது மக்கள் பல அளெகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தைக் கட்டடத் தொகுதி சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய இடமாக மாறி வருவதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில வர்த்தகர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தினை விட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில வியாபாரிகள் வடிகானுக்கு அருகில் வைத்து உணவுப் பொருட்களை விற்பனை செய்வதையும் காண முடிகின்றது. எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுத்து கட்டடத் தொகுதியை புனரமைத்து தருமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கு மாகாணத்தில் ஏழு உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய தலைவர்கள் தெரிவு

## இன்று முதல் மூன்று நாட்களுக்கு தேர்தல்

**புளியந்தீவு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

கிழக்கு மாகாணத்தில் ஏழு உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இதற்கான தேர்தல்கள் இன்று 10ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு இடம்பெறும். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளிவந்துவிட்டதாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று வடக்கு, ஏறாவூர் நகரம், மண்முனை ஆகியவையும், அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், இறக்காமமும், திருமலை மாவட்டத்தில் தம்பலகாமம், சேருவில ஆகியவும் இதற்குள் அடங்குகின்றன.

இந்த ஏழு உள்ளூராட்சிச் சபைகளுக்கான புதிய தலைவர்கள் அந்தந்த சபை உறுப்பினர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்.

இந்த 7 சபைகளினதும் நடவடிக்கைகள் உள்ளூராட்சிச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடைபெற்றதால் அதன் தவிசாளர்கள் பதவிகளை இழந்துள்ளனர்.

திருமலை மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இன்று 10ஆம் திகதியும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நாளை 11ஆம் திகதியும், அம்பாறை மாவட்டத்துக்கான தேர்தல் வெள்ளிக்கிழமையும் 12 ஆம் திகதியும் இடம்பெறுமென அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மேற்கொள்வார்கள் என அவர் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் தனிமைப்படுத்தல் நீக்கம்; வர்த்தக நிலையங்கள் திறப்பு

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி முதல் மூடப்பட்டிருந்த காத்தான்குடி நகரின் 10 கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று முதல் திறக்கப்பட்டன. காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவில் 18 கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

தொடரான அன்டிஜன் பரிசோதனைகளை அடுத்து குறித்த பிரதேசத்தின் 8 கிராம சேவையளர் பிரிவுகளில் ஏற்கனவே தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டது.

தொடர்ந்தும் கடந்த 40 நாட்களாக 10 கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுலில் இருந்தது. நேற்று 9ஆம் திகதி முதல் 4 வீதிகளைத் தவிர 10 கிராமவேசகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அறிவித்தார். இதை அடுத்து நேற்று காலை முதல் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் என்பனவும் திறக்கப்பட்டன. தற்போது வழமையான அலுவல்கள் இடம்பெற்று வருகின்றன.

# மட்டக்களப்பில் வான்கதவுகள் திறப்பு

**மணல்சேனை நிருபர்**

கடந்த தில தினங்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட நவகிரி குளத்திலிருந்து நான்கு அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், இது பற்றி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி ஜீ.அருணணை தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாகவே குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தாழ் நிலப் பிரதேசங்களில் உள்ள நெற் காணிகள் நீரில் தாழக்குடிய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தங்களின் நெற்காணிகளை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுள்ளார்.

# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்கும் நடவடிக்கை

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை சம்புநகர் அல்மினா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கு இணைக்கும் நடவடிக்கை நேற்று (09) பிரதி அதிபர் எம்.ஐ. ஜஃபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு மெய்வல்லுனர் விளையாட்டுக்குப் பொறுப்பான இணைப்பாளரும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான ஏ.எல்.பாயிஸின் ஆலோசனைக்கும், வழிகாட்டலுக்கும் அமைவாக இம் மாணவர்கள் பாடசாலைக்கு இணைக்கப்பட்டனர்.

பாடசாலையில் இணைக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அல்மினா வித்தியாலயத்தின் நலன் விரும்பி எஸ்.எச்.அப்துல் றஹ்மான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் முகம்மட் றியாஸ், ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் ஏ.சீ.எம்.பர்சான், ஆசிரியர் எம்.ஏ.ஏ.அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் கலைஞர்களுக்கு நிவாரணப் பொருட்கள் கையளிப்பு

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மற்றும் கிண்ணியா பிரதேச செயலமும் இணைந்து கலைஞர் சுவதம் வேலைத் திட்டத்தின் கீழ் 10 கலைஞர்களுக்கு ரூ. 3000 பெறுமதியான நிவாரணம் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் இடம்பெற்றது.

ஒவ்வொரு வருடமும் கலைஞர்கள் இருக்கும் இல்லங்களுக்கு சென்று அன்பளிப்பு பொருட்களை வழங்கி அவர்களை கௌரவித்துடன், இம்முறை கொவிட்19 காரணமாக பிரதேச செயலகத்தில் இந் நிகழ்வு இடம் பெறுவதாக பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய கலைஞர் அடையாள அட்டையினை ஊடகவியலாளர் எம்.ஏ முகம்மதுக்கு பிரதேச செயலாளர் இதன் போது வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி தவநாதன், கலாசார அபிவிருத்தி உத்தியோத்தர் எஸ். சுகுணன், கலாசார அபிவிருத்தி உத்தியோத்தர் லலிதா தேவி, முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோத்தர் ஆர்.நிம்சாட் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

# மூதூருக்கு அதிகாரிகள் குழு விஜயம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேசத்தில் இடம் பெற்றுவரும் குடிநீர் விநியோகம் மற்றும் மேலதிக குடிநீர் விஸ்தரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடும் முகமாக நீர் வழங்கள் அமைச்சரின் மூதூர் பிரதேச இணைப்பாளர் எஸ்.எச். நியாஸின் ஏற்பாட்டில் அமைச்சர் வாசுதேவ நாயணயக்காரவின் பணிப்பின் பேரில் இடம் பெற்ற உயர் அதிகாரிகளுடனான சந்திப்பு மூதூர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

மூதூர், சேருவில, ஈச்சளம்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் மேலதிக குடிநீர் வழங்கள் விஸ்தரிப்பு குறித்தும் கலந்துரையாடியதுடன் மூதூரில் பொறியியலாளர் அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் இக்குழுவினர் கலந்துரையாடினர்.



சம்பூர் இளக்கந்தை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது சேரும் சகதியுமாக காணப்படுவதை படத்தில் காணலாம். படம்: கந்தளாய் தினகரன் நிருபர்

# முன்பள்ளிகளுக்கு தொற்றுநீக்கி திரவங்கள் வழங்கி வைப்பு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் இயங்கும் முன்பள்ளி பாடசாலைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய முன்பள்ளி பாடசாலைகளுக்கு கை கழுவும் பேசன்கள் மற்றும் தொற்று நீக்கும் திரவங்கள் ஆகியன வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் கல்முனை வடக்கு முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் யோகேஸ்வரன் திருப்பதி, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆர்.நித்தியா உட்பட முன்பள்ளிகளை முன்னின்று நடத்தும் பொறுப்பாசிரியைகள் கலந்து கொண்டனர். சிறுவர் செயலகத்தினால் முன்பள்ளிகளை ஆரம்பிக்கும் வகையில் கொரோனா தொற்றிலிருந்து சிறுவர்களை பாதுகாக்கும் வகையிலான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை வடக்கு பிரதேசத்தில் கல்முனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, துறைவந்தியமேடு ஆகிய கிராமங்களில் 27 பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

இப் பாடசாலைகள் யாவும் எதிர்வரம் 15 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருப்பதி யோகேஸ்வரன் தெரிவித்தார்.




இலங்கை கல்வி நிருவாகசேவை தரம் 1ற்கு பதவியுயர்வு பெற்ற சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீமைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை முஸ்லிம் தேசிய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. அவரை முன்னாள் அதிபர் முத்து இஸ்மாயில் பொன்னாடை போர்த்திப் பாராட்டுவதையும் முகாமைத்துவ அணியினர் கலந்து கொண்டிருப்பதையும் காணலாம். படம்: காரைதீவு குறூப் நிருபர்

# குளங்களை புனரமைத்து விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை

இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க

(ஒலுவில் விசேட நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை பிரகடனத்திற்கமைய நீர்ப்பாசன சூபிட்சத்தின் நோக்கின் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாக்க தெரிவித்தார்.

'நீர்ப்பாசன சுபீட்சம்' வேலைத் திட்டத்திற்கமைய அம்பாறை நாமல் ஓயா போடகொல்ல நீர்ப்பாசனக் குளத்தை அபிவிருத்தி செய்யும் அங்குரார்ப்பண வைபவம் நேற்றுமுன்தினம் (08) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படும் பட்சத்தில் விவசாயிகள் பெரும் நன்மை பெறுவார்கள்.

அரசாங்கம் மக்களுக்கு நன்மை பயக்கும் நிலையான அபிவிருத்தித் திட்டங்களை மக்களின் காலடிக்கு கொண்டு செல்கின்றது. கடந்த அரசாங்கத்தினால் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கவில்லை.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கமநல சேவை திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் உட்பட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 117 நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்பு செய்வதற்கு முதற்கட்டமாக 87 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனமான சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் நாட்டின் நீர்ப்பாசனக் கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளித்து நீர்ப்பாசன சுபீட்சம் வேலைத்திட்டத்திற்கமைய நாடெங்கிலும் 5000 குளங்களைப் புனரமைக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.எஸ்.ரீ. வீரசிங்க, டொக்டர் திலக் ராஜபக், மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாராநாக்க, உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், நீர்ப்பாசன அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 2020 தொழில்புரியும் பெண்களுக்கான விருது விழா

# 'சிலுமின' வணிக பகுதி ஆசிரியரான இனோக்கா பெரேராவுக்கு தங்க விருது




வணிகத்துறை உட்பட மேலும் பல தொழிற்துறைகளில் பல தொழில் புரியும் பெண்களை கௌரவிக்கும் நோக்கில் பெண்கள் முகாமைத்துவ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் *Top 10 Professinoal and Carrer Woman Awards SriLanka 2020* பணிபுரியும் பெண்களுக்கான விருது வழங்கும் விழாவில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிலுமின பத்திரிகையின் வணிக பகுதி ஆசிரியரான இனோக்கா பெரேரா பண்டார தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவ்விழா அண்மையில் கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்றதுடன் அச்சு ஊடக பிரிவில் வெற்றிகரமான தொழில்துறைக்கான விருதினை அவர் பெற்றுள்ளார்.

உலக வங்கி குழும அங்கத்துவ, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அதனூடாகச் செயற்படும் *Woman In Work* நிகழ்ச்சித்திட்டம் அவுஸ்திரேலிய அரசுடன் இணைந்து இவ்விருது வழங்கும் விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

1996ம் ஆண்டு தருணி பத்திரிகையின் சுதந்திர ஊடகவியலாளராக பத்திரிகைத்துறை வாழ்க்கையை ஆரம்பித்து இலங்கையின் பாரிய பத்திரிகை நிறுவனத்தின் சிலுமின பத்திரிகையின் வணித்துறை ஆசிரியர் வரை அவர் பயணித்த பாதையில், தருணி மற்றும் சிலுமின பத்திரிகை மூலம் சமூகத்துக்கு, வர்த்தக சமூகத்துக்கு மற்றும் பத்திரிகைக்கு அளித்த பங்களிப்புகள் இந்த தங்க விருதுக்கான மதிப்புக்கும் செயல்திறனுக்கும் உட்படுத்தப்பட்டது.

2004ம் ஆண்டு சிலுமின 'ரஸதுன' மேலதிக இணைப்புக்காக சிறந்த விசேட கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்தன விருது உள்ளிட்ட மூன்று ஊடக விருதுகளைப் பெற்றுள்ள இனோக்கா தெஹிவளை புனித பவுல் கன்னியர்மட பழைய மாணவியுமாவார்.

# தடைப்பட்ட கட்டுமாணப் பணிகள் மீண்டும் ஆரம்பம்



(மண்டூர் குறுப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பில் கடந்த காலங்களில் தடைப்பட்டிருந்த கிழக்கின் மிகப்பெரிய நூலக கட்டுமானப் பணிகள், மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அயராத முயற்சியால் மீண்டும் நேற்றுமுன்தினம் (8) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விட்டுச்சென்ற அபிவிருத்தி பணிகளை தொட்டு செல்லும் முகமாக 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்நூலகம், பல்வேறுபட்ட காரணங்களால் தடைப்பட்டிருந்தபோதும், பதவிக்கு வந்து சிறிது நாட்களிலேயே தேர்தல் விஞ்ஞாபனதில் குறிப்பிட்டதற்கமைய இதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டு இரண்டாவது மாடி தொடருக்கு கொங்கிரீட் இடும் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

# திருகோணமலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தருக்கு கொரோனா

(ரொட்டவெவ குறுப் நிருபர்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் (08) சிகிச்சைக்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக விடயத்துக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தருடன் நெருங்கிப் பழகிய மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கந்தளாய் பிரதேசத்தில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் திருகோணமலை மாவட்டத்தில் தேவைக்கேற்ற விதத்தில் பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

பொது மக்கள் தொடர்ந்தும் முகக் கவசங்களை பாவிக்குமாறும் சமூக இடைவெளிகளை தொடர்ந்தும் பேணுமாறும் சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடை மழை காரணமாக ஒலுவில் பிரதேசத்தில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற் கதிர்கள் நீரில் மூழ்கிக் கிடப்பதை படத்தில் காணலாம். (படம்: ஒலுவில் நிருபர்)

# சட்டவிரோத வெளிநாட்டு பயணத்தை தவிர்ப்பதற்கான விழிப்பூட்டல் செயலமர்வு

(மட்டக்களப்பு விசேட, ஆரையம்பதி தினகரன், பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

சட்டவிரோதமான வெளிநாட்டுப் பயணத்தினை தவிர்ப்பதற்கான விழிப்பூட்டல்களை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு காணிப் பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (09) இடம்பெற்றது.

மாவட்ட செயலக விளையாட்டு அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு அனுசரணை வழங்கியுள்ளது.

விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்றுவிப்பாளர்களுக்கான செயலமர்வினூடாக பிரதேசத்திலுள்ள புலம்பெயரும் இளைஞர் யுவதிகளுக்கு விழிப்பூட்டலை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்செயலமர்வில் சட்டவிரோதமான மற்றும் முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் விபரீதங்கள் தெழிவுபடுத்தப்பட்டு, முறையான வெளிநாட்டுப் பயணங்களுக்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டப்பட்டன. இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# யானை பாதுகாப்பு வேலியில் சிக்கி 8 வயது சிறுவன் பலி

தோப்பூர் குறுப் நிருபர்

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்தனவெட்டைப் பகுதியில் யானை பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்டு எட்டு வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் நேற்று (9) காலை இடம்பெற்றுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.



உயிரிழந்த சிறுவன் சந்தனவெட்டை தி/மூ/ ஐங்கரன் வித்தியாலயத்தில் இரண்டாம் தரத்தில் கல்வி பயிலும் இந்திரன் ரஜீதன் வயது (08) என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இச்சிறுவன் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட சிறிய குடும்பத்தின் முதலாவது பிள்ளை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த சிறுவன் பாடசாலைக்குச் செல்வதற்காக தயாராகி மலசலம் கழிப்பதற்காகச் சென்ற போது யானை பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்தோடு உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்போது மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், யானை பாதுகாப்புக்கான மின்சார வேலிக்கு மின்சாரத்தை போட்டு விட்டு அணைக்காமல் சென்று சிறுவனின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்த இரண்டு சந்தேக நபர்களையும் சம்பூர் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் தொடர்பில் சம்பூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நீர், மின் இணைப்பை பெற்றுத்தருமாறு கோரிக்கை

திருமலை மாவட்ட விசேட நிருபர்

கிண்ணியா எழில் அரங்கு மைதானத்தின் நீர் இணைப்பையும் மின் இணைப்பையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை வைத்து நகர சபையில் பல பிரேரணைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே துண்டிக்கப்பட்ட நீரிணைபையும் மின் இணைப்பையும் விரைவாக பெற்றுத்தருமாறு கோரிக்கையை முன்வைத்து கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம் மஹ்தி நேற்று (09) கிண்ணியா நகர சபையின் மதில் மேல் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இக் கோரிக்கையானது விரைவாக நிறைவேற்றப் படாவிட்டால் எதிர்வரும் நாட்களில் மக்களைத் திரட்டி பாரிய எழுச்சி போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# காத்தான்குடியில் டெங்கு நுளம்பு உள்ள இடங்கள் அடையாளம்

## உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் ஜனவரி மாதத்திலிருந்து இதுவரைக்கும் 200க்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். நபீல் தெரிவித்தார.

இம்மாதத்தில் இன்று வரை 50க்கு அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காத்தான்குடி பிரதேசத்தில் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் பொருட்டு நேற்றுமுன்தினம் (08) திங்கட்கிழமை தொடக்கம் காத்தான்குடியில் வீடு வீடாக டெங்கு பரிசோதனையும், விழிப்புனர்வு நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். நபீல், மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆசாத் ஹசன் ஆகியோரி தலைமையில் காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.பசீரின் மேற்பார்வையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள், பொலிசார் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



இதன் போது வீடு வீடாகச் சென்று வீட்டின் கிணறு, தண்ணீர் தாங்கி, வீட்டின் உட்பகுதி மற்றும் சுற்றுப்புறச் சூழல் என்பன பார்வையிடப்படுவதுடன், டெங்கு அபாயம் உள்ள வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் சிவப்பு நிற ஸ்டிக்கர்களும் ஒட்டப்படுகின்றன.

அத்தோடு வீடு மற்றும் கட்டட உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையும் இதன் போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பை பரப்பக் கூடிய இடங்களாக அடையாளப்படுத்தப்படும் வீடு மற்றும் கட்டட உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி நபீல் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 பெப்ரவரி 10
புதன்கிழமை

# பொத்துவில் - பொலிகண்டி போராட்ட வழக்கு விசாரணைகள் பருத்தித்துறை, முல்லைத்தீவு நீதிமன்றங்களால் ஒத்திவைப்பு

**புதுக்குடியிருப்பு விசேட, யாழ். விசேட நிருபர்கள்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீதிமன்ற கட்டளைக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக பொலிசாரால் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேசங்களை சேர்ந்த பொலிசார் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். முல்லைத்தீவுப் பொலிசாரால் நேற்று AR வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய Bஅறிக்கையிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போரட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில மக்கள் பிரதிநிதிகள் சிலரின் பெயரும் மதத்தலைவர்களின் பெயரும் உள்ளடங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ் வழக்கின் மீதான விசாரணையினை எதிர்வரும் 17.06.2021 திகதியிட்டு மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை நீதிமன்றிலும் பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ் நிலையங்களால் பி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கு எதிராகவே இந்த அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அறிக்கை மீதான விசாரணைகள் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்றதை அடுத்து பருத்தித்துறை பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரு பொலிஸ் நிலையங்களின் வழக்குகளும் மே மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

# ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வவுனியா தெற்கில் மூன்று தெரிவு

**வவுனியா விசேட நிருபர்**

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து 3 பாடசாலைகள் தெரிவுக்காக முன்மொழியப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் நாடு முழுவதும் 1000 புதிய தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இருந்து தமிழ் முஸ்லிம் சிங்களப் பாடசாலைகள் ஒவ்வொன்று வீதம் 3 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப்படவுள்ளன.

அந்தவகையில் செட்டிகுளம் மகாவித்தியாலயம், அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம், பரக்கும் மகாவித்தியாலயம் என்பன தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் ஏற்கனவே இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகாவித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம், மடுகந்தை தேசிய பாடசாலை, காமினி மகாவித்தியாலயம் என்பன தேசிய பாடசாலைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பத்து நாட்கள் கடந்தும் காணாமல் போன மீனவர்கள் தொடர்பில் தகவல் இல்லை

## கண்டுபிடித்து தருமாறு உறவினர்கள் கோரிக்கை

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னாரில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களை கண்டுபிடித்து தருமாறு அவர்களது குடும்பத்தினர் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

ஜனவரி மாதம் 30ஆம் திகதி கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் ஒரு படகில் வழமைபோன்று மன்னார் தென்கடல் பரப்பில் தூண்டில் மூலம் மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

மறுநாள் கடலில் இருந்து தங்களின் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் கடலில் நங்கூரம் இட்டும் அது பலன் கொடுக்காத நிலையில் தாங்கள் கடலில் படகுடன் வலிந்து செல்வதாக கரையிலிருந்த தங்கள் உறவினர்களுக்கு மொபையில் மூலம் தகவல் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் மன்னார் கடற்றொழில் திணைக்களம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்களிடம் முறையீடு செய்ததைத் தொடர்ந்து இவர்களை மீட்பதற்கான உதவிகளை கடற்படையினரிடம் கோரி இருந்தனர்.

ஆனால் நேற்று டன் இவர்கள் காணாமல் போய் பத்து தினங்கள் கடந்தும் இவர்களை கண்டு பிடிக்கப்படாத நிலையிலேயே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடற்படையினர் இவர்களை கண்டு பிடிப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் கடற்படையினரின் 'ராடாரிலும்' இதுவரை இவர்களைப் பற்றிய நிலைகள் தெண்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தினூடாக தெரியவருகின்றது.

# மன்னாரில் 17 கிராம அலுவலர்களை உள்ளடக்கிய புதிய பிரதேச செயலகம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் 17 கிராம அலுவலர்களை உள்ளடக்கி புதிய பிரதேச செயலகம் ஒன்று உருவாக்கப்படுவதற்காக பரிந்துரைக்கப்பட்டு அது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பின் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பி வைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.



மன்னார் மாவட்டத்தில் புதிதாக பிரதேச செயலகம் ஒன்று உருவாக்குவதற்கான பரிசோதனை கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தலைமையிலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டீமெல், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் மற்றும் ஏனைய வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது இருக்கும் ஐந்து பிரதேச செயலகத்துடன் மேலும் மாந்தை வடக்கு என்ற ஒரு புதிய பிரதேச செயலகத்தை 17 கிராம அலுவலக பிரிவுகளை உள்ளடக்கியதாக உருவாக்குவதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஒத்திசைவு திட்டத்தை எதிர்வரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் இதற்கான அனுமதியைப் பெற்று வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உருவாக இருக்கும் இப் புதிய பிரதேச செயலகப் பிரிவில் தீர்மானிக்கப்பட்டதுக்கு இணங்க உள்ளடக்கப்பட இருக்கும் கிராம அலுவலகர்கள் பிரிவுகள் பின்வருமாறு காயா நகர், பெரியமடு, பாலமடு, விடத்தல் தீவு மேற்கு, விடத்தல் தீவு வடக்கு, விடத்தல் தீவு கிழக்கு, விடத்தல் தீவு மத்தி, கோவில்குளம், கள்ளியடி, ஆத்திமோட்டை, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, கூராய், பெரியமடு கிழக்கு, பாலியாறு, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் ஆகிய 17 கிராம அலுவலகர் பிரிவுகள் உள்ளடக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

# விபத்தில் இளைஞன் பலி

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு முள்ளியவளை ஒட்டுசுட்டான் வீதியில் கூழாமுறிப்பு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கீச்சுக்குளம் கூழாமுறிப்பு பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்ட விபத்தின் போது 01 ஆம் வட்டாரம் முள்ளியவளையினை சேர்ந்த 35 வயதான யோகலிங்கம் சிவரூபன் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கா யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாறறப்பட்டார்.அங்கிருந்து மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டுவரப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றும் ஒரு இளைஞன் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# யாழில். எரிபொருள் நிலைய முகாமையாளர் மீது தாக்குதல்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நெல்லியடியில் உள்ள கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தமக்கு உடனடியாக எரிபொருள் நிரப்பவில்லை என முகாமையாளர் மீது போத்தலினால் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கிணற்றிலிருந்து சிறுவன் சடலமாக மீட்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா ஓமந்தை பகுதியில் சிறுவன் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதே பகுதியைச் சேர்ந்த ஏழு வயதான அபிசக் என்ற சிறுவனே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் வீட்டில் இருந்து ரியூசன் செல்வதற்காக சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரை காணவில்லை என ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் அயல் வீட்டு கிணற்றில் சடலமாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அவரது தாயார் வெளிநாடொன்றில் வசித்துவரும் நிலையில் தந்தையார் மற்றும் அப்பம்மாவுடன் வசித்து வந்துள்ளார். சம்பவ தினம் தந்தையார் வீட்டில் இருக்கவில்லை. சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அடிப்படை தேவைகளை நிறைவேற்ற கோரி பூந்தோட்ட மக்கள் போராட்டம்

**வவுனியா விஷேட நிருபர்**

வவுனியா பூந்தோட்டம் சிறிநகர் கிராம மக்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

20 வருடங்களாகியும் தமது கிராமத்திற்கு காணி, உரிமைப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்துதரப்படவில்லை, மைதானம் இன்மை,வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில்,

பல வருடங்கள் ஆகியும் எமது கோரிக்கைகளிற்கு தீர்வு கிடைக்கவில்லை.

இது தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், அரச அதிகாரிகளிற்கு தெரியப்படுத்தியும் எமது விடயத்தில் எவரும் கரிசனை கொள்ளவில்லை.

உட்கட்டுமானம் சீரின்மையால் மழைக்காலங்களில் வீடுகளில் நீர் தேங்கி நிற்கிறது. காணி உரிமைப் பத்திரம் வழங்கினால் அதனை வங்கிகளில் வைத்து கடன்பெற்றாவது வீடுகளை கட்டிக்கொள்ளமுடியும்.

அதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன் கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள புனர்வாழ்வு இணைப்புக் காரியாலயம் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளிவரும் கழிவுநீர் எமது கிராமத்திற்குள்ளேயே வருகிறது.

எமது அடிப்படை கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளால் பலமுறை வாக்குறுதிகள் வழங்கியும் எவரும் அதனை தீர்த்துவைக்கவில்லை. எமாற்றமே மிஞ்சியது. எனவே எமது கோரிக்கைகளிற்கு தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தனர்.

# வாடிக்கு விசமிகளால் தீ வைப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

வடமராட்சிக் கிழக்கு கட்டைக் காட்டில் விசமிகளால் தீ வைக்கப்பட்டதில் கரைவலை வாடி ஒன்று எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

நேற்று அதிகாலை கட்டைக் காட்டை சேர்ந்த பொன்ராசா சம்மாட்டி என்பவரது கரவலை வாடிக்கே இவ்வாறு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதனால் வாடிக்குள் இருந்த வலைகள், படகு வெளி இணைப்பு இயந்திரம் உட்பட சுமார் 40 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வவுனியா சிறையில் ஒருவருக்கு கொரோனா

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த இந்நபர் கடந்த 31 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பரிசோதனைக்கான முடிவுகள் கிடைக்கப்பெற்றது.

இதன்படி அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.





பூநகரி கரியாலைநாகபடுவான் பகுதியில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினால் செய்கை பண்ணப்பட்ட "பச்சைப்பெருமாள்" நெல்லினம் நேற்று பாரம்பரிய முறைப்படி அறுவடை செய்யப்பட்ட போது...
படங்கள்: கிளிநொச்சி குறூப் நிருபர்

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இம் மாதம் 24, 25ம் திகதிகளில்

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இரண்டு நாள்களிலும், ஆறு அமர்வுகளாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இப் பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புகள், உள்வாரி, வெளிவாரி என 2 ஆயிரத்து 608 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இரண்டு நாள்கள் : ஆறு அமர்வுகளில் 2 ஆயிரத்து 608 பேருக்குப் பட்டங்கள்

அச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் முன்னிலையில் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் பட்டதாரிகளுக்கான பட்டங்களை வழங்கவுள்ளார். இரண்டு நாள்கள் ஆறு அமர்வுகளாக இப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. முதலாம் நாளான 24 ஆம் திகதி, புதன்கிழமை ஆயிரத்து 388 பேருக்குப் பட்டங்களும், டிப்ளோமாக்களும் வழங்கப்படவுள்ளன.

காலை 8.30 மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள்ள முதலாவது அமர்வில், நிதி முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டம், விவசாய உயிரியலில் முது தத்துவமாணி, விவசாய இரசாயனத்தில் முது தத்துவமாணி, சைவ சித்தாந்தத்தில் முது கலைமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தினை 55 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டத்தை 52 பேரும், கலைமாணி (விசேட பகுதி) பட்டத்தை 160 பேரும், வணிகமாணி பட்டத்தை 88 பேரும், தாதியியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 09 பேரும், மருந்தகவியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 14 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை 21 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவற்றுடன், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரி பட்டங்களைப் பெறுபவர்களில் 114 கலைமாணி பட்டதாரிகளதும் 2 நடனமாணி பட்டதாரிகளதும்; பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

முற்பகல் 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில், இந்து நாகரிகத்தில் கலாநிதி பட்டம், கல்வியியலில் முது தத்துவமாணி, வரலாற்றில் முது தத்துவமாணி, கிறிஸ்தவ நாகரிகத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 66 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், கலைமாணி (விசேட பகுதி) பட்டத்தை 168 பேரும், வியாபார நிருவாகமாணி (சிறப்பு) பட்டத்தை 22 பேரும், கலைமாணி (நடனம்) பட்டத்தை 50 பேரும், கலைமாணி (வாய்ப்பாட்டு) பட்டத்தை 77 பேரும், கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) பட்டத்தை 22 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவற்றுடன், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரி பட்டங்களைப் பெறுபவர்களில் 7 வணிகமாணி (பழைய பாடத்திட்டம்) பட்டதாரிகளதும், 16 வணிகமாணி (புதிய பாடத்திட்டம்) பட்டதாரிகளதும், 36 வியாபார முகாமைத்துவமாணி பட்டதாரிகளதும் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 வரை நடைபெறவுள்ள மூன்றாவது அமர்வில், மனித வள முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டம், புவியியலில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா இருவரும், பௌதிகவியலில் முது தத்துவமாணி, மண் விஞ்ஞானத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாக கற்பித்தலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 18 பேரும் பெறவுள்ளனர். இவர்களுடன், வியாபார நிருவாகமாணி பட்டத்தை 259 பேரும், சட்டமாணி பட்டத்தை 49 பேரும், தாதியியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 22 பேரும், மருந்தகவியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 21 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை 26 பேரும் பெறவிருக்கின்றனர்.

இரண்டாம் நாளான 25 ஆம் திகதி, வியாழக்கிழமை ஆயிரத்து 220 பேருக்குப் பட்டங்களும், டிப்ளோமாக்களும் வழங்கப்படவுள்ளன. காலை 8.30 மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள்ள 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் நான்காவது அமர்வில் தமிழில் கலாநிதி பட்டம், மெய்யியலில் முது தத்துவமாணி, அரசியல் விஞ்ஞானத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 77 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை 118 பேரும், மருத்துவ விஞ்ஞானமாணி பட்டத்தை ஒருவரும், சித்த வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை 70 பேரும், பொதுக் கலைமாணி பட்டத்தை 127 பேரும், பொதுக் கலைமாணி (ஆளில்லா நிலையில்) பட்டத்தை ஒருவரும் பெறவுள்ளனர்.

இவற்றுடன், வியாபார நிருவாக டிப்ளோமா தகைமை பெறும் ஒருவரதும், நுண் நிதியியலில் டிப்ளோமா தகைமை பெறும் 25 பேரதும் உடற்கல்வி டிப்ளோமா தகைமை பெறும் ஒருவரதும், பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன. முற்பகல் 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறவுள்ள ஐந்தாவது அமர்வில், சந்தைப்படுத்தலில் கலாநிதி பட்டம் ஒருவரும், சித்த வைத்தியத்தில் முது தத்துவமாணி பட்டம், தமிழில் முது தத்துவமாணி பட்டம் ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா இருவரும், கல்வியியலில் முதுமாணி பட்டத்தை 98 பேறும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், விவசாய விஞ்ஞானமாணி பட்டத்தை 62 பேரும், கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (4 ஆண்டுகள்) பட்டத்தை 03 பேரும், கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (3 ஆண்டுகள்) பட்டத்தை ஒருவரும், கணினி விஞ்ஞானமாணி பட்டத்தை 02 பேரும், பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 10 பேரும், விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 106 பேரும், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 18 பேரும், விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தை 98 பேரும் பெறவுள்ளனர்.

பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 வரை நடைபெறவுள்ள ஆறாவது அமர்வில், புவியியலில் கலாநிதி, பொருளியலில் முது தத்துவமாணி பட்டம் ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 25 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 26 பேரும், பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 33 பேரும், விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 91 பேரும் பெறவுள்ளனர்.

இவற்றுடன், வவுனியா வளாகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமாணி (பொது) பட்டத்தை 25 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 14 பேரும், சுற்றுச் சூழலியல் விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தை 15 பேரும், சுற்றுச் சூழலியல் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 09 பேரும், விஞ்ஞானமாணி ( பிரயோக கணிதம், கணினி) பொதுப் பட்டத்தை 22 பேரும், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 04 பேரும், வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தை 52 பேரும், திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தை 35 பேரும், வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தை 26 பேரும் பெறவிருக்கின்றனர்.

## துவிர்



பவதாரணி ராஜசிங்கம்

### ஒரு பெண் தொழிலதிபராகிய நானும் ஓர் கனவு கண்டேன்...

உலகில் எதுவும் ஸ்தம்பிக்கப்பட்டு போவதில்லை. எவையும் எப்போதும் மாறிக்கொண்டே இருப்பன. இருப்பினும் இம் மாற்றத்தின் வேகத்திலும், போக்கிலும் தான் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதன்படி மானுட சமூகமானது பல்கிப் பெருகியதுடன் மட்டுமன்றி அதன் சகல அம்சங்களும் ஆழ்ந்து, அகன்று, விரிந்து பரந்த இன்றைய நிலையினை அடைந்துள்ளன. இச் செயல் முறையினூடே பழையன கழிதலும் புதியன புகுதலும் ஈடேறிக் கொண்டு வந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை.

இவ் விதிமுறைக்கு ஆண் பெண் சமூக நிலைப்பாடுகள் விலக்கு இல்லையாயினும் இவ்விடயம் குறித்த மாற்றங்கள் எத்தகைய போக்கையும், வேகத்தையும் பிரதிபலித்து வந்துள்ளன என்பதினை நோக்க வேண்டியது அவசியமான தொன்றாகும்.

இன்று ஆண், பெண் தொழில் பிரிவில் பாரிய மாற்றங்களை காண்கிறோம். பொருளாதார உற்பத்தியானது குடும்ப மட்டத்திலாயினும் சமூக மட்டத்திலாயினும் இருபாலாரது பங்களிப்பையும் வேண்டி நிற்கிறது என்றால் மிகையாகாது.

'பெண்ணே நீயும் பொங்கியெழு
மயங்கியது போதும் துள்ளியெழு
அடிமை என்றுனை தாழ்த்துகையில் தீயின் பிழம்பாய் மாறிவிடு..!'

பெண்மையை காட்டிலும் தெய்வம் இல்லை என்பார்கள். அந்த வகையில் தாயாய், மகளாய், சகோதரியாய், தாரமாய் இப்படி பல அவதாரங்களில் சங்கமிப்பவள் தன்னுடைய வாழ்நாளில் பேதையாய், பெதும்பையாய், மங்கையாய், மடந்தையாய், அரிவையாய், தெரிவையாய், பேரிளம் பெண்ணாய் ஏழு பரிமாணங்களில் மிளிர்கிறாள்.

'சக்தி இன்றேல் சிவனில்லை' என்பார்கள் அந்த வகையில் இன்று குடும்பத்தில் பெண் என்பவள் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளக் கூடிய வகையில் சரிசமமாக முகாமை செய்யும் வல்லமையுள்ளவள்.

பெண்கள் அனைத்து உறவிற்கும் பாலமாகத் திகழ்கின்றார்கள். பெண்களால் முடியாது என்று எதுவும் இல்லை. நாம் நமது பலம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். நாம் ஒரு விடயத்தை முழு மனதுடனும் துடிப்புடனும் செய்தால் எம்மால் முடியாது எதுவும் இல்லை. நாம் பெண்ணாக பிறந்து விட்டோமே என்ற தாழ்வுமனப்பான்மை ஒரு போதும் வந்துவிட கூடாது.

இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சாதனைப் பெண் இருந்துக்கொண்டு தான் இருக்கிறாள். உதாரணமாக 2007ஆம் ஆண்டு உலகில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதில் உலகில் பெரும்பாலான நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்தன.

இதில் திறம்பெற கையாண்ட நிறுவனங்கள் பெரும்பாலும் பெண் தலைமைத்துவத்திற்குட்பட்டவையே. ஏனெனில் பெண்கள் சிறு சிறு விடயத்திலும் அக்கறையும் கவனமும் செலுத்துவார்கள். குறைந்த மூலதனத்தை கொண்டு பலவழிகளில் புத்தாக்கம் மேற்கொள்ளும் ஆளுமை அவர்களிடம் உண்டு.

எம்மால் முடியாது என வீட்டில் ஒடுங்கி நிற்காது தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். தனக்கென ஒரு இலட்சியத்தை மனதில் விதைத்து கொள்ள வேண்டும். அதற்கான நேரத்தையும் ஒதுக்கி கொள்ள வேண்டும். உங்கள் கனவுகளை கலைத்து விடாதீர்கள். அதற்கு எப்போதும் உயிரோட்டம் கொடுத்துக் கொண்டிருங்கள்.

அப்போது தான் வெற்றிக்கான பாதையை அறிந்து கொள்ள முடியும். 'நேராக மட்டுமே பார்த்து கொண்டு செல்பவர்கள் நீண்ட தூரம் போக முடியாது' என்கிறார் அந்துவான் து செந் எக்சுபேரி. வெற்றிக்கான பாதை கரடுமுரணானது என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்.

மனித ஏற்றத்தாழ்வுகளை, வர்க்க பேதங்களை மனித வரலாற்றின் சாபக்கேடுகளாக எண்ணிக் களைந்து விட்டு புதிய சமூக பரிமாணத்தை நோக்கி நகர்வதே கனவு.

கண்களை திறந்து கனவு காணுங்கள்...

# யாழ்.இந்திய துணைத்தூதுவர் பாலச்சந்திரன் வவுனியாவில் பல நிகழ்வுகளில் பங்கேற்பு







யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரன் கடந்தவாரம் வவுனியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபெற்றியிருந்தார்.

வவுனியா புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் வழிபாடு செய்த பின்னர் ஆலய தர்மகர்த்தாக்கள் மற்றும் கிராமப் பெரியவர்களுடன் கலந்துரையாடினார். இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு கிடைக்கக் கூடிய இந்தியத் திட்டங்கள் குறித்து, அகதேசிய முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. எம்.பி.நடராஜை சந்தித்து கலந்துரையாடினார்.

வவுனியாவில் முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் பூவரசங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் இந்திய மானிய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வகுப்பறைக் கட்டடப் பணிகளை ஆய்வு செய்தார். தனது வருகையை முன்னிட்டு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார். கோபிதன் ஆடையக நிறுவனத்திற்கு, அவரின் அழைப்பின் பேரில் சென்று உற்பத்தி நடவடிக்கைகளை பார்வையிட்டார். வவுனியா அரசாங்க அதிபர் சமன் பண்டுலசேனவைச் சந்தித்தார். தொடர்ந்து வவுனியா வர்த்தகர் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களை சந்தித்து இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினார்.

இந்திய மத்திய அரசின் மானிய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் மாதிரிக் கிராம திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்திற்கு 24 வீட்டுத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் மெனிக் பாமிலுள்ள அருணோதயம் நகரில் இடம்பெறும் வீட்டுத்திட்ட பணிகளை ஆய்வு செய்த பின்னர் வீட்டுத்திட்டப் பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.





1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை

# மக்கள் வங்கி

(கூட்டுறவு வங்கிப் பிரிவு)

# பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

## அக்மீமன, காலி

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு சூழல், அக்மீமன பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 113சி அனன்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில், காலி, அகுரெஸ்ஸ வீதியில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எஸ்.விக்கிரமசிங்க அவர்களால் வரையப்பட்ட, 2018 மே மாதம் 18 ஆம் திகதியிடப்பட்ட, 15320 ஆம் இலக்க குடியிருப்பு தொடர் மாடி வீடுகள் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான குடியிருப்புகள்.

| தொ. இல. | துணைப் பகுதி இல. | வரி மதிப்பீட்டு இல. | கோபுரம் | மாடி | மாடிப் பகுதி (சதுர மீற்றர்கள்) | காணிப் பதிவக பதிவிலக்கம் (காலி காணிப் பதிவகம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | A/NT/F2/P5 | 171/60 2/5 | வட கோபுரம் | 2ஆம் மாடி | 73 | CON/J 01/13 |
| 2 | A/NT/F2/P6 | 171/60 2/6 | வட கோபுரம் | 2ஆம் மாடி | 73 | CON/J 01/15 |
| 3 | A/NT/F2/P8 | 171/60 2/8 | வட கோபுரம் | 2ஆம் மாடி | 106.25 | CON/J 01/19 |
| 4 | A/NT/F2/P10 | 171/60 2/10 | வட கோபுரம் | 2ஆம் மாடி | 103.75 | CON/J 01/23 |
| 5 | A/NT/F3/P1 | 171/60 3/1 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 103.75 | CON/J 01/25 |
| 6 | A/NT/F3/P2 | 171/60 3/2 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 106.25 | CON/J 01/27 |
| 7 | A/NT/F3/P3 | 171/60 3/3 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 106.25 | CON/J 01/29 |
| 8 | A/NT/F3/P5 | 171/60 3/5 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 73 | CON/J 01/33 |
| 9 | A/NT/F3/P7 | 171/60 3/7 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 71.75 | CON/J 01/37 |
| 10 | A/NT/F3/P8 | 171/60 3/8 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 106.25 | CON/J 01/39 |
| 11 | A/NT/F3/P9 | 171/60 3/9 | வட கோபுரம் | 3ஆம் மாடி | 106.25 | CON/J 01/41 |
| 12 | A/NT/F4/P4 | 171/60 4/4 | வட கோபுரம் | 4ஆம் மாடி | 72.25 | CON/J 01/51 |
| 13 | A/NT/F4/P10 | 171/60 4/10 | வட கோபுரம் | 4ஆம் மாடி | 103.75 | CON/J 01/63 |
| 14 | A/NT/F5/P4 | 171/60 5/4 | வட கோபுரம் | 5ஆம் மாடி | 72.25 | CON/J 01/71 |
| 15 | A/NT/F5/P5 | 171/60 5/5 | வட கோபுரம் | 5ஆம் மாடி | 73 | CON/J 01/73 |
| 16 | A/NT/F5/P6 | 171/60 5/6 | வட கோபுரம் | 5ஆம் மாடி | 73 | CON/J 01/75 |
| 17 | A/NT/F5/P7 | 171/60 5/7 | வட கோபுரம் | 5ஆம் மாடி | 71.75 | CON/J 01/77 |
| 18 | A/NT/F6/P4 | 171/60 6/4 | வட கோபுரம் | 6ஆம் மாடி | 72.25 | CON/J 01/91 |
| 19 | A/NT/F6/P5 | 171/60 6/5 | வட கோபுரம் | 6ஆம் மாடி | 73 | CON/J 01/93 |
| 20 | A/NT/F6/P6 | 171/60 6/6 | வட கோபுரம் | 6ஆம் மாடி | 73 | CON/J 01/95 |
| 21 | A/NT/F7/P5 | 171/60 7/6 | வட கோபுரம் | 7ஆம் மாடி | 73 | CON/J 01/113 |
| 22 | A/NT/F8/P5 | 171/60 8/5 | வட கோபுரம் | 8ஆம் மாடி | 73 | CON/J 01/131 |
| 23 | A/NT/F10/P4 | 171/60 10/4 | வட கோபுரம் | 10ஆம் மாடி | 145.25 | CON/J 02/33 |
| 24 | A/NT/F11/P1 | 171/60 11/1 | வட கோபுரம் | 11ஆம் மாடி | 103.75 | CON/J 02/45 |
| 25 | A/NT/F11/P5 | 171/60 11/5 | வட கோபுரம் | 11ஆம் மாடி | 73 | CON/J 02/53 |
| 26 | A/NT/F12A/P8 | 171/60 14/8 | வட கோபுரம் | 12ஆம் மாடி | 104 | CON/J 02/107 |
| 27 | A/NT/F12A/P7 | 171/60 14/7 | வட கோபுரம் | 12ஆம் மாடி | 106.25 | CON/J 02/103 |
| 28 | A/NT/F14/P4 | 171/60 14/7 | வட கோபுரம் | 14ஆம் மாடி | 105.5 | CON/J 02/105 |
| 29 | A/ST/F4/P4 | 171/50 4/4 | தென் கோபுரம் | 4ஆம் மாடி | 73 | CON/J 03/23 |
| 30 | A/ST/F5/P5 | 171/50 5/5 | தென் கோபுரம் | 4ஆம் மாடி | 73 | CON/J 03/43 |
| 31 | A/ST/F5/P10 | 171/50 5/10 | தென் கோபுரம் | 4ஆம் மாடி | 103.75 | CON/J 03/53 |
| 32 | A/ST/F12A/P2 | 171/50 14/2 | தென் கோபுரம் | 12ஆம் மாடி | 106.25 | CON/J 04/63 |
| 33 | A/ST/F14/P1 | 171/50 14/2 | தென் கோபுரம் | 14ஆம் மாடி | 105.5 | CON/J 04/65 |
| 34 | A/ST/F12A/P7 | 171/50 14/7 | தென் கோபுரம் | 12ஆம் மாடி | 106.25 | CON/J 04/79 |
| 35 | A/ST/F14/P4 | 171/50 14/7 | தென் கோபுரம் | 14ஆம் மாடி | 105.5 | CON/J 04/81 |

தீர்மான அறிவித்தலுக்கு, தயவு செய்து 2020 டிசம்பர் 24 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2020 டிசம்பர் 25 ஆம் திகதிய டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி

## 2021 மார்ச் 10 ஆம் திகதி புதன்கிழமை

காலி, மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தில் மு.ப 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்.**

**பெயார்வே காலி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சொத்து**

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்

(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-

(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்

(6) முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிரதம முகாமையாளர் - அறவீடுகள், மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், 10வது மாடி, இல.75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி : 011-2481443, 011-2481546

**காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது"

# ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

129 வருடகால மகோன்னத சேவை

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலை/ ∴பக்ஸ் : 081-2224371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6யு, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி : 011-2671467, 011-2671468
தொலை/ ∴பக்ஸ் : 011-2671469
மின்னஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

like us on facebook

# பெண்களுக்கான நடைமுறைக் கணக்கு: அறிமுகம் செய்தது அமானா வங்கி

இலங்கையின் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு தமது தொழில் நடவடிக்கைகளைக்கு முன்னெடுக்க கைகொடுத்து உதவும் வகையில் அமானா வங்கி பெண்களுக்கான நடைமுறைக் கணக்கொன்றை அறிமுகம் செய்துள்ளது. முதல் இலவச காசோலை புத்தகம், இலவச டெபிட் அட்டை போன்ற பல அனுகூலங்களைக் கொண்டுள்ள இந்தக் கணக்கினூடாக, பெண்களுக்கு பிரத்தியேகமான வங்கி நிலையங்கள், 900க்கும் அதிகமான பண வைப்பு இயந்திர வலையமைப்பு, இணைய வங்கிச் சேவை, SMS விழிப்பூட்டல்கள், E கூற்றுகள் மற்றும் பல விசேட அம்சங்களை அணுகும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அமானா வங்கியின் பெண்களுக்கான நடைமுறைக் கணக்கினூடாக, பெண்களுக்கு தடையற்ற கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், தமது வியாபாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தக்கூடியதாகவும் அமையும்.

பெண்களுக்கான நடைமுறைக் கணக்கின் அறிமுகம் தொடர்பில் வங்கியின் வைப்புகளுக்கான தலைமை அதிகாரி அர்ஷத் ஜமால்தீன் கருத்துத் தெரிவிக்கையில், “அண்மைக் காலத்தில் தமது வீடுகளிலிருந்தவாறு சிறியளவில் தமது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்த பெருமளவான பெண் தொழில் முயற்சியாளர்களை' அவதானிக்க முடிகின்றது. எமது பெண்களுக்கான நடைமுறைக் கணக்கில் காணப்படும் அனுகூலங்களினுளடாக, அவர்களின் சிறிய வியாபாரத்தை பெரியளவில் கொண்டு செல்ல முடியும் என நாம் கருதுகின்றோம்” என்றார்.

வங்கியின் பெண்களுக்கான நடைமுறை கணக்கை பெற்றுக் கொள்ள விரும்பும் வாடிக்கையாளர்கள், நாடு முழுவதிலும் காணப்படும் 32 கிளைகளை நாடுவதன் மூலம் அல்லது வங்கி உத்தியோகத்தர் ஒருவரை வரவளைப்பதன் மூலம் பெண்கள் நடைமுறை கணக்கை ஆரம்பிக்கலாம்'. வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தின் இலக்கமான 011 7 756 756 உடன் தொடர்பு கொண்டு



மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உலகலாவிய ரீதியில் வளர்ந்துவரும் வட்டி சாராத இஸ்லாமிய வங்கி முறையுடன் முற்றிலும் இணங்கி செயற்படும் இலங்கையின் முதலாவது அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியாக அமானா வங்கி திகழ்கின்றது. வளர்ச்சிக்கு துணைபுரிந்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தொலைநோக்குடன் அமானா வங்கி வளர்ந்து வரும் கிளை வலையமைப்புடனும், 4500 இற்கும் மேற்பட்ட ATM இயந்திரங்கள் மூலமாகவும், 850+ Pay&Go இயந்திரங்களினுளடாகவும் தமது வாடிக்கையாளர்களுடன் நெருங்கியுள்ளது. இணையத்தள மற்றும் கையடக்கத் தொலைபேசி வங்கிச் சேவை, வாரத்தில் 24 மணிநேரமும் இயங்கக்கூடிய பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் பெண்களுக்கான பிரத்தியேக வங்கிப் பிரிவுகள் போன்ற பல சௌகரியமான சேவைகளையும் வாடிக்கையாளர்கள் அனுபவிக்க முடியும்.

இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி அளிக்கப்பட்ட அமானா வங்கி பி.எல்.சி.' கொழும்பு பங்குப் பாிவா'த்தனையில் பட்டியலிடப் பட்ட ஒரு தனி நிறுவனமாகும். ஜித்தாவில் தலைமையகத்தைக் கொண்ட இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி (IsDB) குழுமம் பிரதான பங்குதாரா' என்ற முறையில் அமானா வங்கியில் 29.97% பங்குளைக் உாிமம் கொண்டுள்ளது. IsDB குழுமம் என்பது ‘AAA’ தரப்படுத்தலைப் பெற்ற பல்துறை அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. அமானா வங்கிக்கு எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் கிடையாது. அதன் பிரத்தியேகமான சமூகப் பொறுப்புணர்வுத் திட்டமான அனாதை பராமரிப்பு நம்பிக்கை நிதியை ‘OrphanCare’ Trust ஐ மாத்திரமே பேணி வருகின்றது.

# முதல் 5 உலகளாவிய ஸ்மார்ட்போன் வர்த்தக நாமங்களில் இடம்பிடித்த vivo



IDC இன் வருடாந்த தரவுக்கமைய, உலகின் முன்னணி ஸ்மார்ட்போன் வர்த்தகநாமமான vivo, 8.6 சதவீத சந்தைப் பங்கு மற்றும் 110 மில்லியனுக்கு அதிகமான சாதனங்களை ஏற்றுமதி செய்து, 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய ஸ்மார்ட்போன் சந்தையில் 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்தாண்டினை விட 1% வளர்ச்சியை பதிவு செய்துள்ளதுடன், ஒட்டுமொத்த பொருளாதார சரிவையும் மீறி ஏற்றுமதியை அதிகரித்துள்ள முதல் ஐந்து ஸ்மார்ட்போன் வர்த்தகநாமங்களில் vivoஉம் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

vivo தற்போது சீன ஸ்மார்ட்போன் சந்தையில் இரண்டாவது இடத்தையும், இந்தியாவில் மூன்றாவது இடத்தையும் கொண்டுள்ள அதே நேரத்தில் இந்தோனேசியாவின் சந்தையில் முன்னணியில் உள்ளது.

சீனாவை தலமையகமாகக் கொண்டுள்ள vivo , Shenzhen, Dongguan, Nanjing, Beijing, Hangzhou, Shanghai, Taipei, Tokyo மற்றும் San Diego ஆகிய இடங்களில் 9 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களின் வலையமைப்பையும் கொண்டுள்ளது. 5G, செயற்கை நுண்ணறிவு, தொழில்துறை வடிவமைப்பு, புகைப்படவியல் மற்றும் வரவிருக்கும் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட அதிநவீன நுகர்வோர் தொழில்நுட்பங்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றது.

2020 ஆம் ஆண்டில் உலகளாவிய மொபைல் போன் சந்தை முன்னைய ஆண்டை விட 5.9% வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை IDC இன் தரவு காட்டுகிறது. எனினும் சந்தை மீட்சியை நோக்கிய முன்னேற்றம் சிறப்பாக உள்ளதுடன், 2021 ஆம் ஆண்டுக்கான பிரவேசம் வலுவாக இருக்கும் என்று IDC நம்புகிறது.

# SLSI "கொவிட்–19 பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை"

## அங்கீகாரத்தை முதன்முதலாகப் பெற்றுள்ள நெஸ்லே



இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்திடமிருந்து (SLSI) புதிய ”கொவிட்19 பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கான” சான்று அங்கீகாரத்தை இலங்கையில் முதன்முதலாகப் பெற்றுக்கொண்ட உணவு மற்றும் பான வகை உற்பத்தி நிறுவனங்களில் ஒன்று என்ற பெருமையை நெஸ்லே அடையப்பெற்றுள்ளது.

கொவிட்19 தொற்று வெளிப்பாட்டுக்கு எதிரான பாதுகாப்பு ஏற்பாட்டு நடவடிக்கைகளை நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பணித்தளங்கள் அனைத்தும் கொண்டுள்ளதுடன், அவற்றின் செயல்பாடுகள், தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள் அனைத்திலும்' பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து பாதுகாப்பு ஏற்பாட்டு நடவடிக்கைகளும் உள்ளன என்பதையும் இது உறுதிப்படுத்துகின்றது.

“எமது பணியாளர்கள் மீது ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ள, பொறுப்புணர்வு மிக்க ஒரு நிறுவனமாக, எமது ஊழியர்கள், வணிகப் பங்காளர்கள் மற்றும் சமூகங்களை தொற்றுநோய் பரவி வருகின்ற இக்காலகட்டத்தில் பாதுகாப்பாக இருக்கச் செய்வதற்கு நாம் அயராது உழைத்து வருகின்றோம். இச்சான்று அங்கீகாரத்துடன் மிகச் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம் கொண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

எந்தவொரு சூழ்நிலையிலும் எமது பணியாளர்கள் மற்றும் தயாரிப்புக்களின் பாதுகாப்பிற்கு நாம் அதிமுக்கியத்துவம் அளிப்பதால், எமது பணித்தளங்கள் மற்றும் பெறுமதிச் சங்கிலியின் அனைத்துப் படிகளிலும் கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு தர நடைமுறைகளை தொடர்ந்தும் பேணுவோம்,” என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலீன் குறிப்பிட்டார். இதற்கு உரிய SLSI தராதரத்துடன், கொவிட்19 பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையை நிறுவனம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இந்த சான்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இணக்கப்பாடு தொடர்ந்தும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அவ்வப்போது கணக்காய்வுகள் முன்னெடுக்கப்படும்.

# தேசிய வைத்தியசாலைக்கு மேலும் 2 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள்




கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சிறுநீரக நோயாளர்களின் சிகிச்சைக்கு அவசியமான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை சிங்கர் Thirst for Life சமூக நலன்புரி திட்டத்தின் கீழ் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலன்புரி திட்டங்களில் Thirst for Life முக்கியமான ஒரு செயல்திட்டமாகும்.

அரச வைத்தியசாலைகளுக்கு வருகின்ற சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக முக்கியமான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் CRRT (Continuous Renal Replacement Therapy) தேவைக்கு அமைய அரச வைத்தியசாலைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நன்கொடையாக வழங்கப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் உள்ள நோய்த் தொற்று காரணமாக இம்முறை இயந்திரம் வழங்கப்படுவது சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இடம் பெற்றது.

2013 ஆம் ஆண்டு பொலன்னறுவை வைத்தியசாலையில் முதல்முறை இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவியதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணிக்கு தற்போது ஏழு ஆண்டுகள் ஆகின்றன.

இதுவரை வழங்கப்பட்ட 10 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களுக்காக கடந்த ஏழு ஆண்டுகளில் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் 30 மில்லியன் ரூபா வரை செலவிட்டிருப்பதோடு, இந்த இயந்திரங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை தவிர மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை, வத்துபிட்டிவல தள வைத்தியசாலை மற்றும் பதவிய பொது வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டுள்ளன.

Thirst for Life திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சிங்கர் குழும தலைமை நிறைவேற்று அதிகாரி மஹேஷ் விஜேவர்தன கூறும்போது, சிறுநீரக நோயினால் நிர்க்கதியான எமது மக்களின் சிகிச்சைக்காக தேவையாக உள்ள பத்து இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை கடந்த ஏழு ஆண்டுகளில் தேசிய வைத்தியசாலைகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு முடிந்திருப்பது தொடர்பில் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டார்.

# கொழும்பில் தனது சேவைகளை அதிகரிக்கிறது எமிரேட்ஸ்




எமிரேட்ஸ் நிறுவனத்தால் கொழும்புக்கு வாராந்தம் நடத்தப்படும் விமானப் பறப்புகளின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஆறாக அதிகரிப்பதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி, ஐந்தாவது விமானப் பறப்புச் சேவை பெப்ரவரி 18ஆம் திகதியும், ஆறாவது பறப்புச் சேவை பெப்ரவரி 27ஆம் திகதியும் ஆரம்பிக்கின்றன. சந்தையில் காணப்படும் கேள்வியைப் பூர்த்திசெய்வதாகவும், கொழும்பிலிருந்தும்/ கொழும்புக்கும் டுபாய் மூலமாக அதிகரித்த இணைப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாகவும் இந்த மேலதிக இரண்டு சேவைகள் அமையும்.

சேர்க்கப்பட்ட சேவைகள் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் சனிக்கிழமையிலும் செயற்படும். EK650 என்ற எமிரேட்ஸ் விமானம் டுபாயிலிருந்து 02:35 மணிக்குப் புறப்பட்டு, 08:25 மணிக்கு (உள்நாட்டு நேரம்) கொழும்பை வந்தடையும். திரும்பல் விமானமான EK651 கொழும்பிலிருந்து 09:55 மணிக்குப் புறப்பட்டு, டுபாயை 13:00 மணிக்கு (உள்நாட்டு நேரம்) வந்தடையும். எமிரேட்ஸ் வலையமைப்புக்குள் காணப்படும் 90க்கும் மேற்பட்ட பயண இடங்களுக்கு டுபாய் ஊடாக, பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான பயணங்களை வாடிக்கையாளர்கள் அனுபவிக்க முடியும்.

விசாலமான Boeing 777300ER வகை விமானத்தை, கொழும்புக்கான சேவைகளுக்கு எமிரேட்ஸ் நிறுவனம் பயன்படுத்தவுள்ளது. இலங்கைக்கான பயண நடவடிக்கைகளை 1986ஆம் ஆண்டு ஆரம்பித்த எமிரேட்ஸ் நிறுவனம், 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேவையில் ஈடுபட்டு வருகிறது. கடந்தாண்டில் கொழும்பிலிருந்து வெளிச்செல்லும் பயணச்சேவைகளை முதலில் மீள ஆரம்பித்த சர்வதேச விமான சேவைகளில் ஒன்றான எமிரேட்ஸ், வெளிநாட்டுப் பிரஜைகளினதும் இலங்கையர்களினதும் பயணங்களை மேற்கொள்ள உதவியிருந்தது. நிறுவனத்தின் சரக்குப் பிரிவான எமிரேட்ஸ் ஸ்கைகார்கோ (Emirates SkyCargo), வாராந்தம் நான்கு சரக்கு விமானங்களைச் செயற்படுத்தி, முக்கியமான வர்த்தகத் தொடர்புகளைப் பேணுவதன் மூலமாகவும், கொழும்பிலிருந்தும், கொழும்புக்கும் பொருட்களைக் கொண்டு செல்வதில் முக்கிய பங்கை ஆற்றுவதன் மூலமாகவும் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வருகிறது.

# சகல கார் பொருத்துகை பணிகளும் இலங்கையின் தொழில்நுட்பவியலாளர்கள் மூலம் முன்னெடுப்பு



வெலிப்பன்னவில் அமைந்துள்ள Mahindra Ideal Lanka Pvt Ltd. (MILPL) தொழிற்சாலையில் தலைமை அதிகாரியாக பணியாற்றிய இந்திய வாகன பொறியியலாளர், தமது பயிற்சி காலப் பகுதியை பூர்த்தி செய்து தமது சொந்த நாட்டுக்கு திரும்பவுள்ள நிலையில், இத்தொழிற்சாலையின் பணிகளை முற்றுமுழுதாக இலங்கையின் தொழில்நுட்பவியலாளர்கள் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த தொழிற்சாலையில் தலைமைப் பதவி வகித்த சதாசிவம் துரைராஜ், 2021 ஜனவரி 31ஆம் திகதியுடன் தமது 2 வருட பதவிக்காலத்தை பூர்த்தி செய்துள்ள நிலையில் இந்தியாவில் அடுத்த மாதம் மற்றுமொரு வாகன உற்பத்தி நிறுவனமொன்றில் பணியில் இணைந்து கொள்ளவுள்ளார்.

இந்தியாவின் Mahindra & Mahindra நியமங்களின் பிரகாரம் உற்பத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு, இலங்கையின் தொழில்நுட்பவியலாளர்கள் அறிவையும் திறனையும் பெற்றுள்ளதாக தெரிவித்த அவர்,MILPL ஐச் சேர்ந்த இலங்கையில் கார் பொருத்துகையில் ஈடுபடும் தொழில்நுட்பவியலாளர்கள் தமது பணிகளை சிறப்பாக முன்னெடுக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளனர்.

குறிப்பாக சர்வதேச நியமங்களின் பிரகாரம் சீராக்கங்களை மேற்கொள்ளல், பொருத்திய வாகனத்தின் வினைத்திறனை உறுதி செய்வதற்கான இனங்காணல் பரிசோதனைகளை மேற்கொள்ளும் அறிவையும் பெற்றுள்ளனர் என்றார்.

தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் துறையில் அறிவைப் பெற்றவர்களாக பொருத்துகை தொழில்நுட்பவியலாளர்கள் திகழ வேண்டும் என்பதுடன், உயர்தரம் வாய்ந்த தயாரிப்புகளை உருவாக்குவதற்கு வழிகாட்டியாக வடிவமைப்புகளை ஆராயும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

இலங்கையின் தொழில்நுட்பவியலாளர்கள் எவ்வித மேற்பார்வையுமின்றி, பொருத்துகை பணிகளை முன்னெடுப்பதற்கான அனைத்து ஆளுமைகளையும் பெற்றுள்ளனர் என்றார்.

## பாணந்துறை கங்குலே ஆயுர்வேத மருந்தகத்தின் கண்களுக்கு இதமளிக்கும்

# நெத் சுவதெபுல்



பாரம்பரிய உள்நாட்டு கண் வைத்தியத்திற்குப் புகழ்பெற்ற பாணந்துறை கங்குலே ஆயுர்வேத மருந்தகத்திலிருந்து கண்கள் உலருதல், கண் எரிச்சல், கண்களைச் சுற்றிக் கருவளையம் உண்டாதல் ஆகியவற்றுக்கு நிவாரணமளிக்கும் நெத் சுவதெபுல்எனும் மூலிகை மருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கண்ணுக்கு ஒத்தடம் கொடுப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய மருந்தாகிய இது, தேயிலைப்பை வடிவத்திலான சிறிய பைகள் 10 வீதம் கொண்ட பைக்கற்றாக விற்பனை செய்யப்படுகின்றது.

நெத் சுவதெபுல்ஐப் பயன்படுத்தி கண்களுக்கு ஒத்தடம் கொடுப்பதன் மூலம் கண்கள் உலருதல், கண் எரிச்சல் மற்றும்' வலி, கண்களில் பாரத் தன்மை, கண்களைச் சுற்றிக் கருவளையம் உண்டாதல், களைப்புத் தன்மை, எப்போதும் கண்ணீர் வடிதல் ஆகியவற்றை இல்லாதொழித்து கண்ணுக்கு இதமளிக்கும் என கங்குலே ஆயுர்வேத வைத்தியர் இஷார பெர்ணாந்து கூறுகின்றார்.

கண்ணின் நரம்புச் செயற்பாட்டினைச் சரியாகப் பராமரிப்பதற்கும் கணணிப் பாவனை மற்றும் கண்களைக் களைப்படையச் செய்யும் தொழிலொன்றில் ஈடுபடுவோர் மற்றும் மூக்குக் கண்ணாடி பயன்படுத்துவோருக்கும் இம்மருந்தின் மூலம் நிவாரணம் கிடைக்கும்என கங்குலே ஆயுர்வேத வைத்தியர் குறிப்பிட்டார்.

நூற்றாண்டுக்கும் மேற்பட்ட பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட கங்குலே கண் வைத்தியப் பரம்பரையின் நான்காவது தலைமுறையாகிய வைத்தியர் இஷாரபெர்னாந்து தமது பரம்பரையின் இரகசிய செய்முறையொன்றின் மூலம் மூலிகைத் தாவரங்களை மாத்திரம் பயன்படுத்திநெத் சுவதெபுலை உற்பத்தி செய்துள்ளார்.

சுடு தண்ணீர்க் கோப்பையொன்றில் மருந்துப் பைக்கற்றொன்றை அமிழ்த்தி 15 நிமிடங்கள் வரை அவிக்கவிட்டு இலேசான சூட்டில் கண்களைச் சுற்றி ஒத்தடம் கொடுக்க வேண்டும். கண் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டிருப்பவர்கள் வைத்திய அறிவுரைகளின்றி இந்த சிகிச்சையை மேற்கொள்ளக் கூடாதென கங்குலே ஆயுர்வேத வைத்தியர் குறிப்பிட்டார்.










லிந்துலை திஸ்பனை தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை (8) இடம்பெற்றது. இதனையொட்டி எண்ணெய்க்காப்பு சாத்துதல், பாற்குட பவனி என்பன இடம்பெற்றன. அத்துடன், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக, திஸ்பனை தோட்ட முத்துமாரியம்மன் கோவிலின் அறநெறி பாடசாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: பூண்டுலோயா நிருபர்)

# கால்வாய்களை புனரமைக்க நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கை



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி பட்டுகெதர பிரதேசத்தில் கால்வாய்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டை கட்டியெழுப்பும் சௌபாக்கிய கொள்கை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி பட்டுகெதர பிரதேசத்தில் காணப்படும் கால்வாய்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்று(9) ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி இரத்தினபுரி பட்டு கெதர பிரதேசத்தில் கால்வாய்களை புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்திற்கு நீர்ப்பாசன அமைச்சின் மூலம் 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 216 ஏக்கர் தரிசு நெல் வயல்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன். 300 விவசாயிகளுக்கு நன்மை பெற முடியும்.

அபிவிருத்தி செய்யப்படவுள்ள கால்வாய்க்கு இரத்தினபுரி பட்டு கெதர ஏஹெல்லபொல ஊடாக மேற்படி நீர் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாணத்தில் கொவிட்-19 பரவல் தீவிரம்

## இதுவரை 35 பேர் உயிரிழப்பு



**(எம்.ஏ.அமீனுல்லா )**

மத்திய மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 5201 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா தொற்றாளர்கள் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்திலிருந்து 3329 பேர் பதிவாகியுள்ளனர். அதேபோன்று நுவரெலியா மாவட்டத்தில் 1131 தொற்றாளர்களும் , மாத்தளை மாவட்டத்தில் 741 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் (9) காலை 6.00 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாகாணத்திற்குள் மொத்தம் 72 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அதன்படி கண்டியிலிருந்து 41, பேரும் நுவரெலியாவிலிருந்து 25, மாத்தளைலிருந்து 06. பேரும் புதிய தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

மேலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலேயே கொரோனா தொற்று காரணமாக அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்தில் இதுவரை 26 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 07 பேரும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் இருவருமாக மொத்தம் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கண்டி மாவட்டத்திலுள்ள 23 சுகாதார பிரிவுகளிலும் கண்டி மாநகர சுகாதாரப் பிரிவு (441), அக்குறணை சுகாதாரப் பிரிவு (369) ,பாத்ததும்பறை சுகாதாரப் பிரிவு(234), கம்பளை சுகாதார பிரிவு (163), பூஜாப்பிட்டிய சுகாதாரப்பிரிவு (260), மற்றும் குண்டசாலை சுகாதாரப் பிரிவு (123), ஹாரிஸ்பத்துவ சுகாதாரப்பிரிவு (125) , யட்டிநுவர சுகாதாரப்பிரிவு (120) ஆகிய பிரிவுகளில் நூற்றுக்கும் அதிகமான தொற்றாளர்கள் உள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அதுபோன்று நுவரெலியா மாவட்டத்திலுள்ள 13 சுகாதார பிரிவுகளில் அம்பகமுவ சுகாதாரப்பிரிவில் (201) மாத்திரம் நூற்றுக்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் மாத்தளை மாவட்டத்திலுள்ள 13 சுகாதார பிரிவுகளில் நூற்றுக்கும் அதிகமான தொற்றாளர்கள் எந்த பிரிவுகளிலும் அடையாளம் காணப்படவில்லை. உக்குவளை சுகாதாரப்பிரிவில் 258 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

மேலும் கொவிட் தொற்று காரணமாக கண்டி மாவட்டத்தில் எட்டு இடங்களில் கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது. அந்தவகையில் பேராதனை நிலையத்தில் 356 பேரும் கண்டி பொல்கொல்லை மத்திய நிலையத்தில் 254 பேரும், தெல்தெனிய நிலையத்தில் 100 பேரும் லக்கல நிலையத்தில் 117 பேரும் தற்பொழுது சிகிச்சை பெற்றுவருகின்றனர். ஏனைய சிகிச்சை நிலையங்களில் நூற்றுக்கும் குறைவானவர்களே சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் நேற்று முன்தினம் காலை 6.00 மணி வரையுள்ள காலப்பகுதியில் புதிதாக 106 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 99 பேர் பூரண சுகத்துடன் சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியாகியுள்ளனர்.

மேலும் ஹந்தான சிசில என்ற நிலையம் தவிர்ந்த அனைத்து தொற்றாளர் சிகிச்சை நிலையங்களிலும் தற்பொழுது 1070 பேர் சிகிச்சை பெற்றுவருவதாக மேலும் தெரியவருகிறது.

**கொவிட்- 19 அச்சம்**

# பதுளை மாவட்டத்தில் மாணவர் வரவு மந்தம்

**பதுளை தினகரன் விசேடநிருபர்**

பதுளை மாவட்டத்தில் ரிதிமாலியத்தை மற்றும் மகியங்கனை ஆகிய பகுதிகளில் கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக பாடசாலை மாணவ, மாணவிகளின் வரவில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ரிதிமாலியத்தை கல்வி வலயத்தின் 18 பாடசாலைகளில் எந்தவொரு மாணவரும் தற்போதைய நிலையில் சமூகமளிக்கவில்லையென ஊவா மாகாண கல்விப்பணிப்பாளர் டி.எம்.ரட்னாயக்க தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைகளின் பெரும்பாலான ஆசிரியர்கள் மட்டும் சமூகமளித்திருந்தனர்.

ரிதிமாலியத்தை கல்வி வலயத்தின் ரிதிமாலியத்தை, ஆந்தாவுல்பொத்த,ஈட்டிகாராவை,குருவிதென்ன, ஊரணி, மகாகம, குருமட, கல்பொக்க, கெசல்பொத்தை, நாகதீப, திக்கல்யாய, திஸ்ஸபுர, ஊவாதிஸ்ஸபுர, தர்மபால, அராவத்தை, குடானுக்க, மாப்பாகட, அராவ ஆகிய 18 பாடசாலைகளிலும் மாணவர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை.

இம்மாணவர்களின் பெரும்பாலானோர் அவரவர் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொவிட் 19 அச்சம் காரணமாக இரு ஆடைத்தொழிற்சாலைகள் ரிதிமாலியத்தை மற்றும் மகியங்கனை ஆகிய இடங்களில் மூடப்பட்டுள்ளன. ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்கள் பலரும் தமது வீடுகளிலேயே இருந்து வருகின்றனர்.

இவர்களில் 197 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்கள் தற்சமயம் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

# ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் குற்றச்சாட்டுகளை மறுக்கின்றோம்

**(எம்.ஏ.அமீனுல்லா)**

முப்பது ஆண்டுகால யுத்தத்தை, முடிவுக்கு கொண்டுவருவதற்கான மனிதாபிமான நடவடிக்கையின் போது ஏதேனும் அநீதி ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து உள்ளக மட்டத்தில் விசாரணையொன்றை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகி வருவதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி கலகெதர பிரதேச சபையின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் :

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஜனாதிபதி காலத்தில் இந்த நோக்கத்திற்காக இரண்டு விசாரணைகள் நடத்தப்பட்டது. எனினும் கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் அச்செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டது.

மேலும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற உள்ளக விசாரணையில் அநீதி நடந்ததாக கண்டறியப்பட்டால் அரசாங்கத்தினால் அதுதொடர்பில் நியாமான நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு அல்லாமல், புலம்பெயர்ந்த தமிழர்களின் பக்கச்சார்பான குற்றச்சாட்டுகளை ஏற்க அரசாங்கம் தயாராக இல்லை.



மேலும் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவை முன்வைத்த குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கம் கடுமையாக மறுக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் நடக்கவில்லை என்பதை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகத்தின் அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

லிபியா மற்றும் சிரியாவுக்கு அமெரிக்கா என்ன செய்திருக்கிறது என்பதை உலகம் கண்டுள்ளது. இக்கொலைகளில் சம்பந்தப்பட்ட அந்த நாடுகள் குறித்து எந்த விசாரணையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகரித்துவரும் காட்டு யானை தொல்லை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை முல்லகொலமுள்ள கிராமம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக அக்கிராமங்களில் வாழும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால் அக்கிராமங்களில் வாழும் பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதுடன் வீட்டு தோட்டங்களை அண்மித்த காடுகளில் உள்ள மரங்களை தாக்கி அழித்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கித்துள் மற்றும் தென்னை மரங்கள் மரக்கறி நெற் செய்கைகளை தாக்குவது இவற்றின் பிரதான இலக்காக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலைமையினால் விவசாயத்தை மட்டும் வாழும் மக்களின் பொருளாதார நிலைமை பெ ரும் பாதிப்படைந்து வருவதாகவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

பொது மக்கள் அச்சத்துடன் வெளியில் நடமாடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# லொறி முச்சக்கரவண்டி மோதி விபத்து

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் குயில்வத்தை பகுதியில் லொறி, முச்சக்கரவண்டி ஒன்றோடு ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். குயில்வத்தையிலிருந்து கினிகத்தேனை சென்ற முச்சக்கரவண்டி கினிகத்தேனை பகுதியிலிருந்து ஹற்றன் நாகேகி வந்த லொறியுமே இவ்வாறு நேற்றுமுன்தினம் மாலை விபத்துக்குள்ளானது.

முச்சக்கரவண்டியில் ஏற்பட்ட இயந்திர கோளாரே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர் .

**ஒல்டன் தோட்ட மக்கள் பணிபகிஷ்கரிப்பு**

# தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளரை இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா ஒல்டன் தோட்ட மக்கள் பணிபகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

மஸ்கெலியா சாமிமலை பகுதியிலுள்ள ஹொரண பிளான்டேசனுக்கு உரித்தான நான்கு பிரிவுகளைச் சேர்ந்த 300ற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வாறு பணிபகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர். தோட்ட முகாமையாளரையும், உதவி முகாமையாளரையும் அந்த தோட்டத்திலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் அல்லது இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தற்போதுள்ள தோட்ட நிர்வாகிகள் தொடர்ச்சியாக தொழிலாளர்களை தாக்கி வருவதாகவும் அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் இரண்டு தொழிலாளர்கள் தாக்கப்பட்டு கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.



தீ விபத்துக்குள்ளான வத்தளை முருகன் ஆலயத்தை பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் இந்துச் சமய கலாசார அலுவலகங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் பாபு சர்மா ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பான அறிக்கையொன்றை பிரதமருக்கு சமர்ப்பிக்கவுள்ளனர். அத்துடன் ஆலயத்தை புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான உத்தரவையும் செந்தில் தொண்டமான் பணிப்புரை வழங்கினார்.

# ஐ.நாவில் இலங்கையை காட்டிக் கொடுத்தவர் மங்கள சமரவீரவே

முன்னைய ஆட்சியில் அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையை காட்டிக்கொடுத்து, அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்ததன் விளைவாகவே தம்மால் எந்தவொரு சுயாதீன தீர்மானமும் எடுக்க முடியாது போனதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாதவர்கள் தற்போது ஜெனீவாவில் கோஷம் எழுப்பி இலங்கையை தண்டிக்க முயற்சித்துக் கொண்டுள்ளாரெனவும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், தாம் இன்று அனைத்தையும் நிராகரிப்பதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளோமென்றும் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையிலிருந்து தாம் வெளியேறிவிட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நமது இராணுவம் மீதும் நமது ஆட்சி மீதும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வேறு வழியில் தமது இராச்சியத்தை பல வீனப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதெனவும் விமல் தெரிவித்துள்ளார்.

எனினும் நம்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுகளுக்கும் அரசாங்கம் பதில் தெரிவிக்கும்.

அதேபோல் நமது இராணுவத்தை காப்பாற்றும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் விடுதலைப் புலிகளை அழித்ததை விரும்பாதவர்களும் இந்நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாதவர்களுமே தற்போது ஜெனீவாவில் கோஷம் எழுப்பி இலங்கையை தண்டிக்க முயற்சித்துக் கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவே

# 27 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு



சமஸ் பாஹிம்,
சுப்பிரமணியம் நிஷாந்தன்

பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவே 27 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்து மக்களுக்கு வழங்கியுள்ளோமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட்19 நெருக்கடியால் முழு உலகப் பொருளாதாரமும் சீர்குலைந்துள்ளது. முழு உலகளிலும் உற்பத்தி, பகர்ந்தலித்தல் மற்றும் நுகர்வுச் செயற்பாடுகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது. விமான நிலைகளும், துறைமுகங்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் பண்ட மாற்றங்கள் தடைப்பட்டுள்ளன. கோடிக்கணக்கானவர்கள் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளதுடன், வறுமையும் அதிகரித்துள்ளது. பட்டிணி மற்றும் போஷாக்கு குறைப்பாடுகளும் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் வாழ்க்கைச் செலவுத் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

சம்பிரதாய முறைமைகளுக்கு பதிலாக மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் பத்திரிகைகளில் ஒரு அறிவித்தலை விடுத்திருந்தோம். அத்தியாவசியப் பொருட்களை சந்தையிலுள்ள விலைக்கும் குறைவான விலையில் வழங்க கூடிய நேரடி இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அழைப்பை அதில் விடுத்திருந்தோம்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நேரடி இறக்குமதியாளர்களுடன் செய்துக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு குறைவான விலையில் 27 அத்தியாவசிய பொருட்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.







அக்குறணை ஐ டெக் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவசமாக நடத்திய 30 நாள் தொழில் நுட்ப வழிகாட்டல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் கல்வி நிறுவனத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன், பிரதேச சபை உறுப்பினர் சௌராஜ் மற்றும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படம் மாவத்தகம தினகரன் நிருபர்

## பலாந்தை முஹியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசல்

# நிர்வாக சபைத் தலைவர் மறைவுக்கு இம்தியாஸ் எம்.பி அனுதாபம்

பேருவளை விஷேட நிருபர்

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அகலவத்தை பலாந்தை முஹியத்தீன் ஜூம்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன அமைப்பாளரும் முன்னாள் விவாகப் பதிவாளருமான எம்.ஐ.எம் மர்ஸூக் ஹாஜியார் 08 ஆம் திகதி பலாந்தையில் காலமானார்.

இவரது மறைவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,...... பிரபல சமூக சேவையாளரான மர்ஸூக் ஹாஜியாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகும். பின்தங்கிய நிலையில் இருந்த பலாந்தை கிராமத்தை அபிவிருத்தி செய்வதில் முக்கிய பங்களிப்புச் செய்த அவர் இப்பிரதேச சிங்கள, முஸ்லிம் இன உறவைக் கட்டியெழுப்ப பலாந்தை ரஜமகா விகாராதிபதி உட்பட அரசியல்வாதிகள் சிங்கள சமூகத்தலைவர்களுடன் அரும் பாடுபட்டவர். அன்னார் செய்த சமுதாயப் பணிகளை வல்ல அல்லாஹ் அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்க பிராத்திக்கின்றேன்.



அப்புறப்படுத்தப்படும் வாழைத்தண்டையும் மானா புல்லையும் பயன்படுத்தி காகித உறை, பரிசு பொருட்கள் உள்ளிட்ட பல புதிய உற்பத்திகளை மேற்கொள்ளும் நடவடிக்கை தம்மிக்க ரத்னசிறியின் வழிகாட்டல்களின் கீழ் அநுராதபுரத்தில் இடம்பெற்று வருகின்றது. அத்தோடு ஜப்பான் பாசி, சோளத்தின் செட்டை மற்றும் சோள ஓலைகளையும் பயன்படுத்தி புதிய உற்பத்திகளை மேற்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த உற்பத்திகளை சுற்றுச்சூழல் நேய உற்பத்திகளாக மேம்படுத்தும் நோக்கிலான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் மருந்துப்பொருட்கள், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் பேராசிரியர் சன்ன ஜயசுமன கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

LANKA SATHOSA ලංකා සතොස

வர்த்தக அமைச்சு

# அத்தியாவசிய 27 பாவனைப் பொருட்களின் விலைக்குறைப்பு

நிலையான குறைந்த விலைக்கு, தரத்தில் கூடிய 27 அத்தியாவசிய பாவனைப் பொருட்களை, லங்கா சதொச, கூட்டுறவு கடைகள் மற்றும் Q - கடைகளில் எதிர்வரும் 03 மாதங்களுக்கு, கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

| | பண்டங்கள் | திறந்த சந்தையில் காணப்படும் விலை (ரூ) | சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை வலையமைப்பினூடாக விற்பனை செய்யப்படும் விலை (ரூ) | நுகர்வோருக்கான சலுகை (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | தீட்டாத சிவப்பரிசி (1 கி.கி) | 106 | 93 | 13 |
| 02 | தீட்டாத வெள்ளை அரிசி (1 கி.கி) | 105 | 93 | 12 |
| 03 | வெள்ளை நாட்டரிசி (1 கி.கி) | 109 | 96 | 13 |
| 04 | சம்பா (1 கி.கி) | 120 | 98 | 22 |
| 05 | கீரி சம்பா (1 கி.கி) | 140 | 125 | 15 |
| 06 | கோதுமை மா (1 கி.கி) | 105 | 84 | 21 |
| 07 | வெள்ளை சீனி (1 கி.கி) | 110 | 99 | 11 |
| 08 | சிவப்பு சீனி (1 கி.கி) | 140 | 125 | 15 |
| 09 | தேயிலை (01 ஆம் இலக்க 100 கி பக்கற்) | 130 | 95 | 35 |
| 10 | சிவப்பு பருப்பு (அவுஸ்திரேலியா) (1 கி.கி) | 188 | 165 | 23 |
| 11 | பெரிய வெங்காயம் - பாகிஸ்தான்/இந்தியா (1 கி.கி) | 140 | 120 | 20 |
| 12 | உருளைக்கிழங்கு - உள்ளூர் (1 கி.கி) | 215 | 180 | 35 |
| 13 | உருளைக்கிழங்கு - பாகிஸ்தான் (1 கி.கி) | 190 | 140 | 50 |
| 14 | கடலை (1 கி.கி) | 225 | 175 | 50 |
| 15 | காய்ந்த மிளகாய் (1 கி.கி) | 550 | 495 | 55 |
| 16 | டின் மீன் - உள்ளூர் (425 கிராம்) | 240 | 220 | 20 |
| 17 | டின் மீன் - இறக்குமதி செய்யப்பட்ட (425 கிராம்) | 280 | 265 | 15 |
| 18 | நெத்தலி - தாய்லாந்து (1கி.கி) | 700 | 575 | 125 |
| 19 | கோழியிறைச்சி - தோலுடன் (1 கி.கி) | 430 | 400 | 30 |
| 20 | உப்பு (கிறிஸ்டல் அயடைட்) (1 கி.கி) | 55 | 43 | 12 |
| 21 | பால்மா (400 கி) | 380 | 355 | 25 |
| 22 | சோயா எண்ணெய் (500 மி.லீ) | 470 | 310 | 160 |
| 23 | துணி துவைக்கும் சவர்க்காரம் STC (115 கி) | 53 | 48 | 5 |
| 24 | துணி துவைக்கும்/பார் சவர்க்காரம் - BCC (650கி) | 325 | 260 | 65 |
| 25 | நறுமண சவர்க்காரம் - STC (100 கி) | 63 | 56 | 7 |
| 26 | கைகழுவும் திரவம் (100 மிலீ) - ITC | 350 | 250 | 100 |
| 27 | முகக்கவசம் (SLS சான்று பெற்ற) | 25 | 14 | 11 |

# எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி.
## பகிரங்க ஏலவிற்பனை

எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 755/1, பன்னிபிட்டி வீதி, பத்தரமுல்லை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 434, E.W பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 61/2, கண்டி வீதி. திஹாரிய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 19, பிரதான வீதி, கேகாலை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 81, கண்டி வீதி, வரக்காபொல |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 13, புகையிரத நிலைய வீதி, மாத்தறை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 02, எச்.வி. கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 149, பிரதான வீதி, தெனியாய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல.65/A, ஸ்ரீசதர்மாவத்தை, மாளிகாவத்தை கொழும்பு 10. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 282 நாகலகம் வீதி, கொழும்பு 14 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 52/17, கொத்தாடுவ புதிய நகரம், கொத்தாடுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 21, புனித ஜோசப் வீதி .கொழும்பு 14 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 9 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 66, ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13 |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 197, செட்டியார் தெரு,கொழும்பு 11. |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம |
| 01/08/15/22 பங்குனி 2021 | ரஜரட்ட கட்டிடம், ,பிரதான வீதி, கதுருவெல, பொலன்னறுவை |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம் |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை |
| 01/08/15/22 பங்குனி 2021 | பிரதான வீதி, மெதிரிகிரிய |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 24 ,சிலாபம் வீதி, ஆனமடுவ |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டி |
| 01/08/15/22 பங்குனி 2021 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரெலிய |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம் |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம் |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 57, வேயங்கொட வீதி, மினுவாங்கொட |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 229/1, கடவத்தை வீதி, கனேமுல்லை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 69, கிரி உல்ல வீதி திவுலபிடிய |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 107, புனித ஜோசப் வீதி, நீர்கொழும்பு |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 75A சிலாபம் வீதி, மாரவில |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 18, எலகந்தை, ஹெந்தலை, வத்தளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 17, புகையிரத நிலைய வீதி. ஹெந்தலை சந்தி, வத்தளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவெல |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 722, வராகொட வீதி, விகாரைச் சந்தி, களனி |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொடை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 139/6, கண்டி வீதி, கடவத்தை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 66, காலி வீதி, கல்கிஸ்ஸை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 11, கல்தமுல்லை வீதி, மொரட்டுவை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 3 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 245, ஸ்ரீசங்கராஜா மாவத்தை, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 54, டீ.எஸ். சேனாநாயக்க மாவத்தை, பொரளை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 556,558, மருதானை வீதி, கொழும்பு 10 |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 10 புகையிரத நிலைய வீதி, மொறட்டுவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 68, ஹொரணை வீதி, பிலியந்தலை |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ |
| 02/09/16/23 பங்குனி 2021 | இல. 227, டீ சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமாகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 69 தெஹிவளை வீதி, மஹரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 124/A, துடுகெமுனு வீதி, கொஹுவல |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 18, கெசெல்வத்தை, பாணந்துறை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 508, காலி வீதி, பாணந்துறை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரணை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 534, காலி வீதி, வாத்துவ |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர் |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 175/A, காலி வீதி, பேருவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 358, காலி வீதி, அளுத்கம |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 124, காலி வீதி, தெஹிவளை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 676, காலி வீதி, கொழும்பு 3 |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 150, பிரதான வீதி, காலி |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை |
| 03/10/17/24 பங்குனி 2021 | இல. 598E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 56,57, எட்வின் விக்ரமரத்ன கடைத்தொகுதி, புதிய நகரம், மஹியங்கனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 10/2, இலங்கை வங்கியின் எதிரே, புதிய நகரம்,தெஹியத்தகண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 226, டீ.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்டை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 55, கீழ் வீதி, பதுளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 3, நுவரெலிய வீதி, வெலிமடை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 26, வங்கி வீதி, பதுளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 71, குயீன் எலிசபத் மாவத்தை, நுவரெலியா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 473, நுவரெலிய வீதி, புசல்லாவை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 22, நுவரெலிய வீதி, கம்பளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 115, கொட்டுகொடல்ல வீதி, கண்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 13A, கண்டி வீதி, கெலிஒயா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 52, டன்பார் வீதி, ஹட்டன் |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 66, நாவலபிட்டி வீதி, கம்பளை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 395, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 367/1, அளுத்மாவத்தை, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 81, முகத்துவாரம் வீதி, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 03, புனித லூசியாஸ் வீதி ,கொட்டாஞ்சேனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரில், அம்பாறை |
| 04/12/18/25 பங்குனி 2021 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 9 |
| 04/12/18/25 பங்குனி 2021 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை |
| 04/12/18/25 பங்குனி 2021 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 04/12/18/25 பங்குனி 2021 | பிரதான வீதி, பொத்துவில் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 25, எட்டியாந்தோட்டை வீதி, அவிசாவளை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 49 சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 21, புதிய நகரம் வீதி, எம்பிலிப்பிட்டி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொடை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 301, மொகமட் அலியார் கட்டிடம், பிரதான வீதி, காத்தான்குடி 01 |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா |
| 05/13/19/26 பங்குனி 2021 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 05/13/19/26 பங்குனி 2021 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 05/13/19/26 பங்குனி 2021 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | சந்தைத் தொகுதிக்கு எதிரில், பிரதான வீதி, செங்கலடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 187, பிரதான வீதி, மன்னார் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா |
| 05/13/19/26 பங்குனி 2021 | 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு |
| 05/13/19/26 பங்குனி 2021 | PW வீதி, முல்லைத்தீவு |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 55, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய் |
| 05/13/19/26 பங்குனி 2021 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 05/13/19/26 பங்குனி 2021 | பிரதான வீதி, மல்லாவி |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

LB FINANCE

சிரேஷ்ட முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி

275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, (OPA கட்டடம்) கொழும்பு 07.

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) பிஎல்சி |
| கம்பனி இலக்கம் | : பிகியு 143 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : கொழும்பு ஹில்டன் மே /பா., எச்சலன் சதுக்கம், இல.2, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. |
| கம்பனியின் புதிய பெயர் | : ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) லிமிட்டெட் |

ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) பிஎல்சி இற்காகவும் அதன் சார்பிலும்
இற்காகவும் அதன் சார்பிலும்
பி டபிள்யு கோப்பரேட் செக்கிரற்டேரியல் (பீவீடி) (எல்டீடி)
கம்பனி செயலாளர்கள்

05.02.2021

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.11.2019 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 24.02.2021 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோ'ஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய

24.02.2021

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
நம்பிக்கையினால் கட்டியெழுப்பப்பட்ட புத்தாக்கச் சக்தி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

## பெறுகை அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 48

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவர் பின்வரும் உருப்படியை வழங்குவதற்காக, இலங்கையிலுள்ள வழங்குநர்கள் மற்றும் அவர்களின் அங்கீகாரம் பெற்றுள்ள முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

| | |
|---|---|
| உருப்படி | - UPS 30 KVA (3 phase in / 3 phase out) |
| தேவையான எண்ணிக்கை | - 01 அலகு |
| விலைமனு மூடப்படும் திகதி | - 24.02.2021 - பி.ப.2.00 |
| விலைமனு இலக்கம் | - SCP04/UPS/NCB12/2020-28 |

இவ்வறிவித்தல் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்கள் தொடர்பான விலைமனுப்படிவங்கள், வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை எழுத்துருவ விண்ணப்பமொன்றுடன் மீளளிக்கப்படாத ரூபா1000.00 இற்கான கட்டணத்தை செலுத்தி, இல.118 டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரியிலமைந்துள்ள அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் வழங்கல் பிரிவினால் வழங்கப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு மூடப்படும் இறுதித்தினத்திற்கு முந்திய தினம் பி.ப2.00 இற்கு முன்னர், வழங்கல் பிரிவினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் வாரவேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி. ப. 4.15 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**பெறுகைக் குழுத்தலைவர்**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**22.01.2021**

**தொலைபேசி/தொலைநகல்: 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 51

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார். தெரிவு செய்யப்படும் விநியோகஸ்தர்கள், கொள்வனவு கட்டளை கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் விநியோகத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

1. **Item -** Grade - Gray Board - 2 mm±5%-25''x31"
   -33,500Sheets Substance-1200 gsm±5%
1. **Item -** Grade - Gray Board - 2.5 mm±5%-25''x31"
   -7,500Sheets Substance-1500 gsm±5%

| | |
|---|---|
| **விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம்** | : 2021.02.24 ஆந் திகதி பி.ப.2.00 மணி வரையாகும். |
| **விலைமனு குறிப்பு இல** | : SCP6/GB/NCB04/2021-04 |

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3500/- கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும். எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**பெறுகைக் குழுத்தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**2021.02.04**

**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**

Repeat Your ad For Better Offers

## விஷேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இரத்கம, மாவடவில, ''அமலி'' என்ற முகவரியைச் சேர்ந்தவரும், என் 8054534 என்ற இலக்கமுள்ள இலங்கை கடவுச்சீட்டினதும் 910290396V என்ற இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டையின் உரித்தாளரும் தற்போது ஐக்கிய அரபு குடியரசின் சார்ஜா 1793, முவாலிய் கொம்மர்சியல் என்ற முகவரியில் வசிப்பவருமான தொம்மதுர ஹிரான் ஹசந்த த சில்வா ஆகிய நான், ஐக்கிய அரபு குடியரசின் துபாயிலுள்ள இலங்கை கொன்சுலேட் நாயகம் கே.ஏ.அய்.ஆர் பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2019.05.03 ஆம் திகதியிடப்பட்டதுமானதும் இரத்கம, மாவடவில, ''அமலி'' என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 570491199V என்ற தேசிய அடையாள அட்டையின் உரித்தாளருமாகிய தொம்மதுர ஜயரத்ன த சில்வா என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவமானது 2021.02.10 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இத்தால் பிரகரனடப்படுத்துகின்றேன்.

**தொம்மதுர ஹிரான் ஹசந்த த சில்வா,**
**'அமலி', மாவடவில, இரத்கமை.**
**தற்போது வசிக்குமிடம்: முவாலிய் கொம்மர்சியல், 1793, சார்ஜா, ஐக்கிய அரபுக் குடியரசு.**

# இலங்கை வங்கி

## ஏலவிலைக் கோரலுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை வங்கிக்கான விரைவுத் தபாற் சேவையை வழங்குதல்

### கேள்வி இல. BOC/PROC/P/2020/221

1. இலங்கை வங்கி, "BOC சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கிச் சார்பாக இலங்கை வங்கியின் தொகுதி பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை வங்கிக்கு விரைவுத் தபாற் சேவையை வழங்குவதற்காக அச்சேவை வழங்குநர்களிடமிருந்து ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலைக் கூறல்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கோருகின்றார்.

   **வேலைகளானவை பின்வரும் செயற்பாடுகளைக் உள்ளடக்குகின்றது.**

   a) தலைமையகத்திலிருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை மாகாண அலுவலகங்கள், பிராந்திய கடன் நிலையங்கள் மற்றும் கிளைகளில் ஒப்படைத்தல்.

   b) மாகாண அலுவலகங்களில் இருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை பிராந்திய கடன் நிலையங்கள் மற்றும் கிளைகளில் ஒப்படைத்தல்.

   c) கிளைகள், பிராந்திய கடன் நிலையங்களிலிருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை மாகாண அலுவலகங்கள் மற்றும் தலைமையகத்தில் ஒப்படைத்தல்.

   d) மாகாண அலுவலகங்களில் இருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை தலைமையகத்தில் ஒப்படைத்தல்.

   e) தலைமையகத்தில் இருந்து சேகரிக்கப்படும் தபாற் பைகளை நகரக் கிளை, தப்ரபேன் கிளை, பெட்டா கிளை, கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வங்கி முதன்மை நிலையம் மற்றும் ஜிந்துப்பிட்டிய களஞ்சியத்திற்கு ஒப்படைத்து அவ்விடங்களில் சேகரிக்கப்பட்ட தபாற் பைகளை தலைமையகத்தில் ஒப்படைத்தல்

   இவ் விரைவுத் தபாற் சேவையானது உயர் தரத்திலும் இலங்கை வங்கியின் முகாமைத்துவத்திற்கு முழுத் திருப்தியை வழங்கும் வகையிலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

   ஆரம்ப ஒப்பந்தகாலமானது இரண்டு ஆண்டுகளாவதுடன் சேவை வழங்குநரின் ஏற்றுக்கொள்ளத்தக்க செயற்பாட்டிற்கமைய அவ் ஒப்பந்தமானது வங்கியின் தேவைக்கமைய அதே விலைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்டு மேலும் ஒருவருட காலத்திற்கு நீடிக்கப்படலாம்.

2. ஏலவிலைக் கூறல்கள் தேசிய ஒப்பீட்டு நடைமுறைக்களுக்கமைவாக இடம்பெறும்.

3. ஏலவிலை கூறுவதற்கு ஏலவிலை கோருபவர் கீழ்க்கண்ட தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

   a) இலங்கை வங்கியின் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ளடங்காதவராக இருத்தல் வேண்டும்.

   b) விரைவுத் தபாற் சேவை வழங்குநராக குறைந்தபட்சம் 03 வருடகால செல்லுபடியாகும் வியாபாரப் பதிவினைக் கொண்டிருக்க வேண்டும்

   c) கடந்த 03 ஆண்டுகளுக்குள் ஒரு நிறுவனத்திற்குரிய 250 இடங்கள் அல்லது அதற்கதிகமான இலங்கை முழுவதற்குமான விரைவுத் தபாற் சேவையை வழங்கும் செயற்றிட்டத்தைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

   d) இலங்கை முழுவதிலும் சேவையை வழங்கக்கூடிய வகையில் ஒவ்வொரு நிர்வாக மாகாணத்திலும் குறைந்தபட்சம் ஒரு பிராந்திய சேவை நிலையத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

   e) ஏலவிலை கூறுபவரால் முன்வைக்கப்படும் முறைமையினைச் செயற்படுத்துவதற்குப் போதியளவு எண்ணிக்கையிலான தனிப்பட்ட வாகனங்கள் போக்குவரத்து ஏற்பாடுகளுடன் இருக்க வேண்டும்.

   f) கீழே குறிப்பிடப்பட்ட நிதித் தகைமைகளைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

      i. விரைவுத் தபாற் சேவைக்கான கடந்த மூன்று வருடங்களுக்குரிய குறைந்தபட்ச வருடாந்தப் பணப் புரள்வானது ரூ. 25 மில்லியனாக இருக்க வேண்டும்.

      ii. திரவநிலைச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் குறைந்தபட்சம் ரூ. 5 மில்லியனாகக் காணப்பட வேண்டும்.

4. இவ்விலைக் கோரலுக்கு ஆர்வமுடையோர் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு வேலை நாட்களில் 2021.02.10 ஆம் திகதி முதல் 2021.03.03 ஆம் திகதி வரை 0900 மணி முதல் 1430 மணிவரை விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

5. விலைக்கோரல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. பதின் மூன்றாயிரத்து ஐந்நூறை (ரூ. 13,500/-) VAT உடன் (ரூ. 12,500/- + 1,000/- VAT உடன்) செலுத்தி கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 2021.02.10 ஆம் திகதி முதல் 2021.03.03 ஆம் திகதி வரை 0900 மணி முதல் 1430 மணிவரை எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

6. கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் பெறப்பட்ட ஏலவிலைக் கூறல்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். நகற்படுத்தப்பட்ட ஏலவிலைக் கூறல் ஆவணங்களின் மூலம் ஏலவிலைகூறல்களை சமர்ப்பிக்க முடியாது.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைக்கூறல்களை 2021.03.04 திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கித் தலைமையகத்தின் வரவேற்புப் பகுதியில் காணப்படும் பெட்டியினுள் இட வேண்டும் அல்லது, கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைக்கூறல்கள் திறக்காது நிராகரிக்கப்படும். விலைக்கூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறல்களை திறக்கும்போது விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

8. ஏலவிலை கூறல்கள் 2021.06.03 வரை செல்லுபடியாகும்.

9. முற்கூட்டிய விலைக்கூறல் கூட்டம் 2021.02.18 ல் 1100 மணிக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 3ஆம் தளத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

10. ஏலவிலை கூறல்களானவை, இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையிற் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிற் பெற்றுக்கொண்ட ரூ. 800,000.00 (ரூபா. எண்ணூறாயிரம்) பெறுமதியானதும் 2021.07.01 வரை செல்லுபடியானதுமான பிணை முறியுடன் இணைத்து நிபந்தனையற்றதும் மாற்ற முடியாததும் தேவையின்போதானதுமான வங்கி உத்தரவாத வடிவிற் காணப்பட வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக அதே தொகைக்கான வங்கி வைப்புக்கள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். விலைக்கூறுபவரின் தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

11. 1987ஆம் ஆண்டு 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் அல்லது திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய ஏலவிலைக் கூறலின் PCA3 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

12. ஏலவிலை கூறலில் கையொப்பமிடும் அங்கீகாரம் பெற்ற நபரின் கையொப்பமானது நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுமத்தினால் அல்லது அங்கீகாரம் பெற்ற நபரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஏலவிலை கூறலுடன் இணைக்கப்பட வேண்டும்.

13. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா ஏலவிலைக் கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

14. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி), பிரதான முகாமையாளரை தொலைபேசி இலக்கம் 0112204260 / 0112544310, தொலைநகல் இலக்கம் 0112449629, மின்னஞ்சல் முகவரி : properties@boc.lk இல் தொடர்புகொள்ள முடியும்.

தலைவர்
தொகுதி பெறுகைக் குழு
இலங்கை வங்கி,
BOC சதுக்கம், இல 01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

### சம்பளங்கள் சபைகள் கட்டளைச் சட்டம்

# அறிவித்தல்

## தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை

(136ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்திக் கைத்தொழிலுக்கான சம்பளச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இங்கு அட்டவணையில் நிலையாகக் குறிப்பிடப்பட்டுள்ள சுயமான தீர்மானமாக அந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பந்தியொன்றை மாற்றுவதற்கு அந்த சம்பளச் சபை உத்தேசித்துள்ளது என்பதனை அக்கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆட்சேபனைகள் 2021 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முன்வைக்கப்படும் சகல ஆட்சேபனைகளும் அந்த ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றினைக் கொண்ட ஆவணமாகவிருத்தல் வேண்டும்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
**தலைவர்,**
**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்திக் கைத்தொழிலுக்குமான சம்பளச்சபை**

**2021-02-09ஆம் திகதி,**
**கொழும்பு - 05.**
**தொழில் திணைக்களத்தில்.**

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்திக் கைத்தொழிலுக்குமான சம்பளச் சபையினால் செய்யப்பட்ட 1945 ஜுலை மாதம் 31ஆம் திகதிய 9441ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டதும், காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டதும், இறுதியாக 2014 ஜுலை மாதம் 24ஆம் திகதிய 1872/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் மாற்றம் செய்யப்பட்ட தீர்மானம் அந்த அட்டவணையின் 11ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியை பதிலீடு செய்யப்பட்டு மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

**11ஆம் பகுதி**

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வேலைக்காக செலுத்த வேண்டிய நாளாந்த சம்பளத்தின் அளவு

| | |
|---|---|
| **தொழிலாளர்** | **900.00** |
| **வரவுசெலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு** | **100.00** |

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

**வன சீவராசிகள் பாதுகாப்பு, மின் வேலிகள் மற்றும் அகழிகளை நிர்மாணம் உட்பட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வன மீள்ப் பயிர்ச்செய்கை மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பின்வரும் தேசிய பூங்காக்களின் தலைமை அலுவலகக் கட்டிடங்கள், அலுவலக இடப்பரப்புகள், பங்களாக்கள் மற்றும் பங்களா இடப்பரப்புகள் மற்றும் பங்களாக்களில் உள்ள துணிகளைச் சலவை செய்வதற்கு 2021ஆம் வருடத்தின் பொருட்டு தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் தகுதி வாய்ந்த மற்றும் ஆற்றலுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | பூங்காக்களின் பெயர் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|
| 1 | யால | 72,000.00 |
| 2 | உடவளவை | 54,000.00 |
| 3 | வில்பத்து | 72,000.00 |

01. கேள்விதாரர்கள் ஒரு லொட்டிற்கு, இரண்டு லொட்டிற்கு அல்லது மூன்றுக்கும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம்.
02. சுத்திகரிப்புச் சேவைகளை வழங்க வேண்டிய தேசிய பூங்கா தலைமையலுவலகத்திலுள்ள அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் முற்றத்தின் பரப்பளவு, கட்டிடங்களில் அமைவிடம் தொடர்பாகக் காட்டும் GPS ஒருங்கிணைப்புகள் உட்பட ஏனைய தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதுடன் தேவையானால் இடப்பரப்பைப் பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.
03. சுத்திகரிப்புச் சேவைகளை மேற்கொள்வதற்கு இயைபுடைய ஒப்பந்த நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை நடாத்திச் செல்வதற்கான வியாபாரப் பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் 2021-01-01ஆம் திகதியில் 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைச் சமர்ப்பிக்கும் தினத்தில் ஆகக் குறைந்தது வேறு பத்து (10) நிறுவனங்களுக்காவது இதனையொத்த சேவைகளை வழங்கியிருத்தல் வேண்டும்.
04. கடந்த 03 வருடங்களினுள் மாதமொன்றிற்கு 300,000.00 ரூபாவிற்குக் குறையாததும் வருடத்திற்கு 3,600,000.00 ரூபாவுக்குக் குறையாத சேவை வழங்கியமையை ஆவணச் சாட்சி மூலம் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் நிதி ஸ்திரத்தன்மையுடைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதை உறுதி செய்வதற்கு கடந்த கிட்டிய மூன்று வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 3 லொட்களுக்காகவும் கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிப்பதாயின் நிறுவனம் வசம் தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 75ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2 லொட்களுக்காக கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிப்பதாயின் நிறுவனம் வசம் தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 50ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் 1 லொட்டுக்காக கேள்வியைச் சமர்ப்பிக்க உத்தேசிப்பதாயின் நிறுவனம் வசம் தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 25ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதை ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
06. தயாரித்துக் கொண்ட கேள்விப் படிவங்களை 2021-03-01ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணங்களுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான கேள்விப் பிணை அல்லது கேள்விப் பிணை முறியொன்றை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது வனசீவராசிகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2021-03-02ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
08. கேள்விப் பிணை முறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2021-03-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
11. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

### புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்

**சுற்றாடல் அமைச்சு**

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதிக்கான இடவசதியைப் பெற்றுக்கொள்ளல்

## இரத்தினபுரி பிரதேச அலுவலகம்

இந்தப் பணியகத்தின் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. அக்கட்டிடம் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

- இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தின் முறையான அனுமதியைப் பெற்ற கட்டிடமாகவிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் விஸ்தீரணம் சுமார் 2500 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்
- குறைந்தபட்சம் 05 அறைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 02 மலசலகூடம் உள்ளேயும் 01 மலசலகூடம் வெளியேயும் இருத்தல் வேண்டும்.
- குழாய் நீர் மற்றும் மின்சார வசதிகள் இருத்தல் வேண்டும்.
- இரத்தினபுரி நகர எல்லையிலிருந்து பிரதான வீதிக்கு முகப்பாக சுமார் 04 (நான்கு) கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு வேலி அல்லது மதில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 04 வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் முழுமையாக அலுவலகத்திற்கு ஒதுக்கப்படல் வேண்டும் என்பதுடன் வேறு தேவைப்பாடுகளுக்கு பெற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினர் ''இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்காக கட்டிமொன்றை வாடகை அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விலைமனு'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு குறித்த இடத்தின் காணி உறுதியின் பிரதி, காணியின் நில அளவை வரைபடம், கட்டிட உரிமையாளரைத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் சகிதம் 2021-03-03ம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியது:** விண்ணப்பங்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடமானது பணியகத்திற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும் போது அக்கட்டிடம் அனர்த்தம், களவு, கொள்ளை மற்றும் தீ அபாயம் பொருட்டு காப்புறுதி செய்யப்படுதல் உரிமையாளரின் பொறுப்பாகும்.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டிமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

### இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனு அறிவித்தல்

**JCT இல், உபயோகிக்கப்பட்ட 04 எண்ணிக்கையான STS GANTRY CRANES மற்றும் 06 எண்ணிக்கையான RTG TRANSFER CRANES களின் விற்பனை**

விலைமனு எண் : **LD/S/T/UD/02/2021**

**திகதி : 2021.02.24**

கொழும்பு துறைமுகத்தில் உபயோகிக்கப்பட்ட, பின்வரும் 04 எண்ணிக்கையான STS gantry Crane மற்றும் 06 எண்ணிக்கையான RGT Transfer Crane களின் விற்பனை தொடர்பாக, இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக் கூறுகள் அழைக்கப்படுகின்றன.

| உருப்படி எண் | அமைவிடம் | வகை | Crane இல | நிகர எடை கிகி |
|---|---|---|---|---|
| 1 | Jaya Container Terminal (JCT) | Gantry Crane - STS | J -17 | 610,000 |
| 2 | | Gantry Crane - STS | J -18 | 610,000 |
| 3 | | Gantry Crane - STS | J -19 | 630,000 |
| 4 | | Gantry Crane - STS | J -20 | 630,000 |
| 5 | | Transfer Crane - RTG | TC -10 | 165,000 |
| 6 | | Transfer Crane - RTG | TC -11 | 165,000 |
| 7 | | Transfer Crane - RTG | TC -12 | 165,000 |
| 8 | | Transfer Crane - RTG | TC -13 | 165,000 |
| 9 | | Transfer Crane - RTG | TC -14 | 165,000 |
| 10 | | Transfer Crane - RTG | TC -15 | 165,000 |

மீளளிக்கப்படாத கட்டணமான ரூ.250/- (பெசேவ சகிதம்) செலுத்தப்படுவதன் மூலம், 2021.02.12 அன்று 10.00 மணி முதல் 2021.02.19 அன்று 14.30 மணி வரை, கொழும்பு -01, லோட்டஸ் வீதி, கால்வாய் பொறித்தொகுதி, இல.15 இலுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை, லொஜிஸ்டிக் பிரிவு, விற்பனைப்பிரிவு அலுவலகத்தில் விலைமனுப்பட்டியலைப் பெற்றுக்கொள்ளலாம்.

2021.02.12 முதல் 2021.02.19 வரையான வேலை நேரங்களில், கொழும்பு துறைமுகத்திற்குள் இருக்கும் JCT பொறித்தொகுதியிலுள்ள பாரம் தூக்கிகளை (Cranes) பரீட்சித்துப் பார்ப்பதற்கு உத்தேச விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

விலைமனுச் சபைத் தலைவரிற்கு முகவரியிடப்பட்டு, விலைமனுதாரரினால் ஒரு வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மீளளிக்கப்படும் வைப்பான ரூ.1,000,000/- செலுத்தப்படுவதன் மூலம், விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.

பண வைப்பு தொடர்பான பற்றுச்சீட்டின் பிரதியொன்று ஒவ்வொரு விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும். பண வைப்பு பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்படாத, பூர்த்தி செய்யப்படாத விலைமனுப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனு நிபந்தனைகள் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு அறிவூட்டும் ஒரு முன்னோடி விலைமனுக்கூட்டம், பணிப்பாளரின் அலுவலகத்தில் (லொஜிஸ்டிக்) 2021.02.22 அன்று பி.ப.2.00 மணிக்கு நடைபெறும். ஒரு பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதியொருவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2021.02.24 அன்று, 08.00 மணி மற்றும் 10.00 மணி இடையே, இலங்கை துறைமுக அதிகார சபையின் லொஜிஸ்டிக் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டிக்கு சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாக, கொழும்பு - 01, லோட்டஸ் வீதி, கால்வாய் பொறித்தொகுதி, இலக்கம் 15, இலங்கை துறைமுக அதிகார சபை, லொஜிஸ்டிக் பிரிவு, பணிப்பாளரின் (லொஜிஸ்டிக்) அலுவலகத்தில் திறக்கப்படும். குறித்த விலையானது, கிலோகிராம் ஒன்றிற்கு விலைமனு கூரிடப்படல் வேண்டும். விலைமனுக் கூரிடப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமாக, சுங்கவரி, பெசேவ மற்றும் ஏற்புடையதாகும். ஏனைய அரசாங்க வரிகள் அறவிடப்படும்.

அனைத்து விலைமனுதாரர்களும், பெசேவ செலுத்துநர்களாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஏற்புடையதாகும் பெசேவ, வெற்றியாளரான விலைமனுதாரர்களால் செலுத்தப்படல் வேண்டும். யாதேனுமொரு விலைமனுதாரர் பெசேவ தொடர்பாக பதிவு செய்யப்படவில்லையெனில், அவரின் (ஆண்/பெண்) நிறுவனம் பெசேவ தொடர்பாக பதிவு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

“பட்டியல்படுத்தப்பட்ட உருப்படிகளின் ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட முன்னர், முன்கூட்டியே கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். விலைமனு கையளிப்பு கடிதம் வழங்கப்பட முன்னர், ரூ.5,000,000/- வைப்பு, வெற்றியாளரான விலைமனுதாரரால் வைப்பிலிடப்படல் வேண்டும். ஆகக்குறைந்த மிகுதித் தொகையான ரூ.2,500,000/- நிலையானதாக வைக்கப்படுவதன் மூலம் ஒப்படைக்கப்படும் தொகை அடிப்படையில் வெற்றியாளரான விலைமனுதாரரினால் பணம் செலுத்தப்படல் வேண்டும்.

தேவையேற்படும் பட்சத்தில் பட்டியல்படுத்தப்பட்ட உருப்படிகளை கொள்வனவு செய்தல், அகற்றல் மற்றும் போக்குவரத்து செய்தல் தொடர்பாக சம்பந்தப்படும் அதிகாரிகளிடமிருந்து வேண்டப்படும் அனுமதிப்பத்திரத்தை வெற்றியாளரான விலைமனுதாரர் பெற்றுக்கொள்ள வேண்டும். செயன்முறையை எளிதாக்குவதற்காக, SLPA மூலம் தேவைப்படும் கடிதங்கள் வழங்கப்படும்.

மேலேயுள்ள பட்டியல்படுத்தப்பட்ட உருப்படிகளின் அகற்றலை எளிதாக்குவதற்கு SLPA ஆனது, எந்தவொரு உபகரணம் அல்லது துணைச் சேவையையோ இலவசமாக வழங்காது. மேற்படி உருப்படிகளின் அகற்றல் செயற்பாடுகளுக்காகத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளை, வெற்றியாளரான விலைமனுதாரர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் அனைத்து நபர்களும், துறைமுகத்தின் வழமையான செயற்பாடுகளுக்கு தடங்கல்களோ அல்லது இடையூறுகளோ ஏற்படாத வகையிலும் துறைமுகத்தின் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படாத வகையிலும் நடந்து கொள்வது முக்கியமானதாகும்.

விலைமனுதாரர் அல்லத அவரின் பிரதிநிதிகளின் துர்நடத்தையால் SLPA இன் சொத்துக்களுக்கு அல்லது ஊழியர்களுக்கு ஏற்படும் எந்தவொரு சேதம் அல்லது இழப்பு தொடர்பாக, SLPA மூலம் மதிப்பீடு செய்யப்படும். சேதம் அல்லது இழப்புகளுக்கு குறித்த விலைமனுதாரர் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும்.

SLPA ஊழியர்கள், அவர்களின் வாழ்க்கைத்துணை (ஆண்/பெண்) மற்றும் அவர்களின் திருமணமாகாத பிள்ளைகள், விலைமனுக்களைச் சமர்ப்பித்தல், எவ்வகையிலும் விலைமனுவில் கலந்துகொள்ளல் விலைமனுவில் உதவுவது தடுக்கப்பட்டுள்ளது.

விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உரித்தான விலைமனுதாரர்கள் கட்டுப்படல் வேண்டும்.

**தலைவர் - விலைமனுச் சபை**
**2021.02.10**
**இலங்கை துறைமுக அதிகார சபை, லொஜிஸ்டிக் பிரிவு,**
**இல.15, கால்வாய் பொறித்தொகுதி, லோட்டஸ் வீதி, கொழும்பு - 01.**

# ‘பிரஜைகள் சபை’ பிரதிநிதிகளுக்கான வழிகாட்டல்

*புத்தளம் தினகரன் நிருபர்*

‘பிரஜைகள் சபை’ பிரதிநிதிகளுக்கான வழிகாட்டல் செயலமர்வொன்று அண்மையில் புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் நகர சபை எல்லைக்குள் காணப்படுகின்ற 11 வட்டாரங்களிலும் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்களை முன்னெடுக்கும் போது நகர சபைக்கு ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும், வட்டார ரீதியான பிரச்சினைகளை கையாளவும் ‘பிரஜைகள் சபை’ என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நகர சபை உறுப்பினர்கள், மதஸ்தலங்களின் நிர்வாகிகள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மூத்த பிரஜைகள், ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள், கல்வியியலாளர்கள், இளைஞர்கள் என அனைவரையும் உள்ளடக்கி இவ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள ‘பிரஜைகள் சபை’ பிரதிநிதிகளுக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்கான குறித்த இந்த செயலமர்வு புத்தளம் நகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

புத்தளம் நகர பிதா கே.ஏ. பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் நகர சபை உறுப்பினர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரஜைகள் சபைகளின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஜெயச்சந்திரன் இராஜினாமா

*காரைதீவு குறூப் நிருபர்*

சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஸ்ரீல.சு.கட்சி அமைப்பாளருமான வி.ஜெயச்சந்திரன் தனது உறுப்பினர் பதவியை நேற்று (9) செவ்வாய்க்கிழமை பகல் இராஜினாமாச் செய்துள்ளார்.

வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் நேற்று தனது இராஜினாமாக் கடிதத்தை பிரதேச சபைத் தவிசாளரிடம் கையளித்தார். அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவர் தனது உறுப்பினர் பதவியை பட்டியலிலுள்ள திருமதி குலமணி தவசீலனுக்கு வழங்குமுகமாக இவ் இராஜினாமாவைச் செய்துள்ளார்.

ஜெயச்சந்திரன் 2018.02.10ஆம் திகதி நடைபெற்ற சம்மாந்துறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் ஸ்ரீ.ல.சு. கட்சி சார்பாக போட்டியிட்டு 1032 வாக்குகளைப் பெற்று உறுப்பினரானார்.

அன்றைய களநிலைவரப்படி ஸ்ரீல.சு.கட்சியின் ஆதரவு ஆட்சியமைக்க தேவைப்பட்டதால் அவர் கட்சியால் உபதவிசாளராக நியமிக்கப்பட்டார்.

அத்தருணம் பேசிக் கொண்டதற்கமைவாக இரு வருடங்களின் பின்னர் தனது சக உறுப்பினரான அச்சிமொகமட்டிற்கு தனது உப தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்து 2020.02.11ஆம் திகதி மனசாட்சிப்படி ஒப்படைத்துவிட்டு உறுப்பினராகப் பணியைத் தொடர்ந்தார்.

இந்நிலையில் தன்னுடன் தனதூரில் இணைந்து தேர்தல் வெற்றிக்கு பக்க பலமாக நின்ற திருமதி குலமணிக்கு தனது உறுப்பினர் பதவியை ஒப்படைப்பதற்காக தற்போது இராஜினாமாச் செய்துள்ளார்.

### இலங்கை (SLAS),SLAS (Limited) தேர்வு பட்டியல்;

# தமிழ் மொழி மூலமான எவரும் உள்ளடக்கப்படவில்லை

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

இலங்கையில் அதியுயர்ந்த சேவையாக கருதப்படும் (SLAS) இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட SLAS (Limited) போட்டிப் பரீட்சை நேர்முகத் தேர்வு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன. இந்த பட்டியலின் படி தமிழ் மொழி மூலமான பரீட்சார்த்திகள் எவரும் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையானது திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரு பிரிவுகளில் நடைபெறுகின்ற நிலையில் கடந்த வருடம் 2020ஆம் ஆண்டு தை மாதம் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள் நடைபெற்றிருந்தன.

203 திறந்த மற்றும் 53 மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்ளுக்காக பரீட்சை நடைபெற்றிருந்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்பட்டியலை இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை (09) வெளியிட்டுள்ளது.

53 பேரினை தெரிவு செய்வதற்காக நேர்முகத் தேர்வுக்கு தெரிவாகியுள்ள 69 பேர்களுடைய பெயர் விபரங்கள் வெளியாகியுள்ள நிலையில் தமிழ்பேசும் மாணவர்கள் எவரும் நேர்முக தேர்வுக்கான பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்பது அனைவரிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக பரீட்சார்த்திகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த முறை 2017 இல் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் 47 பேர் தெரிவாகியிருந்த நிலையில் 17 பேர் தமிழ் பேசும் சமூகத்தினை பிரதிநிதித்துவப் படுத்தி சித்தியடைந்ததுடன் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவில் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணத்தினை சேர்ந்த பரணிதரன் மற்றும் சிவராஜா ஆகியோர் முதல் இரண்டு இடங்களை பெற்றிருந்ததுடன் இம்முறை வெளியாகியுள்ள பெறுபேறுகளின் படி தமிழ் பேசும் மாணவர்கள் எவரும் தெரிவாகவில்லை என்பது கவலையளிப்பதுடன் இது தொடர்பில் பலத்த கேள்வியை அனைவரிடத்திலும் ஏற்படுத்தியுள்ளது.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

## ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான கபில நுவன் அத்துக்கோரள மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற கணித, விஞ்ஞான மற்றும் தகவல் தொழிநுட்ப பாட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கும் சட்டரீதியாக வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவசியமான பொறிமுறையொன்றை ஏற்படுத்தல் வேண்டும் என்று இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள தெரிவித்தார்.

2021ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் நடைமுறைப்படுத்தவுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகள் இதன்போது குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி, ஒரு பிரதேச செயலகப்பிரிவில் இரண்டு மைதானங்கள் என்றடிப்படையில் மாவட்டத்தில் 22 மைதானங்கள் அபிவிருத்தி ,சியபத வீடமைப்பு திட்டம் , காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல், காடழிப்பை தடுத்தல் உட்பட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், எம்.எஸ்.தௌபீக் , மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க,திணைக்கள தலைவர்கள், பிரதேச அரசியல் தலைமைகள் , திணைக்கள தலைவர்கள்,முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் 2,625 கொரோனாத் தொற்றாளர்கள்

காரைதீவு குறூப் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்களின் எண்ணிக்கை 2600 ஐ தாண்டியுள்ளது.நேற்றையதினம் (09) செவ்வாய்க்கிழமை 2625 ஆகியது. அதேவேளை கல்முனைப் பிராந்தியம் 1275 ஆகியது. கல்முனைப் பிராந்தியத்துள் வரும் அக்கரைப்பற்று பிரதான சந்தை மூலமாக ஏற்பட்ட உபகொத்தணிப் பரவலும் 1200 த்தாண்டியது. அந்த உப கொத்தணியில் இதுவரை 1,218 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்தமார்ச்மாதமிருந்து பேலியகொடை மூலமாக இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 1275பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 625பேரும் திருமலை மாவட்டத்தில் 496 பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 206 பேருமாக 2,602 பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர்.



பேருவளைத் தொகுதிக்கான (2021) ஐக்கிய மக்கள் சக்தியின் இணை அமைப்பாளராக முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாஸவினால் அண்மையில் வழங்கி வைக்கப் பட்டபோது எடுத்த படம்.

# அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த பேருரையும் நூல் வெளியீடும்

அமரர் இர. சிவலிங்கத்தின் 21ஆவது ஞாபகார்த்த பேருரையும் நூல் வெளியீடும் வெள்ளவத்தை, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை பெ. இராதாகிருஷ்ணனும், தலைமையுரையை எம். வாமதேவனும் ஆற்றவுள்ளதுடன் பேராசிரியர் தை. தனராஜ் பேருரையாளரை அறிமுகப்படுத்துகின்றார். இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளர் எம். கேசவராஜ் கொவிட் 19 மலையக சமுதாயத்தின் மீதான சமூக, பொருளாதார விளைவுகள் எனும் தலைப்பில் நினைவுப் பேறுரையாற்றவுள்ளார். இந்நிகழ்வில் மலையக எழுத்தாளர் மன்றத்தின் தலைவரான எம். வாமதேவன் எழுதிய குன்றிலிருந்து கோட்டைக்கு நூல் வெளியீட்டுரையை எஸ். தெளிவத்தை ஜோசப் ஆற்றவுள்ளார்.

கருத்துரையை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் வி. சிவஞானசோதி, எழுத்தாளர் எம். திலகராஜ், சமூக ஆய்வாளர் மாதவகலா ஸ்ரீதரன், தேசிய கல்வி நிறுவகத்தின் உதவி விரிவுரையாளர் திருமதி தாஹிர் நூருல் இஸ்ரா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.





கொழும்பு 2, T. B ஜாயா ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆதரவில் புதிய தகவல் தொழில் நுட்பக்கூடம் மற்றும் SMART வகுப்பறை என்பவற்றின் திறப்புவிழா அண்மையில் பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம் . மன்ஸில் தலைமையில் நடைபெற்றது.விழாவின் பிரதம அதிதியாக கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான எம். ஷரப்டீன் மற்றும் விசேட அதிதியாக கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.என். சில்வா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். Covid 19 நிலைமை காரணமாக பொருளாதார ரீதியாக பாதிப்புக்குள்ளான 120 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான காரியாலயத்திற்கு 500 மி.லீ. கொள்ளளவு கொண்ட கிருமி நீக்கித் திரவ (Hand Sanitizer) போத்தல்களை வழங்கல்**

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான காரியாலயத்திற்கு 500 மி.லீ. கொள்ளளவு கொண்ட கிருமி நீக்கித்திரவ (Hand Sanitizer) போத்தல்களை வழங்கலுக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்படுத்தும் நிறுவனமாக செயற்படும்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2021.02.10 ஆம் திகதியிலிருந்து 2021.02.23 ஆம் திகதி வரை 09.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா. 2,500 (வட் வரிகளுக்கு உட்பட்ட) 90 நாட்கள் செல்லுபடியாகும் காசுக்கட்டளையுடன்** எழுத்து மூல விண்ணப்பத்தை **பணிப்பாளர் (கட்டுமானம்), வழங்கல் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 4 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல. 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள காரியாலயத்திற்கு** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (IIT) இன் சோதனை சான்றிதழ் மற்றும் தேசிய மருத்துவ ஒழுங்குமுறை ஆணையத்தின் (NMRA) பதிவு சான்றிதழ் ஆகியவற்றுடன் கிருமி நீக்கித் திரவ (Hand Sanitizer) 500 மி.லீ. போத்தல்களின் மாதிரியை மனுதாரர் மதிப்பீட்டு நோக்கத்திற்காக மனுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | விளக்கம் | அலகு | மொத்த அளவு | மனுக்காப்புறுதி (ரூபா.) |
|---|---|---|---|---|
| RDA/DPR/SHS/2021/29 | கிருமி நீக்கித் திரவ (Hand Sanitizer) போத்தல்களை வழங்கல் (500 மி.லீ) | Nos | 5000 | 25,000 |

06. அனைத்து மனுக்களும் 90 கலண்டர் தினங்கள் செல்லுபடியாகும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மனுக்காப்புறுதியுடன் 25.05.2021 ஆம் திகதி வரை செல்லுபடியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதிகள் இணைக்கப்படாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் 2021.02.24 ஆம் திகதி 14.00 மணித்தியாலங்களுக்கு முன் **பணிப்பாளர் (வழங்கல்), 04 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல. 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. மேலதிக விபரங்களுக்கு **பணிப்பாளர் (வழங்கல்), வீதி அபிவிருத்தி அதிகார சபை ஐ தொடர்பு கொள்ளவும். தொலைபேசி :- 011-2046481 / 011-2884790**

மின்னஞ்சல்: dirprorda@gmail.com

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் சபை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர", இல. 216,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை.**



**ஊவா மாகாண**
**வீதி அபிவிருத்தி திணைக்களம் பதுளை**

## பிழைதிருத்தம்

2021.02.04 அன்று தினமின மற்றும் 2021.02.04 அன்று தினகரன் மற்றும் டெய்லிநியூஸ் பத்திரிகையில் வெளியான அறிவிப்பின் தொடரிலக்கம் 29,30 கீழேயுள்ளவாறு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

தொடரிலக்கம் 29 கீழாக பிரசுரமான முதலாம் கைத்தொழிலில் மீளளிக்கப்படும் விலைமனு பிணை வைப்புத் தொகை ரூ.65000.00, விலைமனு படிவக் கட்டணம் ரூ.3500, தகைமைபெறும் CIDA தரம்/வகுதி (வீதி நிர்மாணிப்பு) C6 மற்றும் C5 ஆக இருத்தல் வேண்டும்.

தொடரிலக்கம் 30 கீழாக வெளியான கைத்தொழிலில், மீளளிக்கப்படும் விலைமனு பிணை வைப்புத் தொகை ரூ.55000.00, விலைமனுப் படிவக் கட்டணம் ரூ.3000.00, தகுதிபெறும் CIDA தரம்/வகுதி (வீதி நிர்மாணிப்பு) C6 மற்றும் C5 ஆக இருத்தல் வேண்டும்.

மேலும், அனைத்து கைத்தொழில்களிலும் தகைமைபெறும் எல்லை CIDA தரம்/வகுதி (வீதி நிர்மாணிப்பு) C8 என்பது, C8 மற்றும் C7 எனவும், C7 என்பது C7 மற்றும் C6 எனவும், C6 என்பது C6 மற்றும் C5 எனவும் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள/அமைச்சு பெறுகைக்குழு,**
**ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் பதுளை.**
**055-2229626/0552225570.**



## பெறுகை அறிவித்தல்

நாரம்மல பிரதேச சபையின் புதிய சபை கட்டிட அலுவலகத்தை கணனிமயப்படுத்தல் மற்றும் பாதுகாப்புக் கமிரா வலையமைப்பை நிறுவுவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது. இது தொடர்பான அனைத்து விலைமனுப் படிவங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை நாரம்மல பிரதேச சபைக்கு ரூ.1000.00 படிவக்கட்டணத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுப்படிவங்கள் திறக்கப்படுவது 2021.02.24 அன்று பி.ப.12.30 வரை மேற்கொள்ளப்படுவதுடன் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு விலைமனு பெற்றுக்கொள்வது முடிவடைந்தவுடன் அன்றைய தினமே பி.ப.2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

(வேலைத்தளத்தைப் பரீட்சித்தல் மற்றும் மேலதிக விபரங்களுக்கு 037-2249275/0374947457 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து தொழில்நுட்ப அலுவலரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**செயலாளர்,**
**நாரம்மல பிரதேச சபை,**
**நாரம்மல.**



**இலங்கை சோசலிசக் குடியரசு**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**(துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு)**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கப்பல்களை "வாடகைக்கு வழங்குதல்" அல்லது "வணிக முகாமைத்துவத்திற்கு" வழங்குவதற்கான அழைப்பு

## (Mv. Ceylon Breeze & Mv. Ceylon Princess)

இலங்கை கப்பல் கூட்டுத்தாபன லிமிடெட் இன் அமைச்சின் திணைக்களத்தின் மூலம் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கல் குழுவினால் (SCAPC) வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்காக இரு கப்பல் அல்லது அதில் ஒன்று (Mv. Ceylon Breeze IMO No, 9734563) மற்றும் (Mv. Ceylon Princess IMO No.9734575) வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் "(IFB No.CSC/2021/T/TC/CB&CP) மற்றும் "வணிக முகாமைத்துவம் (IFB No.CSC/2021/T/CM/CB&CP) மேற்கொள்வதற்கான அங்கீகாரம் பெற்ற கப்பல்களை வாடகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் மற்றும் வணிக முகாமைத்துவ நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### நிபந்தனைகள்

1. கப்பல்களை செலுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் திறக்கப்படும். (தெரிவு செய்யப்பட்டதன் பின் காலம் குறைக்கப்படும்.)

   அ. **Mv. Ceylon Princess** 07-16 ஏப்ரல் 2021

   ஆ. **Mv. Ceylon Breeze** 12-21 ஏப்ரல் 2021

2. பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்கள் : இரு கப்பல்களுக்கும் புத்தளம் துறைமுக நங்கூரமிடும் இடம் / கொழும்பு துறைமுக வெளிப்புற நங்கூரமிடும் இடம்.

3. மீள வழங்க வேண்டிய இடம் : **Mv. Ceylon Breeze** கிழக்கு ஆபிரிக்கா அல்லது இந்தியாவின் மேற்கு கடற்கரை அல்லது சிங்கப்பூர்
   **Mv. Ceylon Princess** இந்தியாவின் கிழக்கு கடற்கரை

4. இரு கப்பல்களுக்கான செலுத்திப்பார்க்கும் காலம் 2021 ஆகஸ்ட் நடுப்பகுதி ஆகும்.

5. கப்பல்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் பரிந்துரையின் படி வாடகைக்கு பெற்றுக் கொள்ளுபவரினால் 15 நாட்களுக்கு முன் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் பெயரிடப்பட்ட வங்கி கணக்கு /கணக்குகளுக்கு மேற்கொள்ள வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர் அல்லது மனுதாரர்கள் பரஸ்பரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட அமலாக்க ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும். ("வணிக முகாமைத்துவ ஒப்பந்தம்" அல்லது "வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம்" என்பவற்றிற்கு பொருந்தும் வகையில்) இவ்விரு சந்தர்ப்பங்களிலும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளும் தரப்பினரின் ஒப்பந்தம், வியாபார மற்றும் சரக்கு விலக்குகளுக்கு உட்பட்டு செலுத்திப்பார்த்தல் உட்பிரிவுகளுடன் திருத்தப்பட்டபடி NYPE93 வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் பிரிவினர் மாதிரியின் படி இடம்பெறும்.

7. வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்படும் நிகர மதிப்பீட்டு பொருளாதார நன்மையைப் பொறுத்து, ஒரு கப்பல் அல்லது இரு கப்பல்களையும் "வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் அல்லது "வணிக முகாமைத்துவங்கள்" தொடர்பில் கிடைக்கும் மனுக்களை தெரிவு செய்யும் உரிமை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு உண்டு. அதனால் "வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்" இற்காக கிடைக்கப்பெறும் மனுக்கள் மற்றும் பின்னர் "வணிக முகாமைத்துவம்" இற்காக பெறப்பட்ட மனுக்கள் அந்த வரிசையில் மதிப்பீடு செய்யப்படும்.

### தகுதி வரம்பு:

1. மனுதாரர்கள் இலங்கையிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்க வேண்டும் மற்றும் பால்டிக் மற்றும் சர்வதேச கடல்சார் சபை (BIMCO) அல்லது பொல்டிக் மாற்றுகை அல்லது வேறு அதைபோன்ற சர்வதேச ரீதியில் அங்கீகாரம் வழங்கப்பட்ட அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர வழங்கல் குழுவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அங்கத்துவத்தை கொண்டிருக்க வேண்டும். அதேபோல Supramax / Ultramax / Panamax உலர் மொத்த வகைகளில், கப்பல்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் / வணிக முகாமைத்துவம் செயற்பாடுகள் தொடர்பில் குறைந்தது மூன்று வருட(03) முன் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.

2. மனுதாரர்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ள அல்லது வணிக முகாமைத்துவத்திற்கு தேவையான படி சேவை வழங்கும் நிறுவனத்தின் இயக்குநரால் கையொப்பமிடப்பட்ட குறைந்தது 03 சேவை கடிதங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

### மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :

கப்பல்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் விவரக்குறிப்புகள் மற்றும் மனு ஆவணங்கள் (பொது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் உள்ளிட்ட பொதுவான மற்றும் மனுதாரர்களுக்கு தேவையான ஆலோசனைகள் உள்ளடங்கிய இரண்டு பத்திரங்கள்) மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும். www.cscl.lk (கட்டண செலுத்துகையின்றி)

### தொலைபேசி மூலமான மனுக்கள் தொடர்பான முழுமையான கலந்துரையாடல்

மனுக்கள் தொடர்பான தொலைபேசி மூலமான கலந்துரையாடல் 2021 மார்ச் 04 ஆம் திகதி பி.ப 01.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்கைப் விலாசத்தின் மூலம் நடைபெறும். CSC-IT CSC (மின்னஞ்சல் முகவரி: cscl@cscl.lk)

### மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் மற்றும் மனுக்கள் திறக்கப்படும் நேரம் :

2021 மார்ச் 22 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 24 ஆம் திகதி வரை தேசிய நேரத்தின் படி மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரை இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்திற்கு விவரங்களுடன் மனு தலைவர், அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கல் குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு கொழும்பு 00100, இலங்கை எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். chatcom@cscl.lk மனுக்கோரல் நேரம் நிறைவடைந்த பின் தேசிய நேரமான பி.ப 03.00 மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

மனுக்களை அனுப்பிவைப்பதற்காக இரண்டு வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மின்னஞ்சல் மூலம் அனுப்பும் போது விடயப்பரப்பை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனேயே மனுக்கள் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

### மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

| | | | |
|---|---|---|---|
| முகாமையாளர் | : வாடகைக்கு வழங்குதல் மற்றும் பொறுப்பான நிறுவனம் | முகாமையாளர் | : வாடகைக்கு வழங்குதல் மற்றும் பொறுப்பான நிறுவனம் |
| தொலைபேசி இலக்கம் | : +94 710215702 | தொலைபேசி இலக்கம் | : +94 715656715 |
| மின்னஞ்சல் | : dantha@cscl.lk | மின்னஞ்சல் | : saman@cscl.lk |

**தலைவர்**
**அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கல் குழு**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு**
**கொழும்பு 00100**
**இலங்கை**



# சொந்த மண்ணில் இந்தியாவுக்கு ஏமாற்றம்: இங்கிலாந்து 227 ஓட்டங்களால் அபார வெற்றி

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 227 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.







இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 578 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜோ ரூட் 218 ஓட்டங்களையும் சிப்ளி 87 ஓட்டங்களையும் ஸ்டோக்ஸ் 82 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், பும்ரா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் இசாந் சர்மா மற்றும் நதீம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 337 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரிஷப் பந்த் 91 ஓட்டங்களையும் வொஷிங்டன் சுந்தர் ஆட்டமிழக்காது 85 ஓட்டங்களையும் புஜாரா 73 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டொம் பெஸ் 4 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் அண்டர்சன், ஜொப்ரா ஆர்செர மற்றும் ஜெக் லீச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.



இதனையடுத்து 241 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 178 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா அணிக்கு 420 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது இங்கிலாந்து அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரூட் 40 ஓட்டங்களையும் ஒலீ போப் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், அஸ்வின் 6 விக்கெட்டுகளையும் நதீம் 2 விக்கெட்டுகளையும் இசாந் சர்மா மற்றும் பும்ரா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 420 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 187 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 227 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன்போது அணியின்அதிகப்பட்சஓட்டங்களாக, விராட் கோஹ்லி 72 ஓட்டங்களையும் சுப்மான் கில் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஜெக் லீச் 4 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் எண்டர்சன் 3 விக்கெட்டுகளையும் டோமினிக் பெஸ் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக, முதல் இன்னிங்ஸில் 218 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட ஜோ ரூட் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 13ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ளது.

## திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக் கூட்டம்

**திருகோணமலை குறூப் நிருபர்**

2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக்கூட்டம் பெப்ரவரி 20 ஆம் திகதி சர்வோதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.இக்கூட்டத்தில் இலங்கை உதைபந்தாட்ட சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர்,இதற்கு முன்னர் ஏழு உதைபந்தாட்டக் கழகங்கள் மாத்திரமே இப் பொது கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான தகுதியை பெற்றிருந்தன. ஆனால், முதலாவது முறையாக மேலும் ஒன்பது கழகங்கள் இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதியை பெறுகின்றன.

இக்கூட்டத்தின் போது திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கிற்கான உத்தியோகத்தர்கள் தெரிவு இடம் பெறவிருப்பது ஓர் சிறப்பம்சமாக அமைகின்றது.

2001ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை ஒரே தலைவரினதும் ஒரே செயலாளரினதும் தலைமையில் இயங்கிய திருகோணமலை உதைபந்தாட்ட லீக் சிறிது காலம் செயற்றிறனற்று இருந்ததனால் அது லீக் எனும் அந்தஸ்த்தை இழந்திருந்நது. ஆகவே இந்த லீக்கிற்காக 2018ஆம் ஆண்டு இலங்கை உதைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் அநுர டி சில்வாவினால் இடைக்கால நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டருந்தது.

## யாழ்.றோயல் அணி 3 விக்கெட்டினால் வெற்றி

**(யாழ்.விளையாட்டு நிருபர்)**

ஞானம் பெயின்ரஸ் சம்பியன் கிண்ணத் துக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்.றோயல் அணி,3 விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.றோயல் அணியை எதிர்த்து சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி துடுப்பெடுத்து விளையாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி 19.5 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அன்புஜன் 36 ஓட்டங்களையும் பிரிந்தாபன் 28 ஓட்டங்களையும்பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.றோயல் அணி சார்பில் , பிரசன்னா, பிரிய லக்சன், ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை, வீழ்த்தினர். பதிலுக்கு 106ஓட்டங்களைப் பெற்றால்





வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்து விளையாடிய யாழ்.றோயல் அணியினர் 17.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழத்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கௌதமன் 31 ஓட்டங்களையும், சந்தோஸ் 23 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி சார்பில் யதுஷன் 3 விக்கெட்டுக்களையும், கஜனான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக யாழ்.றோயல் அணி வீரர் பிரசன்னா தெரிவானார்.

## பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கு கொரோனா முகாமையாளர் நியமனம்

பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கு என பிரத்தியேகமாக கொரோனா வைரஸ் தொடர்பில் முகாமையாளர் ஒருவரை நியமித்து வருடாந்த பெரும் சமர் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.



போட்டிகள் நடைபெறுகின்ற மைதானத்தில் போட்டிகளை நடத்துவதற்கு சுகாதார அதிகாரிகளின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதும், பார்வையாளர்கள் இன்றி போட்டியை நடத்துவது கட்டாயம் எனவும் கல்வி அமைச்சின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு பணிப்பாளருமான தயா பண்டார, தினமின பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்திலான விளையாட்டு நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றிக்கையில் கிரிக்கெட் விளையாட்டானது இரண்டாவது பிரிவில் இடம்பெற்றிருந்தது. அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சின் விதிமுறைகளைப் பின்பற்றி பாடசாலை கிரிக்கெட் போட்டிகளை ஆரம்பிக்கலாம் என அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தவும், வைரஸின் தாக்கத்தை விரைவில் இனங்காணவும் ஒவ்வொரு அணியிலும் கொரோனா சம்பந்தமாக பிரத்தியேக முகாமையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 13 வயதுக்குட்பட்ட பிரிவில் சுமார் 600 பாடசாலைகளும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் 248 பாடசாலைகளும் கிரிக்கெட் விளையாடி வருகின்றன.

இதில் சிறப்பம்சம் என்னவெனில் ஒவ்வொரு வருடத்தின் முற்பகுதியிலும், நாட்டிள் ஒவ்வொரு நகரங்களிலும் உள்ள முன்னணி கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் பெரும் சமர்கள் நடைபெற்று வருகின்றன.

கொரோனா வைரஸின் தாக்கம் இன்னும் குறைவடையாத காரணத்தால் இம்முறை பெரும் சமிர்களில் பார்வையாளர்களோ, பாடசாலை மாணவர்களோ அனுமதிக்கபட மாட்டார்கள் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் எந்தவொரு பாடசாலை மட்ட விளையாட்டு போட்டியையும் நடத்த முடியாது என கல்வி அமைச்சு தடை விதித்திருந்ததுடன், கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் மீண்டும் பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்ற சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவை வயிட் வோஷ் செய்தது பாகிஸ்தான் அணி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி 95 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.




இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, பாகிஸ்தான் அணி 20 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ராவல்பிண்டி மைதானத்தில் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 272 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பாஹீம் அஷ்ரப் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும் பாபர் அசாம் 77 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில், நோட்ஜே 5 விக்கெட்டுகளையும் மஹாராஜ் 3 விக்கெட்டுகளையும் முல்டர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 201 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பவுமா ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் மல்டர் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஹசன் அலி 5 விக்கெட்டுகளையும் ஷாயின் ஷா அப்ரிடி, நவுமான் அலி மற்றும் பஹிம் அஷ்ரப் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 71 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, 298 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.இதனால்தென்னாபிரிக்கா அணிக்கு 370 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களையும் நவுமன் அலி 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில், ஜோர்ஜ் லிண்டே 5 விக்கெட்டுகளையும் மஹாராஜ் 3 விக்கெட்டுகளையும் ரபாடா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 370 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 274 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 95 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹெய்டன் மார்கிரம் 108 ஓட்டங்களையும் டெம்பா பவுமா 61 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஹசன் அலி 5 விக்கெட்டுகளையும் ஷஹீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுகளையும் யாசிர் ஷா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 பெப்ரவரி மாதம் 10ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.